பக்கங்கள்: பதினாறு

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 ஆனி 05 வெள்ளிக்கிழமை (19.06.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 205

# குடாநாட்டின் அபிவிருத்திக்கு பல மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு

## பஸில் ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்ற விசேட கூட்டத்தில்





படங்கள்: கொழும்பு இணையத்தளம்

யாழ்ப்பாணம், ஜூன் 19

யாழ்ப்பாண மாவட்டத்தின் அபிவிருத்திக்கும் உள்கட்டுமானப் பணிகளை விரைந்து ஆறுமாத காலத்தில் செய்து முடிப் பதற்கான செயல் திட்டங்களுக்கும் பல மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டது.

வடக்கின் மீள்குடியமர்வு மற்றும் அபிவிருத்திக்கான ஜனாதிபதி செயலணியின் தலைவர் பஸில் ராஜபக்ஷ-

யாழ். நூலக கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்ற செயலணியின் விசேட கூட்டத்தில் வைத்து இந்த நிதி ஒதுக்கீடுகளை அறிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து பொதுமக்கள் வாகனங்களில், பாதுகாப்புப் படையினரின் வழித்துணையுடன் ஏ-9 வீதி ஊடாக பயணம் மேற்கொள்வதற்கு உடனடியாக ஏற்பாடு செய்யப்படும் என்றும் ஜனாதிபதி செயலணியின் தலைவர் உறுதி அளித்தார். (16 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் தலைவர் பிரபாகரன் உயிரிழந்துவிட்டார் என்று அவர்களின் புலனாய்வுத்துறை ஊர்ஜிதம்



சென்னை, ஜூன் 19

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வே.பிரபாகரன் வீரச்சாவு அடைந்துவிட்டார் என்பதை அந்த அமைப்பின் புலனாய்வுத் துறையின் வெளியகப் பணிப் பிரிவின் பொறுப்பாளர் கதிர்காமத் தம்பி அறிவழகன் செய்திக்குறிப்பு ஒன்றில் ஒப்புக்கொண்டிருக்கிறார்.

இணையத்தளம் ஒன்றை மேற்கோள் காட்டி 'த ஹிண்டு' பத்திரிகை இந்த விவரத்தை வெளியிட்டுள்ளது. அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மோதலுக்கு நடுவில் தமிழீழத் தேசியத் தலைவரைப் பாதுகாப்பான இடத்தை நோக்கி நகர்த்தும் முயற்சிகள் தொடர்பான இறுதி நேரச் சம்பவங்கள் குறித்த தகவல்களை நன்கு அறிந்த - தற்போது பாதுகாப்பான இடங்களை அடைந்துள்ள - தமது புலனாய்வு உறுப்பினர்கள், இலங்கைப் படைத்துறையின் உயர் பீடத்துடன் தொடர்புடைய தமது தகவலாளர்கள் ஆகியோர் தமது தலைவரின் வீரச்சாவை இப்போது உறுதிப்படுத்தியுள்ளனர் என அவர் தமது நேற்றைய அறிக்கையில் (16 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவுக்குச் செல்ல கூட்டமைப்புக்கு அனுமதி

கொழும்பு, ஜூன் 19

யாழ். மாநகரசபை மற்றும் வவுனியா நகரசபைத் தேர்தல்கள் தொடர்பான பணிகளை மேற்கொள்வதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் வவுனியாவுக்கும் யாழ்ப்பாணத்துக்கும் செல்ல பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.

இந்த அனுமதி தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜாவுக்கு (16 ஆம் பக்கம் பார்க்க)

கல்விச்சுடர் உள்ளே

தரம் 4 மாணவர்களுக்கான வழிகாட்டல் வினாத்தாள்

## தமிழினி நீதிமன்றில் ஆஜர்

கொழும்பு, ஜூன் 19

தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் அரசியல் பிரிவுப் பொறுப்பாளராகப் பணியாற்றியவர் என்று கூறப்படும் தமிழினி (சிவசுப்பிரமணியம் சிவாதை) நேற்று முன்தினம் மாலை கொழும்பு பிரதம நீதிவான் நீதிமன்றில் நீதிவான் நிஷாந்த ஹப்பு ஆராய்ச்சி முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார். குற்றப் புலனாய்வுப் பொலிஸாரால் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட அவரை தொடர்ந்து தடுத்து வைத்து விசாரிப்பதற்கான அனுமதியை நீதிவான் வழங்கினார். (சி)

# நலன்புரி முகாம்களுக்கு எம்.பிக்கள் செல்வதற்கான உரிமையை ஏற்குமாறு பிரதம நீதியரசர் வலியுறுத்து

## எம்.பிக்கள் ஐவரின் மனு மீதான விசாரணையின்போது

கொழும்பு, ஜூன் 19

வடக்கில் பல லட்சம் தமிழ் அகதிகள் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் நலன்புரி மையங்களுக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேரில் விஜயம் செய்து பார்வையிடுவதற்கான உரிமையை ஏற்றுச் செயற்படுமாறு அரசுத் தரப்புக்கு வற்புறுத்திச் சுட்டிக்காட்டியுள்ள பிரதம நீதியரசர் அசோகா என். டி சில்வா, அத்தகைய அனுமதியை வழங்குவதற்கான ஏற்பாடுகள் குறித்து அரசுத் தரப்புடன் பேசி, நீதிமன்றுக்கு அதுபற்றிய விடயங்களைத் தெளிவுபடுத்துமாறு சட்டமா அதிபருக்குப் பணிப்புரையும் விடுத்தார்.

நாட்டுக்குள் இடம்பெயர்ந்துள்ள அகதிகள் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் முகாம்களுக்கு நேரில் சென்று நிலைமைகளைப் பார்வையிடுவதற்கு தங்களை அனுமதிக்குமாறு பாதுகாப்புத் தரப்பினருக்கு உத்தரவிட வேண்டும் என்று கோரி எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த ஐந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள்கூட்டாகத் தாக்கல் செய்திருந்த அடிப்படை உரிமைமீறல் மனுவை நேற்றுப் (15 ஆம் பக்கம் பார்க்க)

## 'நாடு கடந்த தமிழீழ அரசு' நடவடிக்கையுடன் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தொடர்புபடவில்லை

### ஸ்ரீகாந்தா எம்.பி. சொல்கிறார்

யாழ்ப்பாணம், ஜூன் 19

'நாடுகடந்த தமிழீழ அரசு' என்ற விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எந்தச் சம்பந்தமும் கிடையாது என்று நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி என். ஸ்ரீகாந்தா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் நேற்று வெளியிட்ட செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:- (16 ஆம் பக்கம் பார்க்க)

## இடம்பெயர்ந்த மக்கள் விரைவில் மீளக்குடியமர்த்தப்படுவர் என்கிறார் பஸில்

யாழ்ப்பாணம், ஜூன் 19

கிழக்கில் இடம்பெயர்ந்த மக்களை மீள் குடியமர்த்தியது போன்று, வடக்கிலும் இடம் பெயர்ந்த மக்கள் அவர்களின் சொந்த இடங்களில் விரைவில் மீளக்குடியமர்த்தப் படுவார்கள். அதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுத்து வருகின்றது.

வடக்கின் மீள்குடியமர்வு மற்றும் அபிவிருத்திக்குமான ஜனாதிபதி செயலணியின் தலைவரும் ஜனாதிபதியின் ஆலோசகருமான பஸில் ராஜபக்ஷ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ். நூலக கேட்போர் மண்டபத்தில் (16 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## மலரும் பொன்னரும்பு அலகு ஆரம்பம்

அச்சுவேலி, ஜூன் 19

அச்சுவேலி இலங்கை வங்கிக் கிளையின் ''மலரும் பொன்னரும்பு அலகு'' மாணவர் சேமிப்பு பிரிவு இடைக்காடு மகாவித்தியாலயத்திலும், புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயத்திலும் இன்று வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்படவுள்ளது.

மலரும் பொன்னரும்பு அலகு களை பிரதம விருந்தினராக கலந்து கொள்ளும் இலங்கை வங்கியின் வடபிராந்திய செயற்பாட்டு முகாமையாளர் ஆர்.ஜெயேந்திரா ஆரம்பித்து வைக்கவுள்ளார். (1-11)

## தரம் 5 பயிற்சிப் பரீட்சை நாளை பாடசாலைகளில்

மண்டுவில், ஜூன் 19

மாகாணக் கல்வித் திணைக்கள அனுசரணையுடன் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை மாணவர்களிற்கான நான்காவது பயிற்சிப் பரீட்சை நாளை சனிக்கிழமை சகல பாடசாலைகளிலும் நடைபெறவுள்ளது.

தென்மராட்சியில் மேற்படி பரீட்சை தினத்தன்று நான்கு நிலையங்களில் வினாப் பத்திரப் பொதிகள் வழங்கப்படும்.

பாடசாலைகள் தமக்கு ஒதுக்கப்பட்ட நிலையங்களில் வினாப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளுமாறு தென்மராட்சிக் கல்வி வலய ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் த.ஸ்ரீஸ்கந்தராஜா அறிவித்துள்ளார். (209-59)

**வாடகைக்கு விடப்படும்**

நிறுவனங்களுக்கும், ஆண்களுக்குமான வீடு, அறைகள் Brown Road முதலாம் ஒழுங்கையில் வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 0779578244.

**சொகுசு வான் சேவை**

கொடிகாமத்தில் இருந்து கைதடி, கோப்பாய் வீதியூடாக கல்வியற் கல்லூரி, கோப்பாய் ஆசிரிய கலாசாலை ஊடாக பல்கலைக்கழகம் வரை காலை 7.30 இற்குச் சென்று மாலை 4.00 இற்குத் திரும்பி வரக்கூடியவாறு Hiace வான் ஒழுங்கு செய்து தரப்படும். தொடர்புகளுக்கு 0779578244 - நாடவும்.

**மணி விழா நாயகனைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்**

உயர்திரு நா. சத்தியநாதன் (B.A. L.L.B., Dip.In.Edu., PDE, M.M.Ed.)

06.03.2009 அன்று தனது 60 ஆவது அகவையைப் பூர்த்தி செய்த சாவகச்சேரி கோட்டக்கல்வி அலுவலர் உயர்திரு நா.சத்தியநாதன் அவர்கள் தமது ஓய்வுக் காலத்தை சிறப்பாகக் கழித்து நீடூழி காலம் வாழ்கவென மனதார வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/ கைதடி குருசாமி வித்தியாலயம், கைதடி.

**பாராட்டி வரவேற்கின்றோம்**

யா/வீரசிங்கம் மகாவித்தியாலயத்தின் அதிபராகப் பணியாற்றி, சாவகச்சேரி கோட்டக்கல்வி அலுவலராகப் பதவி உயர்வு பெற்றுள்ள

**உயர்திரு கு. சிவானந்தம்**

அவர்கள் தன் ஈடில்லாப் பணிகளால் இதயங்களை வெற்றி கொள்ளவும், இன்னும் பல உயர்வுகளைக் காணவும், இறையருள் வேண்டி வாழ்த்துகின்றோம்.

யா/கைதடி விக்னேஸ்வர வித்தியாலயம், கைதடி. அதிபர், ஆசிரியர்கள்.

# ஐ.நா. செயலருக்கு எதிராக நியூயோர்க்கில் ஆர்ப்பாட்டம்

## புலம்பெயர்ந்த தமிழர்கள் நடத்தினர்

கொழும்பு, ஜூன் 19

ஐ.நா. செயலாளர் நாயகம் பான்-கீ-மூனுக்கு எதிராக கடந்த புதன்கிழமை, நியூயோர்க்கில் புலம்பெயர்ந்த தமிழர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

நியூயோர்க்கில் உள்ள ஹோட்டல் ஒன்றில் ஐ.நா. செயலாளர் நாயகத்திற்கும், அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி பில் கிளின்டனுக்கும் சர்வதேச மனிதாபிமான விருது வழங்கும் நிகழ்வு இடம்பெற்ற வேளை,அந்த ஹோட்டலுக்கு வெளியே ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றுள்ளன.

''பான்-கீ-மூன், இனப்படுகொலையை மூடிமறைக்கக்கூடாது'', ''முகாம்களை மூடி மக்களை வெளியேற்றவேண்டும்'' என ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்கள் கோஷமெழுப்பியுள்ளனர்.

பின்னர் கருத்துத் தெரிவித்த ஐ.நா. செயலாளர், ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்களின் கவலைகள் மற்றும் இலங்கையில் அகதிகள் எதிர்நோக்கும் சவால்கள் குறித்து தாம் உணர்ந்துள்ளார் எனவும் இதன் காரணமாகவே தாம் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டார் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

## அகதிகள் தினத்தையொட்டி மரதன் ஓட்டப்போட்டி

யாழ்ப்பாணம், ஜூன் 19

அகதிகள் தினத்தையொட்டி அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் ஜூன் 20 ஆம் திகதி மரதன் ஓட்டப் போட்டியொன்றை ஏற்பாடு செய்துள்ளது.

அன்றைய தினம் மரதன் ஓட்டம் காலை 7 மணிக்கு கரவெட்டி பிரதேச செயலக காரியாலயத்திலிருந்து ஆரம்பமாகும். இதைத் தொடர்ந்து பரிசு வழங்கும் நிகழ்வு உடுப்பிட்டி இமையாணன் விளையாட்டுக் கழக மைதானத்தில் காலை 9.30 மணிக்கு இடம்பெறும். யாழ்ப்பாணம் யு.என்.எச்.சி. ஆர். அலுவலகத்தலைமை அதிகாரி மரியா தெரெஸியா இட்டாஸ்சுவெற்றே அம்மையார் கௌரவ விருந்தினராக கலந்து கொள்வார்.

## இறுதியாட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 19

யாழ். பல்கலைக்கழக கிரிக்கெட் அணி விளையாட்டு அவையுடன் இணைந்து நடத்திய பல்கலைக்கழக சமூகத்திற்கிடையிலான 20:20 கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது. இந் நிகழ்வில் பல்கலைக்கழக வணிகத்துறைத் தலைவர் திரு கே.கே.அருள்வேல் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்வார்.

இந்த இறுதிப் போட்டியில் யாழ். பல்கலைக்கழகஅணியினை எதிர்த்து யாழ். பல்கலைக்கழக உடற்கல்வி பழைய மாணவர்அணிமோதவுள்ளது. (1)

## கலாசாரப் பேரவையின் செயற்குழுக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 19

மாவட்டக் கலை கலாசாரப் பேரவையின் மலர் வெளியீடு சம்பந்தமான செயற்குழுக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2.30 மணிக்கு மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்குச் செயற்குழு உறுப்பினர்களைத் தவறாது சமுகமளிக்குமாறு மேலதிக அரசாங்க அதிபர் கேட்டுள்ளார். (1)

## சில பகுதிகளில் நாளை மின்தடை

யாழ்ப்பாணம், ஜூன் 19

திருத்த வேலைகள் காரணமாக நாளை சனிக்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 2 மணிவரை குறிப்பிட்ட இடங்களில் மின்சாரம் தடைப்படும் என இலங்கை மின்சாரசபையின் சுன்னாகக் கிளையினர் தெரிவித்துள்ளனர்.

புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூரர், அச்சுவேலி, ஆவரங்கால், இடைக்காடு, வடமராட்சிப் பிரதேசம் ஆகிய இடங்களில் மின்தடைப்படும் என மேலும் தெரிவித்தனர். (204)

**தமிழர் விடுதலைக் கூட்டணி**

**2009 ஆம் ஆண்டு யாழ்.மாநகரசபை தேர்தலுக்காக வேட்பாளர் விண்ணப்பம் கோரல்**

யாழ்.மாநகர சபை தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட விரும்பும் எமது கட்சியின் ஆதரவாளர்கள், தொண்டர்கள் ஆண், பெண் இரு பாலாரும் தங்களின் சுயவிவரக் கோவையுடன் எமது யாழ்.மாவட்ட தலைமைச் செயலகத்திற்கு 22.06.2009 பி.ப. 4 மணிக்கு முன்னர் நேரில் சமுகந்தருமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

''தந்தை செல்வா அகம்'',
57/48, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

இரா.சங்கையா,
தலைவர் வீ.ஆனந்தசங்கரியின்
செயலாளர்.

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஜூன் 19

சுதுமலை கிழக்கு தாவடி வடக்கு வீரபத்திரர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நாளை சனிக்கிழமை ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து பத்து தினங்கள் உற்சவம் இடம்பெறும். எதிர்வரும் 28 ஆம் திகதி கிராம அருட்பவனி நடைபெறும். (1)

* * *

சுழிபுரம், ஜூன் 19

சங்கானை அரசடி வைரவர் கோயில் அலங்காரத்திருவிழா நாளை சனிக்கிழமை முதல் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

தேர்த்திருவிழா எதிர்வரும் 29 ஆம் திகதி நடைபெறும். அடுத்த நாள் தீர்த்தம் நடைபெறும். தினமும் சுவாமி வீதியுலா வருதல் இடம்பெறும். (1-28)

* * *

சுழிபுரம், ஜூன் 19

சித்தன்கேணி ஸ்ரீ சிதம்பரேஸ்வரர் ஆலய வருடாந்த பெருந்திருவிழா நாளை சனிக்கிழமை பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது. எதிர்வரும் 28 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் அடுத்த நாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். தேர்த்திருவிழா அன்று ஐந்து தேரில் சுவாமிகள் பவனி வரும் காட்சி இடம்பெறும். (1-28)

* * *

யாழ்ப்பாணம், ஜூன் 19

காரைநகர் பண்டத்தரிப்பான் புலம் சிதம்பரேஸ்வரர் ஆலய வருடாந்த பெருந்திருவிழா நாளை சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளது.

இந்த பெருந்திருவிழாவில் எதிர்வரும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பஞ்சரத பவனியும் அன்று இரவு நடேசர் அபிஷேகமும் மறுநாள் திங்கட்கிழமை தீர்த்தோற்சவமும் நடைபெறும். (1-250)

* * *

யாழ்ப்பாணம், ஜூன் 19

காரைநகர் களபூமி திக்கரை முருகமூர்த்தி ஆலய வருடாந்த பெருந்திருவிழாவின் தேர்த் திருவிழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

பெருந்திருவிழா கடந்த 13 ஆம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

தீர்த்தத் திருவிழா எதிர்வரும் திங்கட்கிழமை இடம்பெறும். (1-250)



விநாயகர் சரணம்

**கோண்டாவில் கிழக்கு, ஆசிமட அரசடி விநாயகர் ஆலயம்**
**விரோதி வருட மஹோற்சவம்**
**20.06.2009 - 01.07.2009**

| | | |
|---|---|---|
| 20.06.2009 | சனிக்கிழமை | கொடியேற்றம் பகல் 10.30 மணி |
| 25.06.2009 | வியாழக்கிழமை | பூச்சப்பறம் மாலை 5.00 மணி |
| 26.06.2009 | வெள்ளிக்கிழமை | கைலாயவாகனம் மாலை 5.00 மணி |
| 27.06.2009 | சனிக்கிழமை | வேட்டைத்திருவிழா பகல் 12.00 மணி |
| | | சப்பறம் மாலை 5.00 மணி |
| 28.06.2009 | ஞாயிற்றுக்கிழமை | இரதோற்சவம் காலை 9.30. மணி |
| 29.06.2009 | திங்கட்கிழமை | தீர்த்தோற்சவம் காலை 9.30 மணி |
| | | (ஆனி உத்தரம்) |
| | | கொடியிறக்கம் மாலை 5.00 மணி |
| 30.06.2009 | செவ்வாய்க்கிழமை | திருக்கல்யாணம் மாலை 5.00 மணி (முருகப்பெருமான்) |
| 01.07.2009 | புதன்கிழமை | வைரவர் உற்சவம் மாலை 5.00 மணி |

மஹோற்சவ குரு - ஈசான சிவாச்சாரியார் இ.ரமணீதரக் குருக்கள்
தினமும் காலை - பஞ்சமுக விநாயகருக்கு பஞ்சமுக அர்ச்சனையும்
பகல் மகேஸ்வர பூசையும் நடைபெறும்.
ஆலய நிர்வாகசபை [illegible]

## மரண அறிவித்தல்கள்

### ஆறுமுகம் பிள்ளையம்மா



காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் பிள்ளையம்மா (16.06.2009) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகத்தின் மனைவியும் சுப்பிரமணியதாஸ், செம்பொற்சோதி ஆகியோரின் பாசமிகு தாயும் சிவசாமி, செல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.06.2009) சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினா, நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*17/1, கலைப்புலவர் வீதி,*
*யாழ்ப்பாணம். (பெருமாள் கோயிலடி)*

தகவல்: செம்பொற்சோதி (மகன்).

### மருதப்பு கிருஷ்ணன்



புங்குடுதீவு, 3 ஆம், வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 74/14, ஆத்திசூடி வீதி, கந்தர் மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட மருதப்பு கிருஷ்ணன் 17.06.2009 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மருதப்பு - அன்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான துரைச்சாமி - ஆச்சிமுத்து தம்பதியினரின் மருமகனும் நாகபூஷணியின் (ஓய்வுபெற்ற ஆசிரியை) அன்புக் கணவரும் தேன்மொழி (ஆசிரியை, யா/இந்து மகளிர் கல்லூரி), Dr.ஸ்ரீபாஸ்கரன் (கொத்தாந்தீவு வைத்தியசாலை, புத்தளம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற தையல்நாயகி மற்றும் சற்குணம் (சுவிஸ்), காலஞ்சென்றவர்களான சண்முகலிங்கம், சொர்ணலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் நடராஜா (லண்டன்), பசுபதிப்பிள்ளை (சுவிஸ்), புவனேஸ்வரி (கொழும்பு), சுந்தரலிங்கம் (கொழும்பு), காலஞ்சென்றவர்களான சிவபூசணி, முத்துலிங்கம், சுபாஸ்கரலிங்கம் மற்றும் கணேசலிங்கம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் கிரிதரனின் (கணக்காளர், வலயக் கல்வி அலுவலகம், வடமராட்சி) மாமனும் அனுசாகரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.06.2009) வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

74/14, ஆத்திசூடி வீதி, கந்தர்மடம்,
யாழ்ப்பாணம். தொ.பே. 021 222 7520, 021 222 8297

தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# ஒற்றையாட்சி அரசமைப்பு என்ற சிறைக்குள் தமிழருக்கு நியாயம் கிட்ட வாய்ப்பில்லை

தமிழ் மக்களின் துன்ப துயரங்களுக்குத் தீர்வு காண்பதற்கும், அனைத்து இலங்கையர்களுக்கும் சமத்துவத்தையும் நீதியையும் வழங்கும் அரசியல் தீர்வை எட்டுவதற்கும் இலங்கைக்கு வரலாற்று வாய்ப்பு ஒன்று கிடைத்துள்ளதாக இலங்கைக்கான புதிய அமெரிக்கத் தூதுவர் பற்றீஸியா புட்டெனிஸ் அம்மையார் தெரிவித்திருக்கின்றார்.

நிரந்தர சமாதானத்தை எட்டுவதற்கான இந்த வாய்ப்பைத் தவறவிடக் கூடாது என்றும் அவர் கோரிக்கை விடுத்திருக்கின்றார்.

ஆனால் குறுகிய இனவாத அரசியலுக்கும், அரசியல் சுயலாபத்துக்கும் அப்பால் சென்று, சிறுபான்மையினருக்கு அவர்களின் நீதி, நியாயமான அபிலாஷைகளை நிறைவு செய்யும் - உருப்படியான - தீர்வுத் திட்டம் ஒன்றை வழங்கும் அரசியல் உறுதிப்பாடும், திட சங்கற்பமும், பற்றுறுதியும் தென்னிலங்கை அரசுத் தலைமைக்கு இருந்தால் மட்டுமே, இந்த வரலாற்றுச் சந்தர்ப்பத்தை அது சரிவரப் பயன்படுத்த முடியும்.

ஆனால், தமது அரசியல் நலன்களை முன்நிறுத்தி குறுகிய இன வாதக் கொள்கைப் போக்கில் தங்கியிருக்கும் அரசுத் தலைமைக்கு, சிறுபான்மையினருக்கு நீதியான தீர்வை வழங்கும் தாராளப் போக்கோ, விட்டுக்கொடுத்து நியாயம் செய்யும் பண்பியல்போ அடிப்படையில் இல்லை என்பதால், இந்த வரலாற்று வாய்ப்பு கோட்டைவிடப்படுவது தவிர்க்க முடியாததாக இருக்கும் என்றே தோன்றுகின்றது.

இலங்கை இனப்பிரச்சினைக்கு அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் தீர்வு காணலாம் என்ற ஒரு கதை தென்னிலங்கைத் தரப்பால் மீண்டும் அவிழ்த்து விடப்பட்டிருக்கின்றது.

இருபத்தியொரு வருடங்களுக்கு முன்னர் முறைப்படி - சட்டப்படி - இலங்கை அரசமைப்புக்குள் கொண்டு வரப்பட்ட விடயம் அது. சிறுபான்மையினருக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்கும் நோக்குடன் இந்தியத் தரப்பின் ஈடுபாட்டுடன் கொண்டுவரப்பட்ட அம்சம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

ஆனால், இருபத்தியொரு ஆண்டுகள் கழித்தும் கூடத் தனது தேசத்தின் உயர் சட்டமான அரசமைப்பில் உள்ள அந்த ஏற்பாடுகளை மதிக்கவோ, நடைமுறைப்படுத்தவோ தென்னிலங்கை தயாராக இல்லை - அவை சிறுபான்மையினருக்கு சற்று அதிகாரப் பகிர்வை அளிக்க வசதி செய்வதாக அமைந்திருப்பதால்.

இருபத்தியொரு வருடங்களாக நாட்டின் உயர் சட்டத்தில் உள்ள அம்சத்தை நடைமுறைப்படுத்த மறுத்த கொழும்பு, இப்போது அதனை இனப்பிரச்சினைக்குத் தீர்வாகக் காட்ட முயல்வது வேடிக்கையானது.

சிறுபான்மையினரான தமிழர்களின் எதிர்பார்ப்பு - அவர்களின் அபிலாஷைகளை நிறைவுசெய்யும் ஏற்பாடு - இந்த அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்துக்கும் அப்பாற்பட்டது என்பது வெளிப்படையானது.

இன முரண்பாட்டைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளின் முதற்கட்டமாக வேண்டுமானால் அரசமைப்பிற்கான 13 ஆவது திருத்தம் அமையமுடியும். இதன் மூலம் உண்மையான - முழுமையான - அதிகாரப்பகிர்வுக்கு சாத்தியமேயில்லை என்று அரசியல் ஆய்வாளர்களே தெளிவாகச் சுட்டிக்காட்டியிருப்பதும் கவனிக்கத்தக்கது.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தின் கீழ் நாடாளுமன்றமானது, தான் மாகாணத்துக்கு வழங்கிய - பகிர்ந்த - அற்ப, சொற்ப அதிகாரங்களைக்கூட மீளப் பெற்றுக் கொண்டுவிடமுடியும்.

ஆகவே, மாகாணசபை என்பது உண்மையான சுயாட்சி வடிவமே அல்ல என்று ஆய்வாளர்கள் தெளிவாகச் சுட்டிக்காட்டுகின்றார்கள்.

அதிகாரப் பகிர்வோ, அதிகாரப் பரவலாக்கலோ எதுவானாலும் வடக்கு, கிழக்கில் - தமது பாரம்பரிய தாயகத்தில் - வாழும் இலங்கைத் தமிழர்களுக்கு அவர்களின் நிர்வாக விடயங்களை அவர்களே தீர்மானித்துக் கையாளத்தக்க சுயாட்சி நம்பிக்கையை ஏற்படுத்துவதாக அமையவேண்டும்.

இலங்கை அரசமைப்பின் தற்போதைய ஒற்றையாட்சிக் கட்டமைப்பு என்ற இறுகிய- எஃகு போன்ற - சட்ட அடைப்புக்குள் நின்றுகொண்டு இலங்கைத் தமிழர்களின் அபிலாஷைகளை நிறைவு செய்யும் தீர்வு ஒன்றை எட்டுவது என்பது சாத்தியமானதே அல்ல.

இறுக்கமான - நெகிழ்வற்ற - இலங்கை அரசமைப்பின் சட்ட வரம்புக்குள் தமிழர்களைக் கட்டிப்போட்டு சிறை வைத்துக்கொண்டு நியாயத் தீர்வு ஒன்றைத் தேடுவது பலன் தரக்கூடியதேயல்ல.

இலங்கைத் தமிழர்களைப் பொறுத்தவரை அவர்களின் பங்களிப்போ, சம்மதமோ இன்றி, அவர்கள் மீது பலவந்தமாகத் திணிக்கப்பட்டு, அவர்களைக் கட்டிப்போட்டு சிறைவைத்திருக்கும் இந்த அரசமைப்பின் இறுக்கமான பிடியிலிருந்து வெளியே வந்து, சுயாதீனமாகச் சிந்திக்கத் தென்னிலங்கை முன்வந்தால் மட்டுமே சகல தரப்புகளுக்கும் நியாயமான - நல்லிணக்கத்துடன் கூடிய - நீடித்து நிலைக்கத்தக்க - தீர்வு ஒன்றை எட்ட முடியும்.

தற்போதைய அரசமைப்பு வரம்பு என்ற சிறைக்குள் இருந்துகொண்டு சுயாதீனமான - சுதந்திரமான - தீர்வைத் தேட முயல்வது வெறும் அபத்தமானது: அர்த்தமற்றது.

# இணுவில் ரயில் நிலையத்தில் வசிக்கும் குடும்பங்கள் யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

## தம்மை வெளியேறுமாறு கோரியதை எதிர்த்து

யாழ்ப்பாணம்,ஜூன்19

ரயில் பாதைகளை மீளமைப்புச் செய்வதற்கு வசதியாக அங்கு உள்ளோரை வெளியேறுமாறு அறிவிக்கப்பட்டதை அடுத்து இணுவில் ரயில் நிலையத்தில் குடியிருக்கும் 19 குடும்பங்கள் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்.அலுவலகத்தில் முறைப்பாடு ஒன்றைச் செய்துள்ளன.

உடுவில் பிரதேச செயலருக்கு எதிராக இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வடக்கில் ரயில் பாதைகளைத் திருத்தியமைப்பதற்கு வசதியாக அப்பகுதியில் குடியிருப்பவர்களை இம்மாதம் 20ஆம் திகதிக்கு (நாளை) முன்னர் வெளியேற்றுமாறு அரசாங்கத்தினால் அறிவித்தல் விடுக்கப்பட்டிருந்தது. இந்த அறிவித்தல் பிரதேச செயலர்கள் ஊடாக ரயில் பாதைகளில் குடியிருப்போருக்குத் தெரியப்படுத்தப்பட்டது.

இதனையடுத்து இணுவில் ரயில் நிலையத்தில் குடியிருக்கும் 19 குடும்பங்கள் தம்மை வெளியேறுமாறு உடுவில் பிரதேச செயலரால் விடுக்கப்பட்ட உத்தரவை எதிர்த்து மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

தாம் ஏற்கனவே இடம்பெயர்ந்து இப்பகுதியில் வசித்து வருவதாகவும் உயர் பாதுகாப்பு வலயம் காரணமாகச் சொந்த இடங்களுக்குத் திரும்பமுடியாத நிலை காணப்படுவதாகவும் அந்தக் குடும்பங்கள் தமது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளன.

ரயில் நிலையத்தில் இருந்து வெளியேறித் தாம் வசிப்பதற்கு உரிய வசதிகள் செய்து தரப்படவேண்டும் எனவும் அந்தக் குடும்பங்கள் தமது முறைப்பாட்டில் கோரியுள்ளன.

இந்த விடயம் தொடர்பாக உரிய விசாரணைகளை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கவுள்ளதாக மனித உரிமை ஆணைக்குழுவின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (50-68)

# ரயில் பாதைகளில் இருந்து வெளியேற்றப்படும் மக்களுக்கு மாற்று இருப்பிடங்களுக்கான வசதிகளைச் செய்து கொடுங்கள்

## அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜூன்19

ரயில் பாதைகளில் இருந்து வெளியேற்றப்படும் மக்களின் நிலையை மனிதாபிமான அடிப்படையில் அணுகி அவர்களுக்கான மாற்று இருப்பிட ஏற்பாடுகளைச் செய்து கொடுக்குமாறு யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் யாழ்.அரச அதிபரிடம் கோரியுள்ளது.

இது தொடர்பாக யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் அரச அதிபருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

பல்நெடுங் காலமாகப் பாதிக்கப்பட்டிருந்த யாழ்ப்பாணம் - கொழும்பு ரயில் சேவையை மீள் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது மிகவும் வரவேற்கத்தக்கதாகும்.

இந்த நடவடிக்கையின்போது கடந்த 15 வருடங்களுக்கு மேலாக ரயில் பாதையில் அங்கீகாரமின்றி இடம்பெயர் முகாம்கள் சிலவற்றை அமைத்து வசித்த வருகின்ற 200க்கும் மேற்பட்ட குடும்பங்களை 20ஆம் திகதிக்கு (நாளை) முன்பு அவ்விடங்களில் இருந்து வெளியேறுமாறு பிரதேச செயலர்களால் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருப்பதாகப் பத்திரிகை மற்றும் வானொலி செய்திகள் மூலம் அறியப்படுகின்றது.

ரயில் பாதை மீளமைப்பிற்கு இவர்கள் அங்கிருந்து வெளியேற்றப்பட வேண்டியது ஏற்றுக்கொள்ளக்கூடியுதே. எனினும் வேறு போக்கிடமற்ற இம்மக்களின் நிலையை மனிதாபிமான அடிப்படையில் அனுதாபத்துடன் நோக்கி அவர்களுக்கான மாற்று இருப்பிட ஏற்பாடுகள் செய்து வழங்கவும் அதுவரையும் சிறிதுகால நீடிப்பு வழங்கவும் நடவடிக்கை எடுக்குமாறு தங்களை மிக அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம் - என்றுள்ளது. (50)

# தென்னிலங்கை வர்த்தக அமைப்புகளின் கிளைகள் குடாநாட்டுக்கு விஸ்தரிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்19

குடாநாட்டுக்கு வருகை தந்துள்ள தென்னிலங்கையின் வர்த்தக அமைப்புக்கள் பல தமது வர்த்தக நடவடிக்கைகளை விஸ்தரித்து வருகின்றன.

இந்த வகையில் 'டயலொக்' 'மொபிற்றல்', 'அபான்ஸ்' போன்ற பிரபல நிறுவனங்கள் முதற்கட்டமாக தமது வர்த்தக விஸ்தரிப்புச் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளன.

'அபான்ஸ்' நிறுவனம் சுன்னாகம், சங்கானை, சாவகச்சேரி ஆகிய பிரதேசங்களில் தமது கிளைகளை நிறுவி உள்ளது.

சிங்கர் நிறுவனம் தனது கிளையை சுன்னாகம், யாழ்ப்பாணம் உட்பட ஏனைய பிரதேசங்களிலும் அமைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகிறது.

ஏனைய வர்த்தக அமைப்புக்களும் தமது நிறுவனங்களின் பிரதிநிதிகளை குடாநாட்டிற்கு அனுப்பி உரிய இடங்களைப் பார்வையிட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை- குடாநாட்டு மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு யாழ்.மாவட்டத்தின் பல பாகங்களிலும் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் அமைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஏ-9 பாதையூடாகப் பொருள்கள் எடுத்துவரப்பட்டு கொழும்பு விலைக்கே அவை விற்பனைசெய்யப்படும் என்றும் பரவலாகத் தெரிவிக்கப்படுகின்றது. (68)

# புலமைப் பரிசில், உயர்தரப் பரீட்சைகள் நடைபெறும் திகதிகள் அறிவிப்பு

கொழும்பு,ஜூன்19

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை, ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை ஆகியன நடை பெறவுள்ள திகதிகள் பரீட்சைத் திணைக்களத்தால் அறிவிக்கப்பட்டுள்ளன.

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை ஓகஸ்ட் மாதம் 11ஆம் திகதி தொடக்கம் செப்ரெம்பர் 5ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை ஓகஸ்ட் மாதம் 23ஆம் திகதி நடத்தப்படவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகள் பரீட்சைத் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# கவிதைத் தொகுதி அறிமுக விழா

யாழ்ப்பாணம்,ஜூன்19

அகில இலங்கைக் கலை, இலக்கிய சங்கத்தின் ஏற்பாட்டில் ந.சத்தியபாலனின் கவிதைத் தொகுதி அறிமுக விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்கு துன்னாலை, அல் லையம்பதி, வடிவேலர் மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அகில இலங்கை கலை, இலக்கிய சங்கத்தின் தலைவர் எழுத்தாளர் பொன்.சுகந்தன் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் எழுத்தாளர் குப்பிளான் ஐ.சண்முகன், சித்தாந்தன் ஆகியோர் மதிப்பீட்டுரைகளை நிகழ்த்தவுள்ளனர். (204)

# கனடாவில் உள்ள 200 இலங்கைத் தமிழர்கள் விரைவில் நாடு கடத்தப்படக் கூடிய நிலையில்

மொன்றியல்,ஜூன்19

கனடாவின் மொன்றியல் நகரில் உள்ள 200 இலங்கை அகதிகள், நாடு கடத்தப்படக் கூடிய நிலையை எதிர் நோக்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மொன்றியலில் தமிழர்களுக்காக செயலாற்றி வரும், தமிழர் நடவடிக்கைக் குழுவின் அறிக்கையில் 200 தமிழர்கள் தற்போது இலங்கைக்கு திருப்ப அனுப்பபடும் நிலையை எதிர்நோக்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இலங்கை அகதிகளுக்காகப் பணியாற்றும் கனேடிய சட்டத்தரணியான ஜெரட் வில், கனடாவின் இந்த நடவடிக்கையை கண்டித்துள்ளார்.

கனடா, தமிழர்களை மீண்டும் யுத்த பிரதேசத்திற்கு அனுப்புவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கம் இலங்கையின் உண்மை நிலையை அறிந்திருப்பதால், இந்த நாடுகடத்தலை தடுக்கும் முகமாக விசேட விண்ணப்பங்களை அது பரிசீலிக்கும் என தாம் நம்புவதாகவும் ஜெயராட் வில் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, தமிழர்கள் நாடு கடத்தப்படும் நிலையை தடுக்கும் முகமாக போராட்டங்களை மேற்கொள்ளவும் கனேடியத் தமிழர்கள் ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

இலங்கை அரசாங்கத்தால் புறக்கணிக்கப்பட்டுள்ள நிலையிலேயே தாம் கனடாவிற்கு வந்ததாகவும், எனினும் தற்போது நாடு கடத்தப்படும் நிலையை அடைந்துள்ளதாகவும் நாடு கடத்தப்படவிருக்கும் இலங்கை தமிழரான ரட்ணம்துரை என்பவர் தெரிவித்துள்ளார்.

சர்வதேச சமூகம் தமிழர்கள் இலங்கையில் சுதந்திரமாக வாழமுடியும் என்ற உத்தரவாதத்தை வழங்கும் வரையில் அகதிகளின் நாடுகடத்தல் நடவடிக்கை நிறுத்தப்படவேண்டும் என கனேடிய தமிழ் நடவடிக்கை குழுவின் பேச்சாளரான கமலா ஜெகதீஸ்வரன் தெரிவித்துள்ளார். (50)

## நாளை

| | |
|---|---|
| ஆனி 06 | 20.06.2009 |
| | சனிக்கிழமை |
| திதி: | துவாதசி |
| | மு.ப. 08.27வரை |
| நட்சத்திரம்: | கார்த்திகை |
| | பி.ப.03.45 வரை |

சனிப் பிரதோஷ விரதம்

சுபநேரம்: 0[illegible].54 - 04.24
ராகுகாலம்: 08.54 - 10.24

# தேர்ச்சி மட்டக் கண்காட்சி

யாழ்ப்பாணம்,ஜூன்19

பாடரீதியான தேர்ச்சி மட்ட அடிப்படையிலான கண்காட்சி நிகழ்வு மல்லாகம் மகாவித்தியாலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் நடைபெறவுள்ளது.

இக்கண்காட்சியில் இரண்டாவது அமர்வு நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகி 12 மணி வரை நடைபெறும்.

இந்நிகழ்வு பாடசாலை அதிபர் மா.நாகேந்திரசீலன் தலைமையில் நடைபெறும்.

தெல்லிப்பழைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச.கைலாசநாதன் கண்காட்சியைத் திறந்துவைக்கவுள்ளார். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துயர் பகிர்கின்றோம்

எமது பாடசாலை ஆசிரியை திருமதி இராஜலக்ஷ்மி மயில்வாகனசிங்கம் அவர்களின் அன்புச் சகோதரன்

**தம்பிராசா திருநாவுக்கரசு**

அவர்கள் கடந்த 12.06.2009 அன்று இறைபதம் அடைந்த செய்தி கேட்டு அதிர்ச்சி அடைந்தோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத் தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.**
**யா/சாவகச்சேரி றோ.க.த.க. பாடசாலை, சாவகச்சேரி.**

## அறிவித்தல்
## வருடாந்தப் பொதுக்கூட்டம்

யாழ். மாவட்ட சி.க.கூ சங்கங்களின் சமாச வருடாந்தப் பொதுக்கூட்டம் 2009.06.28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு யாழ். கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்திற்கு தொடர்புள்ள அங்கத்துவ சங்கங்களிற்கு நிகழ்ச்சி நிரல், அதிகாரக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. நிகழ்ச்சி நிரல் கிடைக்கப் பெறாத அங்கத்துவ சங்கங்கள் காரியாலயத்தில் நிகழ்ச்சி நிரலையும் அதிகாரக் கடிதத்தினையும் பெற்றுக்கொள்ளவும்.

637, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
செயலாளர், யாழ். மாவட்ட சி.க.கூ. சங்க சமாசம்.

## மரண அறிவித்தல்
### திருமதி குட்டியர் சின்னக்குட்டி



வசாவிளானைப் பிறப்பிடமாகவும் உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. குட்டியர் சின்னக்குட்டி நேற்று (18.06.2009) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குட்டியரின் அன்பு மனைவியும், பரமேஸ்வரி (பிரான்ஸ்), மகேஸ்வரி, நாகராசா (பிரான்ஸ்), மகாலிங்கம் (ஜேர்மனி), குணராசா (நோர்வே), ஆகியோரின் அன்புத் தாயும், மனோரஞ்சிதம் (பிரான்ஸ்), காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் நந்தினி(பிரான்ஸ்), சுசிலா (ஜேர்மனி), குமுதா (நோர்வே) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.06.2009) வெள்ளிக்கிழமை பி.ப 1 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் உரும்பிராய் இளங்காடு இந்து மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவன் வீதி, உரும்பிராய்.
தகவல்: மகேஸ்வரி (மகள்-சின்னத்தங்கச்சி).

## நவிண்டிலில் விபத்து ஒருவர் காயமுற்றார்

யாழ்ப்பாணம், ஜூன் 19

வடமராட்சி நவிண்டில் பகுதியில் காரும் மோட்டார் சைக்கிளும் விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளில் சென்றவர் படுகாயமடைந்தார்.

நேற்று முன்தினம் புதன்கிழமை பிற்பகல் 3 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் பொலிகண்டி பெரிய கேணியடியைச் சேர்ந்த அ.அஜந்தன் (வயது-22) என்பவரே படுகாயமடைந்தவர் ஆவார்.

இவர் பருத்தித்துறை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக அம்புலன்ஸ் மூலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். (1-78)

**தவறிவிட்டது:** இல,47/1, பிறவுண் வீதி,கொக்குவில் என்னும் முகவரியைக் கொண்ட திரு.கந்தசாமி முருகானந்தன் ஆகிய எனது சாரதி அனுமதிப் பத்திரம் (இல,DL A6543149), விசேட அடையாளஅட்டை (இல,0902 026634) ஆகியன கடந்த 28.05.2009க்கு முன் ஒரு வார காலத்தின் போது ஆடியபாதம் வீதி, பலாலி வீதி அடங்கிய திருநெல்வேலிச் சந்தைப் பகுதியை அண்டிய பகுதியில் தவறிவிட்டன. இதனைக் கண்டெடுத்தவர்கள் மேற்படி எனது முகவரியில் ஒப்படைக்குமாறு தயவுடன் கேட்டுக்கொள்கிறேன். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

## பரிசுத்த ஆவிக்கு ஜெபம்

எனக்கு ஒளியாயிருந்து உன்னத நிலையை நான் அடைய வழிகாட்டும் பரிசுத்த ஆவியே உமது திருநாமம் அர்ச்சிக்கப்படுவதாக. உமது அருட்கொடைகளின் மூலம் என்னுள்ளத்தைப் பக்குவப்படுத்தி எனக்கு தீங்குசெய்தோரை நான் மன்னிக்க அருள் புரிபவரே. என் வாழ்வில் எச் சந்தர்ப்பத்திலும் எனக்கு உற்ற துணையான உமக்கு இச்சிறிய ஜெபத்தின் மூலம் நீர் செய்யும் சகலத்திற்கும் நன்றி கூறுகிறேன்.

என் தேவைகள் எவ்வளவு முக்கியமாக இருப்பினும் எக்காரணம் கொண்டும் உம்மில் இருந்து விலகாமல் என்றும் உம்மில் நிலைத்திருப்பேன் என உறுதி கூறுகிறேன். நானும் என்னால் நேசிக்கப்படும் அனைவரும் என்றென்றும் உமது முடிவில்லா மகிமையில் பங்குபெற வேண்டுகிறேன்.

ஓ பரிசுத்த ஆவியே! உமக்கு நன்றி.

நல்லூர். ஓர் அடியாள்.

## சுற்றாடல் புகைப்படப்போட்டியில் அதியுயர் விருது பெற்ற த.சிவகுமாரை பாராட்டி வாழ்த்துகின்றோம்.



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி விசேட கல்வித்துறை விரிவுரையாளர் த.சிவகுமார் 2009 சுற்றாடல் புகைப்படப் போட்டியில் தேசிய மட்டத்தில், மாகாணமட்டத்தில் அதியுயர் விருதினைப் பெற்றுள்ளார். அவருடைய பணி சிறப்புற வாழ்த்துகின்றோம்.

**நண்பர்கள்.**

## UNIVERSITY OF JAFFNA SRI LANKA
## MEDIA RESOURCE AND TRAINING CENTRE
## POST OF DIRECTOR (ON CONTRACT)

The Media Resource and Training Centre is a **joint venture** of the University of Jaffna and the Institute of Further Education (FO, JO) Sweden.

Applications are invited for the Post of **Director (on contract)** for the media Resource and Training Centre from suitably qualified energetic, proactive and experienced persons having a vision and rationale to develop media studies both professionally and acdemically.

**Required Qualifications and Experience .**

- A Degree of a recongnized University and a postgraduate degree with publications of high quality, priority will be given to applicants with publications related to **media studies.**
- Minimum of **15** years Experience in **academic administration** and / or in **an Executive position** in a Government Department, State Corporation, Higher Educational Intitution / Institute or in a recognized N.G.O.

**General Conditions**

This is a full time assignment and initially it is for a period of **one year** from the date of commencement of the assignment. However, the assignment is renewable if the services rendered and work perfomance during the tenure of assignment is satisfactory.

Applications are expected from suitable candidates **below 60 years.** However applicants over 60 years of age could also be considered for appointment and further renewal of appointment **only** until he / she completes 65 th year of age.

Salary is negotiable and shall be determined based on the qulifications and experience of the selected candidate.

The appointee will become a contributor to the Employees Provident Fund (EPF). Media Resources and Training Center will contribute the EPF and the Employees Trust Fund .

Applicants are requseted to submit along with their curriculum vitae, the names of two non- related referees with their contact details including e-mail addresses and telephone numbers. They are also required to **submit a statement of vision for the development of the MRTC.** Prospective applicants presently employed in the Government Service or Higher Education Intitution / Institutes should forward their applications through the respective Heads under confidential cover to reach the Vice-Chancellor, University of Jaffna,Thirunelvely, Jaffna on or before **24th July 2009** with the name of the post indicated on the top left hand corner of the envelope. Please send the required details mentioned above in a Compact Diskette (CD) along with your application.

**Register**
**2009.06.18**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 23 ☆ 05 ☆ 1937

விண்ணில் 19 ☆ 06 ☆ 2008



## அமரர் சி.நவரத்தினம்

தவம்தானம் செய்து தான்பெற்ற பிள்ளைக்கு
நவரத்தினம் நாமம் சூட்டி நலம்பெற
சிவஞானப் பாலூட்டி நல்லதோர் மகனாய்
புவியில் வளர்த்தார் தந்தை சின்னையா!

சிவமணம் சிந்தையில் நிரப்பி யாழ்நகர்
சிவதொண்டன் அபிமானியாகி புந்தியில்
சிவயோக சுவாமி சிஷ்யன் செல்வந்தனாச்
சுவாமியின் திருவடி கலந்த தொண்டனே!

பூவுலகு போற்றும் குப்பிளான் பதிவாழ்வோர்
நாவால் போற்றும் நவரத்தினமே!
பூவும் நீரும் கொண்டு சிவனைப்
பாவினால் போற்றிப் பரகதி அடைந்தனையே!

தாயாய் தந்தையாய் இருந்தே எம்மைச்
சேயாய்ப் பேணிக் கல்வி கற்பித்தீர்!
நோயால் நாம் வாடினால் துடிதுடித்து வாடுவீர்
நேயமாய் வளர்த்த தந்தையே போற்றி!

குப்பிளான்

சிவா குடும்பம், கண்ணன் குடும்பம்,

## 6ஆம் மாத நினைவஞ்சலி



**தோற்றம்: 27-01-1957**
**மறைவு: 17-12-2008**

### சிவக்கொழுந்து யோகேஸ்வரன்

அன்பாலும், பண்பாலும்
எல்லோரையும் அரவணைத்த
எம் அன்புத் தெய்வமே
ஆறுமாதம் சென்றாலும்
அகலவில்லை உங்கள் நினைவுகள்.

பூதவராயர் வீதி, திருநெல்வேலி கிழக்கு.

தாய், மனைவி, சகோதரர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணித, விஞ்ஞான புதிர்ப் போட்டி

வடமராட்சி, ஜூன்19

வடமராட்சி வலய மட்டப் பாடசாலைகளுக்கிடையிலான கணித, விஞ்ஞான புதிர்ப்போட்டி நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மூன்று நிலையங்களில் நடைபெறவுள்ளது.

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி, வதிரி திரு இருதயக் கல்லூரி, பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரி ஆகிய நிலையங்களிலேயே இப்போட்டிகள் இடம்பெறவுள்ளன. (203-236)

## தொடர் சொற்பொழிவு

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடத்தி வரும் வாராந்த நிகழ்வு வரிசையில் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு ''தேவி பாகவதம்'' என்னும் தலைப்பிலான தொடர் சொற்பொழிவு இடம்பெறும்.

இச் சொற்பொழிவை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் அ.குமாரவேல் நிகழ்த்துவார். (203-236)

## நலன்புரி நிலைய சிறார்களுக்கு 'லக்டோஜன்' பால் மா

யாழ்ப்பாணம், ஜூன்19

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை சிறுவர் விடுதியில் சிகிச்சைபெறும் நலன்புரி நிலையச் சிறார்களுக்கு வழங்கவென ஒரு தொகுதி 'லக்டோஜன்' பால் மா கையளிக்கப்பட்டது.

சாவகச்சேரி கோயிற்குடியிருப்பைச் சேர்ந்த க.கனகரத்தினம் குடும்பத்தினர் பால்மா பொதியினை வைத்தியசாலை நிர்வாகத்திடம் கையளித்தார். (203-207)

## 'இந்துசாதனம்' வெளிவந்துள்ளது

யாழ்ப்பாணம், ஜூன்19

சைவ பரிபாலனசபையின் வெளியீடான 'இந்துசாதனம்' ஆனி மாதத்துக்கான இதழ் வெளிவந்துள்ளது.

நயினை நாகபூஷணி அம்மன் ஆலய வரலாற்றுடன் ஆலயத்தின் முகப்புப் பத்திரிகையும் மூலமூர்த்தியினையும் தாங்கிய படி வெளிவந்துள்ள இந்து சாதனம், வழமையைப் போல் இம்முறையும் சைவசமயம் சார் கவிதைகளை, கட்டுரைகளைத்தாங்கி வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (9)

## இளைஞர் குழுக்கள் அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம், ஜூன் 19

இளவாலை திருமறைக் கலாமன்றத்தின் ஏற்பாட்டில் மூன்று கிராமங்களில் இளைஞர் குழுக்கள் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளன.

இளவாலை சென்யூட் கிராமம், இளவாலை வடக்குப் பகுதி கிராமம், மாதகல் கிராமம் ஆகிய மூன்று இடங்களில் மேற்படி கலாமன்றத்தால் இளைஞர் குழுக்கள் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளன.

மேற்படி அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட இளைஞர் குழுவுக்கு வாழ்வாதார, தலைமைத்துவம், ஆளுமைவிருத்தி ஆகியவற்றுக்கான பயிற்சிப் பட்டறைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இந்தப் பயிற்சிப் பட்டறை ஆறுமாதங்களை உள்ளடக்கியதாகவும் இளைஞர்கள் எதிர்காலத்தில் சமூகத்தில் ஆளுமை, தலைமைத்துவம் உடையவர்களாக கலை வழியில் அணுகி பெரிதும் உதவி புரியும் பயிற்சிப் பட்டறையாக அமையும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (201)

# நாகர்கோயில் மீள் குடியேற்றக் கிராமத்துக்கு மின் இணைப்பு வழங்குமாறு கோரிக்கை

வடமராட்சி,ஜூன்19

குடத்தனை, வலிக்கண்டியிலுள்ள நாகர்கோயில் தெற்கு மீள்குடியேற்றக் கிராமத்தில் அமைக்கப்பட்ட வீடுகளுக்கு மின் இணைப்பை ஏற்படுத்தித் தருமாறு யாழ். அரச அதிபரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாகக் குடத்தனைச் சமூக அபிவிருத்திச் சபைத் தலைவர் வி.சிதம்பரநாதன், யாழ்.அரச அதிபர் கே.கணேஷிற்கும், யு.என்.ஹபிராட் நிறுவனத்திற்கும் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

அதிஉயர் பாதுகாப்பு வலயம் காரணமாக நாகர்கோயில் தெற்கு கிராமத்திலிருந்து இடம்பெயர்ந்த 120 குடும்பங்கள் குடத்தனை வலிக்கண்டியில் குடியேற்றப்பட்டு இவர்களுக்கு யு.என்.ஹபிராட் நிறுவனத்தின் நிதி உதவியுடன் வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டுள்ளன.

இக்குடியேற்ற வீடுகளுக்கு மின்சாரம் வழங்கவென குடத்தனை பிரதான வீதியிலிருந்து மீள்குடியேற்ற கிராமம் வரை யு.என். ஹபிராட் நிறுவனத்தின் நிதியுதவியுடன் மின் இணைப்பு வழி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

கிராமத்தில் வதியும் 120 குடும்பங்களில் 89 குடும்பங்கள் தத்தமது வீடுகளுக்கு மின்சாரம் பெறுவதற்காக மின் இணைப்பு வேலைகளைச் செய்துள்ளன.

ஆனால் இக்குடும்பங்களுக்கு இன்னமும் மின்சார இணைப்பு வழங்கப்படவில்லை.

எனவே, இவ்வீடுகளுக்கு மின்சாரம் வழங்கச் சம்பந்தப்பட்ட மின்சார சபையுடன் தொடர்பு கொண்டு ஏற்பாடுகளைச் செய்து தருமாறு வேண்டுகிறோம் என அக்கோரிக்கைக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (203-236)

# அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றிய இருவருக்கு அபராதம் விதிப்பு

யாழ்ப்பாணம், ஜூன்19

அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றிச் சென்ற இரண்டு வாகனங்களின் சாரதிகளுக்கு 40 ஆயிரம் ரூபா சாவகச்சேரி நீதிமன்றில் அபராதம் விதிக்கப்பட்டது.

அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றிச் சென்ற லொறி மற்றும் உழவு இயந்திரம் ஆகியவற்றை சாவகச்சேரி பொலிஸார் மடக்கிப் பிடித்து சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

கடந்த புதன்கிழமை இவ்வழக்குகள் விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது லொறியின் சாரதிக்கு 25 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

அபராதத் தொகை செலுத்தத் தவறின் 15மாத சிறைத்தண்டனை அனுபவிக்குமாறும் உத்தரவிடப்பட்டது.

உழவு இயந்திரத்தின் சாரதிக்கு 15 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து தவறின் பத்து மாத சாதாரண சிறைத்தண்டனை அனுபவிக்குமாறும் உத்தரவிட்டார். (203-207)

# தப்பி ஓடிய சிறுவன் மீண்டும் ஒப்படைப்பு

நல்லூர், ஜூன் 19

அரியாலை சிறுவர் நன்னடத்தைப் பாடசாலையில் இருந்து தப்பிச்சென்ற சிறுவன் மீண்டும் அங்கு ஒப்படைக்கப்பட்டான்.

மேற்படி பாடசாலையில் இருந்து கடந்த 10ஆம் திகதி தப்பிச் சென்ற உதயகுமார் பிரதீபன் என்ற இந்தச் சிறுவன் யாழ்.வண்ணார் பண்ணைப் பகுதியில் தங்கியிருந்துள்ளார்.

கடந்த 16ஆம் திகதி 'உதயன்' பத்திரிகையில் வெளியான செய்தியைத் தொடர்ந்து மேற்படி சிறுவன் மீளவும் ஒப்படைக்கப்பட்டதாகவும் மேற்படி பாடசாலையின் அதிபர் எஸ்.புவனேந்திரன் தெரிவித்தார். (203-111)

# தென்மராட்சி கிழக்கில் நெற்செய்கை மேற்கொள்ள ஆயிரக்கணக்கானோர் ஆர்வம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 19

தென்மராட்சி கிழக்குப் பகுதியில் கடந்த பத்து வருடங்களின் பின்னர் தமது நெல் வயல்களில் நெற்செய்கை மேற்கொள்ளவும், தமது குடியிருப்புகளுக்கு மீளக் குடியமரவும் ஆயிரக்கணக்கானோர் ஆவலு டன் எதிர்பார்த்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்.மாவட்ட விவசாய திணைக்கள உதவி ஆணையாளரின் பணிப்புக்கிணங்க கைதடி கமநல சேவைகள் நிலையத்தில் நெற்செய்கையாளர்களின் விவரங்கள் பதிவு செய்யப்பட்டன.

இவ்வருடகால போக நெற்செய்கை மேற்கொள்ளவென 700இற்கு மேற்பட்டோர் பதிவு செய்திருந்தனர்.

இப்பகுதியில் காலபோக நெற்செய்கை மேற்கொள்ள அனுமதிக்கப்படும் பட்சத்தில் தமது காணிகளில் மீளக்குடியமர 500 இற்கு மேற்பட்ட குடும்பங்களும் ஆயத்த நிலையில் உள்ளனர்.

வயல் வேலைகளின் ஆரம்ப நடவடிக்கைகள் ஜூலை மாத முதல் வாரத்தில் ஆரம்பிக்க வேண்டியுள்ளதால் இப்பகுதிகளுக்கு செல்வதற்கான அனுமதி இதுவரை வழங்கப்படாமை குறித்து கவலை தெரிவித்தனர்.

10 வருடங்களாக தரிசு நிலங்களாக உள்ள வயல்களைப் பயன்படுத்தி தயார் நிலைக்குக் கொண்டு வர குறைந்தது இரண்டு மாதங்கள் தேவைப்படுவதால் இப்பகுதிகளுக்குச் செல்வதற்குரிய அனுமதியைப் பெற்றுத் தருமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கோரியுள்ளதாகவும் தெரிவித்தனர். (203-207)

குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

## புலமைப் பரிசில் மாணவருக்கு மாதிரிப் பரீட்சை

தரம் 5 புலமைப்பரிசில் மாணவர்களுக்கு வடமாகாண கல்வித் திணைக்களத்தின் கல்வி அபிவிருத்திக் குழு நடத்தும் மாதிரிப் பரீட்சை நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

இதற்கென வடமாகாண கல்வி அபிவிருத்திக் குழுவினால் தயாரிக்கப்பட்ட 5ஆம் ஆண்டுக்கான மாதிரி வினாத்தாள்கள் சகல கோட்டங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டு பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டு பரீட்சை இடம்பெறும் என கல்வித்திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (203-236)

## சிறுவர் அரங்க நிகழ்வு

வடமராட்சி, ஜூன்19

வடமராட்சி வலய, கோட்டமட்ட சிறுவர் அரங்க நிகழ்வுகள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுகளுக்கான ஏற்பாடுகளை வடமராட்சி வலய ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கமலாம்பாள் பஞ்சலிங்கம் செய்துள்ளார். (203-236)

## மிதிபலகையில் பயணித்தோர் தூக்கி வீசப்பட்டதால் காயம்

யாழ்ப்பாணம், ஜூன்19

மினிபஸ்ஸின் மிதிபலகைக் கைபிடி கழன்றதில் அதனைப் பிடித்துக் கொண்டிருந்த மூவர் வீதியில் தூக்கி வீசப்பட்டு காயமடைந்தனர்.

இச்சம்பவம் அரியாலை தபாற்கட்டைச் சந்தியில் இடம்பெற்றது.

வீதி வளைவில் வாகனம் திரும்பிய வேளையில் மிதிபலகையில் தொங்கிக் கொண்டிருந்தவர்களே தூக்கி வீசப்பட்டு காயமடைந்தனர்.

இச்சம்பவத்தில் காயமடைந்த சாவகச்சேரியைச் சேர்ந்த ஆர்.தேவராசா (வயது 32) என்பவர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (203-207)

## மீசாலை விக்னேஸ்வரா முதல்வரின் மணிவிழா

மண்டுவில், ஜூன் 19

மீசாலை விக்னேஸ்வரா மகாவித்தியாலய முதல்வர் கு.கதிர்காமசேகரின் மணிவிழா நாளை சனிக்கிழமை மு.ப. 9.30 மணிக்கு மேற்படி வித்தியாலய கார்த்திகேசு முத்தமிழ் கலையரங்கத்தில் நடைபெறவுள்ளது.

வித்தியாலய உப அதிபர் நா.ஜானககுமார் தலைமையில் இந்நிகழ்வு நடைபெறும். (201-59)

## நன்னடத்தை உத்தியோகத்தர் நேர்முகப்பரீட்சை

வடமாகாணத்திலுள்ள பிள்ளைகளுக்கு நலன்புரி வசதிகளை வழங்குவதற்காக தொண்டர் நன்னடத்தை உத்தியோகத்தரை ஆள்சேர்ப்பதற்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு இல.48, காட்டுக்கந்தோர் ஒழுங்கையில் உள்ள யாழ்.பிராந்திய ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி பதவிக்கு விண்ணப்பித்தவர்கள் உரிய ஆவணங்களின் மூலப் பிரதிகள் மற்றும் அதன் போட்டோப் பிரதிகள் என்பவற்றுடன் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமளிக்கும்படி யாழ்.பிராந்திய ஆணையாளர் கேட்டுள்ளார். (1-7)

## வன்முறையற்ற தொடர்பாடல்; ஆசிரியர்களுக்கு கருத்தரங்கு

வண்ணை, ஜூன் 19

வன்முறையற்ற தொடர்பாடல் சம்பந்தமான பாடசாலை ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு இன்று வெள்ளிக்கிழமை இளவாலை, கன்னியர்மடம் பாடசாலையில் நடைபெறும்.

சமாதானத்துக்கும், நல்லிணக்கத்துக்குமான (சீப்பீயார்) பணியகத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் கருத்தரங்கு அன்றைய தினம் மதியம் 12.30 மணிக்கு ஆரம்பமாகி இருமணி நேரங்கள் நடைபெறுமென ஒருங்கிணைப்பாளர் செல்வி நிரஞ்சனி புஸ்பராசா தெரிவித்துள்ளார். (1-160)



அச்சுவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் மூன்று சிறப்புக் கூட்டுறவு நகர் திறப்பு விழாவில் கிழக்குப் புத்தூர், சிறுப்பிட்டி நிலையங்களை முறையே யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.சிவலிங்கம், சிரேஷ்ட கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.கணேஷ் ஆகியோர் நாடாவெட்டித் திறந்து வைப்பதை முதல் இரண்டு படங்களிலும் காணலாம்.

கூட்டுறவு நகரான நவக்கிரி நிலையத்தின் அமைப்பை விருந்தினர்கள், நெறியாளர் குழு ... செய்வதை மூன்றாவது படத்திலும் காணலாம். சங்கத்தின் தலைவர் க.பேரின்பநாதன், உப தலைவர் கே.கணபதிப்பிள்ளை ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர்.

(படங்கள்: அச்சுவேலிச் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பயன்தரு தாவரங்களை நடுவதன் மூலம் எமது சூழலை அழகாகப் பேணமுடியும்



நாம் ஆண்டாண்டு காலமாக எமது இல்லத்தையும், அதனை அண்டிய பிரதேசங்களையும் அழகுபடுத்துவதற்கு மலர்த் தாவரங்களையும், அலங்காரத் தாவரங்களையும், புற்தரைகளையும், அலங்கார வளைவுகளையும் வைத்துப் பராமரித்து வருகின்றோம். இதனால் எமது சூழல் மிகவும் இரம்மியமாகக் காட்சி தருகின்றது. ஆனால் இவ்வாறான தாவ ரங்கள் பார்வைக்கு மட்டுமே அழகாக இருக்கும்.

எமது சூழலில் எத்தனையே பயன்தரு தாவரங்கள் அழகான காட்சியைத் தருவனவாக உள்ளன. இவற்றைத் தகுந்த முறையில் திட்டமிட்டு நடுகை செய்வதன் மூலம் நாம் நமது சூழலை அலங்காரமாக வைத்திருப்பதுடன் எமக்கு வேண்டிய பல்வேறு நன்மைகளையும் பெறமுடியும்.

### தாவர நடுகைத்திட்டம்

நமது சுற்றாடலில் உள்ள பயன் குறைந்த தாவர வர்க்கங்களிற்குப் பதிலாக பயன்தரு தாவரங்களை நடும் திட்டம் இதுவாகும்.

பொதுவாக மரக்கறிப் பயிர்களாயினும் சரி, பழப்பயிர்கள் ஆயினும் சரி அதிலிருந்து உத்தம விளைவு பெறவேண்டுமாயின் குறைந்தது ஆறு மணிநேரமாவது சூரியஒளி கிடைக்க வேண்டும். எனவே இவ்வாறான தாவரங்களை நடும் போது குறைந்தது 6 மணிநேரம் சூரிய ஒளி கிடைப்பதை உறுதி செய்த இடங்களிலேயே நடுகை செய்ய வேண்டும்.

பசளி வகை, புதினா போன்ற கீரை வகைகளிற்கு ஒப்பீட்டளவில் அதிகளவு சூரியஒளி வேண்டப்படுவதில்லை. சூரியஒளி ஓரளவு கிடைக்கும் இடங்களில் மேற்கூறியவை போன்ற கீரை வகைகளையும் பயிரிடலாம்.

### சாடிகளில் தாவர வளர்ப்பு

வீடுகளில் அலங்காரத்திற்காக பாம் மர வகை, குறோட்டன் வகை, கோலியாஸ் வகை, சைப்பிரஸ் வகை போன்றவையே நாம் பெரும் பாலும் சாடிகளில் நாட்டி வளர்க்கிறோம். ஏன் இவற்றிக்குப் பதிலாகப் பயன்தரு மரங்களை நடலாம் அல்லவா? சீனக்கொய்யா, குட்டை ஜம்புவர்க்கம், ஒரேஞ் நிற காய்தரும் தேசி வர்க்கம் போன்றவற்றை நடுகை செய்து பருவத்திற்குப் பருவம் அவற்றைக் கத்தரித்தல் மேற்கொண்டு அழகான தோற்றம் பெறுவதுடன் சிறந்த விளைவுகளையும் பெற்றுக்கொள்ள முடியுமல்லவா?

இன்று பல்வேறு அழகிற்காக வளர்க்கக் கூடிய கத்தரி, மிளகாய், தக்காளி, குடைமிளகாய் விதைகள் எமது யாழ்ப்பாண சந்தைக்கும் வந்துள்ளன. இவை மிகவும் அழகான விதானத் தோற்றத்தையும், கண்கவர் நிறப்பூக்கள், பழங்களையும்தரும் தாவரங்களை உற்பத்தி செய்யக்கூடியன. எனவே இவ்வாறான தாவரங்களையும் சாடிகளில் நாட்டி எமது சூழலை அழகு படுத்தலாமல்லவா!

ஏன் நாம் சந்தையில் வாங்கும் வெண்ணிற நீட்டுக்கத்தரி இனம் [பிளாஸ்ரிக்], கறுப்பு முட்டி கத்தரி இனம் [ரவுண்ட் பியூட்டி] என்னும் கத்தரிப் பேதங்களை ஒரே சாடியில் நடும்போது அவற்றின் காய்கள் தோன்றும் இளம் நிலையில் இதன் அழகை வர்ணிக்கமுடியாது.

இவை மட்டுமல்ல பல்வேறு மூலிகைச் செடிகளும் மிகவும் அழகாகத்தான் காட்சிதரும். இவற்றையும் சாடிகளில் நாட்டி சூழலை அழகு படுத்தலாமல்லவா!

### அலங்கார வளைவுகள்

வீடுகளில் அலங்கார வளைவுகள் அமைத்து அதில் கோன்பூ படரவிடுவது இன்று எமது பிரதேசத்தின் ஒரு சம்பிரதாயமாக மாறிவிட்டது. ஏன்? இவ் அலங்கார வளைவுகளில் பயன்தரு தாவரங்களைப் படரவிடக்கூடாதா? வளைவுகளில் சிறுகுறிஞ்சாவைக் கூடப் படரவிடலாமே. இதன்மூலம் நாம் ஓரளவேனும் மூலிகைக் காற்றைச் சுவாசிக்க முடியுமல்லவா.

கடந்த வருடம் திருநெல்வேலி மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் நடைபெற்ற விவ

**கமமும் புல்லும்**

சாயக் கண்காட்சியில் எல்லோர் மனங்களையும் கொள்ளை கொண்ட காட்சிகளில் ஒன்று பாகல், பீர்க்கு கொண்டு அமைக்கப்பட்ட அலங்கார வளைவு ஆகும். எனவே பயனற்ற தாவரங்களைக் கொண்டு அலங்கார வளைவு அமைப்பதற்குப் பதிலாக இது போன்ற பயன்தரு தாவரங்களைக் கொண்டு அலங்கார வளைவுகள் அமைத்துப் பயன்பெறலாமே.

### பல்வேறு வடிவங்களிலும் கீரைப்பாத்திகள் அமைத்தல்

பொதுவாகப் பாத்திகளை நாம் சதுரவடிவில்/ நீள்சதுர வடிவிலேயே அமைக்கிறோம். பாத்திகளை வெவ்வேறு வடிவங்களில் [இதய வடிவம், நட்சத்திர வடிவம், இன்னும் பல] அமைக்கும்போது அவையும் நிலத் தோற்றங்களை அலங்காரமாக்குகின்றன.

பொன்னாங்காணித் தாவரத்தைப் பயன்படுத்தி எழுத்து வடிவத்தில் பெயர்களைக் கூடத் தரையில் பொறிக்கலாம். காலத்திற்கு காலம் இலைகள் கத்தரிப்பதன் மூலம் குறித்த சொல்லின் அழகைப் பேணிக்கொள்ளலாம். கத்தரித்த இலைகள் மனித நுகர்வுக்குப் பயன் படும்.

### மண்ணின்றிப் பயிர்ச் செய்கை

பயிர்களுக்குத் தேவையான போசணைகள் கொண்ட கரைசலைப் பயன்படுத்தி மண்ணிற்குப் பதிலாக மாற்று ஊடகத்தில் செய்யப்படும் பயிர்ச்செய்கை முறை இதுவாகும். [மேலதிக தகவல் வேண்டின் தரம்-1 விவசாய உணவுத் தொழில்நுட்பவியலும் பாடநூல்] மிகவும் இலகுவாக மேற்கொள்ளத்தக்க பயிர்ச்செய்கை முயற்சி இதுவாகும். இதற்கு ரெஜிபோம் பெட்டியும் அல்பேட் கரைசலும் மட்டும் இருந்தால் போதும். பல்வேறு தாவரங்களையும் வளர்த்துப் பயன்பெறலாம்.

இங்கு தக்காளி, கத்தரி, மிளகாய் மற்றும் இதரப் பயிர்களையும் ரெஜிபோம் பெட்டியில் நாட்டி ஜன்னல் ஓரத்தில் வீட்டின் தாள்வாரத்தில் தூக்கி விடுவதன் மூலம் எந்தப் பயிரும் பயிரிட முடியாத இடத்தைக் கூட அழகாக மாற்றிக் கொள்ளலாம்.

### நிரை நிரையாக மரக்கறிப் பயிர்களை நடல்

ஒவ்வொரு நிரையிலும் ஒவ்வொரு வகை மரக்கறிப் பயிர்களையும் நடும்போது ஒரு சீரான அழகு காணப்படும். இதன் இடையிடையே செவ்வந்தி, சீனியாஸ் போன்ற பூக்கும் தாவரங்களை நடும்போது மேலும் அழகிற்கு அழகூட்டப்படுவதுடன் மரக்கறிப்பயிர்களைப் பீடைகள் தாக்குவதும் குறைவடையும்.

பொதுவாக வீட்டின் வாயிலில் இருந்து படலை வரை செல்லும் பகுதியில் பாதையின் இரு மருங்கும் அழகுத் தாவரம் வைத்து மகிழ்வது எமது பாரம்பரியமான செய்பாடாகும். இங்கு நாம் பாதையின் அண்மித்த பகுதியில் குட்டையாக வளரும் பயிர்களையும், அதனை அடுத்து சற்று உயரமாக வளரும் பயிர்களையும், அதனையடுத்து உயரமாக வளரும் பயிர்களையும் நாட்டி ஒரு அழகு மிகு தோற்றத்தை ஏற்படுத்திக் கொள்ளமுடியும்.

### பயன்தரு எல்லைப் புறப் பயிர்கள் நடல்

இன்று எமது பிரதேசத்தில் அநேக வீடுகளில் முன்பக்கம் மதில்களே அமைக்கப்பட்டுள்ளன. எனவே மதிலை அண்மித்த பகுதியில் அதிக பழங்களைத் தரும் குட்டைப் பப்பாசி வர்க்கமான "ரெட்லேடி பப்பா" போன்றவற்றை நாட்டலாம். இவை மதிலை விடச் சற்று உயரமான அளவில் பச்சைப் பசேல் என இலைகளையும் அதிக காய்களையும் தரக்கூடியதாக இருக்கும். மேலும் இவற்றிக்கிடையே வெள்ளைப் பூவர்க்க அகத்தி, சிவப்பு பூ வர்க்க அகத்தி நாட்டி தகுந்த காலத்தில் கத்தரித்தல் மூலம் அழகு தோற்றத்தைப் பெறலாம்.

இதே போல் வீட்டின் மதிலை அண்மித்த பகுதியில் தேக்கு, சவண்டலை போன்ற மரங்களின் கன்றுகளை வரிசையில் நாட்டி பராமரிக்கலாம். 25-30 வருடத்தின் பின் இது உங்கள் பரம்பரைக்குச் சிறந்த முதலீடாகவும் அமையும். மேலும் இம்மரங்களில் வெற்றிலை, இராசவள்ளி போன்ற கொடிகளைப் படரவிட்டும் அழகிற்கு அழகூட்டலாம்.

மேலே கூறப்பட்டது போன்றுதான் தாவரங்களை நாட்ட வேண்டும் என்றில்லை. ஒவ்வொருவரினதும் விருப்பு, இயற்கை இரசனைத்திறன், பயிர்களின் காலநிலை ஏற்புத்தன்மை, இடவசதி, மண்வகை, நீர்க்கிடைப்பு, பருவ காலம், ஒவ்வொரு தாவர விளைவிற்குமான கேள்வி என்பவற்றைக் கருத்திற்கொண்டு அழகிற்காகப் பயன்தரு மரங்களை நாட்டிப் பயன்பெறலாம் அல்லவா.

பயன்தரு மரங்களை நாட்டி எமது சூழலை வண்ணமயமாக்குவதுடன். எமது உணவுத் தேவையின் ஒரு பகுதியையும் பூர்த்திசெய்யக் கூடியதாக உள்ளது. மேலும்

1. உடன் மரக்கறி, பழவகைகளைப் பெறச் சந்தர்ப்பம் ஏற்படுகின்றது. இதனால் தரமான உணவை நுகர்வும் சந்தர்ப்பம் ஏற்படுகிறது.

2. பீடைநாசினிகளால் 'நஞ்சூட்டப்பெற்ற உணவு' என்னும் ஐயமின்றி உணவை உண்ணலாம்.

3. அரிதாக உள்ள நிலவளத்தைப் பிரயோசனமாக மாற்றிக் கொள்ளலாம்.

**ப. அருந்தவம்**
ஆசிரிய ஆலோசகர் (விவசாயம்),
வலிகாமம் கல்வி வலயம்.

4. வீட்டுச்சூழலில் நாமே உற்பத்தி செய்த விளைபொருள்களைக் காணும்போதும், அவற்றைப் பராமரிக்கும்போதும், அவற்றை நுகரும் போதும் உள்ள மனத்திருப்திக்கு, சந்தோசத்திற்கும் அளவேயில்லை. இதுமட்டுமன்றி இவற்றை நாட்டல், பராமரித்தல் ஒரு சிறந்த உடற்பயிற்சியாகவும், பொழுதுபோக்காகவும் அமையும்.

5. நமது வீட்டிற்கு வரும் விருந்தினருக்கு இங்கு நாட்டப்பட்ட தாவரங்கள் ஒரு மாறுபட்ட சூழலைக் காட்டி நிற்கும். இதனால் அவர்களின் பாராட்டைப் பெறுவதற்கும் சந்தர்ப்பம் ஏற்படுகிறது.

6. இங்கு மூலிகைத் தாவரங்களையும் அழகிற்காக வளர்க்கலாமல்லவா? இதன்மூலம் நாம் ஓரளவேனும் மூலிகைக் காற்றை சுவாசிக்க முடியும். மேலும் இதுபோன்ற செடிகள் முதலுதவி மருந்தாகவும், நோய் நிவாரணியாகவும், வருமுன் காப்போனாகவும் பயன்படும். வீட்டில் மூலிகைச் செடிகளை வளர்ப்பது எம்முடன் ஒரு வைத்தியர் இருப்பது போன்ற உணர்வை ஏற்படுத்தும்.

7. சந்தைக்குச் செல்வதால் ஏற்படும் செலவையும், நேரத்தையும் மீதப்படுத்திக் கொள்ள முடியும்.

இவை போன்ற பல்வேறு நன்மைகளையும் அள்ளித் தரும் இம்முயற்சியில் நாமும் ஈடுபட்டு எமது வாழ்க்கையை நாம் மேலும் வளப்படுத்திக்கொள்ளமுடியும். ★

---

# எமது பிரதேசங்களில் காணப்படும் வளங்களை அந்நிய தேசங்களுக்கு விற்க அனுமதிக்கக்கூடாது

## தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன்19

எமது பிரதேசங்களில் காணப்படும் வளங்கொழிக்கும் மூலவளங்கள் எம்மால் பயன்படுத்தப்படவேண்டியவை. எக்காரணம் கொண்டும் அந்நிய தேசங்களுக்கு விற்பனை செய்வதை அனுமதிக்கமுடியாது.

இவ்வாறு தெரிவித்தார் தொழில்நுட்பவியல் கல்லூரியின் அதிபர் பேராசிரியர் கலாநிதி என்.யோகராஜன்.

வடக்கின் வசந்தம் 180 நாள் பயிற்சித் திட்டத்தின் யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகத்துடன் இணைந்து மேற்கொள்ளும் பயிற்சிநெறிகளுக்குச் சுமார் 600இற்கு மேற்பட்ட மாணவர்களை இணைத்துக்கொள்ளும் நிகழ்வு கடந்த 7ஆம் திகதி வதிரி, கரவெட்டியிலுள்ள மேற்படி கழக மண்டபத்தில் இடம்பெற்றது.

நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போது இவ்வாறு அவர் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில் தெரிவித்தவை வருமாறு:

சர்வதேசத்தில் முன்னேற்றகரமான பல தொழில்நுட்பங்கள் நாட்டின் தென்பகுதிக்குக் கிடைத்துள்ளன. ஆனால் அவை வடபகுதிக்குக் கிடைக்கவில்லை. மாறாக எம்மிடமிருந்த தொழில்திறன்களும் இல்லாமல் போயுள்ளன. இரண்டு, மூன்று தலைமுறைக்குத் தாக்குப்பிடிக்கக்கூடிய கட்டில்கள், கதிரைகள் எனப் பலவகைப்பட்ட தளபாடப் பொருள்கள் தற்போது எம்மிடமிருந்து மறைந்துபோயுள்ளன.

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலை, பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை, சீநோர் தொழிற்சாலை ஆகிய தொழிற்சாலைகள் தொழிலாளர்களின் தொழில்நுட்பத் திறன் மிக உயர்ந்த நிலையில் வெளிப்பாடைந்து இருந்தது. தற்பொழுது மேற்படி தொழிற்சாலைகள் எல்லாம் மூடப்பட்டுள்ளன. தொழில்வாய்ப்புகள் இல்லை. வெளிநாடுகளே தஞ்சம் என ஓடிப்போகின்றோம்.

தென்பகுதிக்கு விவசாய உற்பத்திப் பொருள்களை அனுப்பிய வடபகுதி மக்கள் இன்று தென்பகுதியில் இருந்து, எப்போது உணவுக் கப்பல் வரும் என எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்கள். இன்று பல்வேறுபட்ட தொழில்நுட்பத் திறன்களும் மழுங்கடிக்கப்பட்ட நிலையில் 90வீதமான பொருளாதாரத் தேவைகளுக்கு மக்கள் வெளிநாட்டுப் பணத்திலும் அரச சார்பற்ற நிறுவனங்களால் வழங்கப்படும் நிவாரணத்திலும் தங்கியுள்ளார்கள்.

அச்சுவேலியில 25 ஏக்கர் நிலம் அரச அதிபரின் சிபார்சின் மூலம் பெறப்பட்டுள்ளது. போக்குவரத்து நிலைமைகள் சீரடையும் நிலை தோன்றியுள்ளது. 5ஆயிரம் மாணவர்களை உள்வாங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. நாம் வழங்கிவரும் தொழிற்கல்வியையும் இங்குள்ள வளங்களையும் பயன்படுத்தி தொழில்நுட்பத்தை விருத்தி செய்ய வேண்டும்.

எமது மண்ணுக்கே உரித்தான தொழில்நுட்ப கட்டுமானத்தைக் கட்டியெழுப்ப வேண்டும். மக்களின் வாழ்க்கைத் தரத்தை வளம்படுத்தவேண்டும். புதிய தொழில்நுட்பங்களைக் கண்டுபிடிக்கவேண்டும்.

தற்போது பல்வேறு துறைகளில் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்த வாய்ப்பை இப்பிரதேச இளைஞர், யுவதிகள் சரியாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். பிரதேசத்தின் வளர்ச்சிக்காக மாணவ சமுதாயத்தைச் சரியாகப் பயன்படுத்தவேண்டும். இந்தச் சந்தர்ப்பத்தை வடமராட்சி தெற்கு, மேற்கு, வடமராட்சி வடக்கு மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவு மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (203-201)

# அனுமதியின்றிக் கட்டடங்கள் அமைத்தோர் மீது வலி.தென்மேற்குப் பிரதேசசபை சட்ட நடவடிக்கை

சண்டிலிப்பாய், ஜூன்19

வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் பிரதேச சபையின் அனுமதியின்றிக் கட்டடங்களை அமைத்தவர்கள் மீது மிக விரைவில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இதற்கான முயற்சியில் பிரதேச சபையின் செயலாளர் திருமதி பி.சிவலிங்கம் ஈடுபட்டுள்ளார்.

மேற்படி பிரதேசத்தில் சபையின் அங்கீகாரம் பெறாமல் பல கட்டடங்கள் ஏற்கனவே கட்டப்பட்டுள்ளன.

இவர்கள் மீது பிரதேச சபை சட்ட நடவடிக்கை எடுக்கத் தாமதப்படுத்தியிருந்தது. இதனைச் சாதகமாகப் பயன்படுத்தி தொடர்ந்தும் கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

இப்பகுதியில் அனுமதியின்றித் தொடர்ந்து கட்டடங்கள் அமைக்கப்பட்டு வருவதை அடுத்து இவற்றைத் தடுக்கும் நோக்குடன் சட்டவிரோதமாகக் கட்டடங்களை அமைக்கும் உரிமையாளர்கள் மீது நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்வதற்கான ஒழுங்குகளை பிரதேச சபை மேற்கொண்டுள்ளது. (203-115)

# சித்தங்கேணி கணேசாவில் நிறுவுநர் தினமும் பரிசளிப்பும்

சங்கானை, ஜூன்19

சித்தங்கேணி ஸ்ரீகணேச வித்தியாலய நிறுவுநர் நினைவு தினமும் வருடாந்தப் பரிசளிப்பு விழாவும், இன்று, வெள்ளிக் கிழமை பிற்பகல் 1.30 மணிக்குப் பிரதான மண்டபத்தில் பாடசாலையின் அதிபர் செல்வி நா.ஜெயராணி தலைமையில் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சங்கானைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் துரை எங்கரசும் சிறப்புவிருந்தினராக முன்னாள் ஓய்வுபெற்ற அதிபர் க.நல்லையாவும் கலந்துகொள்வர்.

நிறுவுநர் நினைவுரையினை ஊர்காவற்றுறைப் பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் ச.ஐங்கரன் நிகழ்த்துவார். (1-29)


# வலி.தென்மேற்கில் சுயதொழிலுக்குத் தெரிவானோர்

நவாலி, ஜூன் 19


வலி.தென்மேற்குப் பிரதேச செயலகத்தில் சுயதொழில் முயற்சித் திட்டத்தில் கோழி வளர்ப்புக்கு தெரிவுசெய்யப்பட்ட பின்வரும் விசேட தேவைக்குரியவர்களை நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்குச் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்திற்கு சமுகம் தருமாறு சமூகசேவை உத்தியோகத்தர் எஸ்.அருந்தவராசா கேட்டுள்ளார்.

சி.விக்னேஸ்வரி ஜே/132, தி.கமலேந்திரன் ஜே/133, செ.தங்கராசா ஜே/140, ர.இரத்தினவதி ஜே/142, ச.மல்லிகாதேவி ஜே/142, மா.புகழேந்திரன் ஜே/144, க.மகாதேவன் ஜே/144, க.ஜெயராசா ஜே/145, க.மங்கையர்க்கரசி ஜே/147, க.மார்க்கண்டு ஜே/151, எ.மேரிஜெனிற்றா ஜே/152, பொ.ஜமல்ராணி ஜே/154, அ.சுயாம்ரதீபன், க.செபமாலை ஜே/155, ச.யூட்றொபின்சன் ஜே/155, க.அன்னம்மா ஜே/155, பி.ஜொபிதா ஜே/155. (203-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கெருடாவில் சித்திவிநாயகர் ஆலயச் சங்காபிசேகத்தின்போது விநாயகப் பெருமானுக்குச் சங்காபிசேகத்துக்குப் பின்னர் படையல் செய்யப்பட்டிருப்பதையும் விநாயகர் உள்வீதியுலா வருவதையும் படங்களில் காணலாம். *(253)*



இணுவில் கந்தசுவாமி ஆலய மஞ்சத் திருவிழாவில் பெருமஞ்சம் வீதியுலா வந்தபோது எடுக்கப்பட்ட படங்கள். *(55)*



காரைநகர் பாலாவோடை முத்துமாரி அம்மன் ஆலயத்தில் இடம் பெற்ற தேர்த் திருவிழாவில் அம்பாள் தேருக்கு எழுந்தருளுவதையும் தேர் பவனி இடம்பெறுதையும் படங்களில் காணலாம். *(250)*



காரைநகர் மருதடி விரகத்தி விநாயகர் ஆலயத்தின் தேர்த்திருவிழாவின் போது எடுக்கப்பட்ட படங்கள். சுவாமி தேரில் பவனி வருவதை முதலாவது படத்திலும் விநாயகப் பெருமானுக்குப் பஞ்சமுக அர்ச்சனை இடம்பெறுவதை இரண்டாவது படத்திலும் காணலாம். *(250)*



சித்தங்கேணி பெரியவளவு மகாகணபதி ஆலயத் தேர்த்திருவிழாவின் போது விநாயகப் பெருமான் தேரில் எழுந்தருளி அடிய[illegible] அருள் பாலிப்பதைப் படத்தில் காணலாம். [illegible]

# படகோட்டியால் கைவிடப்பட்ட இலங்கை அகதிகளை இந்தியக் கடற்படை காப்பாற்றி கரை சேர்த்துள்ளது

சென்னை,ஜூன்19

தனுஷ்கோடி கரையில் மணல்திட்டு ஒன்றில் அநாதரவாக கைவிடப்பட்டிருந்த இலங்கை அகதிகள் ஐவர் இந்தியக் கடற்படையினரால் காப்பாற்றப்பட்டு தமிழ் நாட்டுக்கு அழைத்துவரப்பட்டுள்ளனர்.

கடந்த 16ஆம் திகதி இவர்களை ஏற்றி வந்த படகோட்டி தனுஷ்கோடி கரையில் திட்டு ஒன்றில் இறக்கிவிட்டுச் சென்று விட்டான் என்றும் அவர்கள் கரை சேரமுடியாமல் தவித்துக்கொண்டிருக்கிறார்கள் என்றும் இந்திய கடற்படையினருக்கு மீனவர்கள் மூலம் தகவல் கிடைத்தது. மாலையாகிவிட்டமையாலும் கடும் காற்று வீசியமையாலும் கடல் கொந்தளிப்பாக இருந்தமையாலும் கடற்படையினரால் அன்று அவர்களைக் காப்பாற்றமுடியவில்லை. அடுத்தநாளே கடற்படையினரால் அகதிகள் இருந்த இடத்தை அடைய முடிந்தது.

இலங்கையில் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இராணுவத்தினருக்குமிடையிலான போர் முடிவுற்றுள்ள நிலையில் அங்கிருந்து புதிதாக அகதிகள் தமிழ்நாட்டுக்கு வந்திருப்பது கவலையைத் தோற்றுவித்துள்ளது என்று மண்டபம் அகதிகள் முகாமைச் சேர்ந்த அதிகாரிகள் தெரிவித்தனர்.

இலங்கையில் பேசாலை, வவுனியா மற்றும் மட்டக்களப்பு ஆகிய இடங்களிலிருந்து இந்த அகதிகள் வந்திருக்கிறார்கள். இவர்கள் ஒவ்வொருவரும் தலைக்கு 50 ஆயிரம் ரூபா படகுக்காரனுக்குச் செலுத்தியிருக்கிறார்கள் என்று கூறப்படுகின்றது. (ப)

# சுனாமித் திட்டத்தின் கீழான வீடுகள் எதிர்வரும் வெள்ளி திறந்துவைப்பு

வடமராட்சி,ஜூன்19

இரட்சணியசேனையின் அனுசரணையுடன் ஐக்கிய நாடுகள் வதிவிட அலுவலகத்தால் நிறைவேற்றப்பட்ட சுனாமி மீட்புமீள் நிர்மாணத்திட்ட வீடுகள் திறப்பு விழா எதிர்வரும் 26ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு வடமராட்சியில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்.அரசாங்க அதிபர் கே.கணேஷ் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு வீட்டுத்திட்ட பெயர்ப்பலகை, நினைவுச்சின்னம் என்பனவற்றைத் திறந்து வைப்பார்.

அல்வாய் வடமத்தி, கெருடாவில் வடக்கு, தொண்டைமானாறு வடக்கு, தொண்டைடிானாறு தெற்கு ஆகிய கிராமங்களில் இவ்வீட்டுத்திட்டம் ஏற்படுத்தப் பட்டுள்ளது.

இரட்சணியசேனை தலைமைச் செயலர் கேணல் வஸ்ஸாம்லோவா, இரட்சணியசேனை ஹொய்ஹோய் மக்கோ, தலைவர் என்லோய் சைமன் லொங், ஐ.நா வதிவிடத் திட்ட முகாமையாளர் கே.பரமேஸ்வரன், மக்கள் வங்கியின் வடவலய உதவிப் பொதுமுகாமையாளர் ரி.கே. ஆனந்தராஜா, பருத்தித்துறைப் பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் ஆகியோர் இந்த நிகழ்வில் விருந்தினர்களாகக் கலந்து கொள்வர்.

அந்தந்தக் கிராமங்களில் பெயர்ப் பலகை, நினைவுச் சின்னம் என்பன அன்றையதினம் பிற்பகல் 2.30 மணிக்குத் திறந்துவைக்கப்படும்.

தொடர்ந்து பிற்பகல் 3 மணிக்கு தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயத்தில் திறப்புவிழா தொடர்பான பொதுக்கூட்டம் இடம்பெறும்.

நிகழ்வுக்கான ஒழுங்குகளை அல்வாய் வடமத்தி, கெருடாவில் வடக்கு, தொண்டைமானாறு வடக்கு, தொண்டைமானாறு தெற்கு சமூக அபிவிருத்திச் சபைகள் ஏற்பாடு செய்துள்ளன. (203-236)

# மாறிவரும் மனநிலை மாறுமா?

## ஞானக்கதிர்

மனித மனங்களில் எத்தனையோ எண்ண அலைகள் உருவாகி உயர்ந்து செல்லும் தருணத்தில் உள்ளங்கள் உருக்குலைந்திருக்கின்றது. இத்தகைய மாற்றங்களுக்கான காரணம் என்ன? இதற்குரிய சந்தர்ப்பங்கள் என்ன? என்னென்ன காரணிகள் இதற்குப் பக்கத்துணையாக உள்ளது? என்று சிந்திக்கவேண்டிய சூழ்நிலையில் நாம் ஒவ்வொருவரும் வாழ்ந்துகொண்டிருக்கின்றோம்.

மனித மனங்கள் என்றைக்குமே நல்லதையே சிந்திக்கவேண்டும், நல்லதையே சொல்லவேண்டும், நல்லதையே செய்யவேண்டும் என்ற சிந்தனைகள், எண்ணங்கள் உருவாக்கப்பட்டு விதைக்கப்பட்டவை. அவை முளைவிட்டு வெளிவரும் பருவத்தில் முளைகளைக் கிள்ளியும், நசுக்கியும், மிதித்தும், அழிக்கும் நிலை உருவாகி வருகின்றது. இந்நிலை மாறவேண்டும், மாற்றப்படவேண்டும். அவ்வாறு இல்லாத நிலையில் இயற்கைச் சீற்றங்கள், அதர்மச் செயல்கள் தலைவிரித்தாடும் நிலை மேலும் மேலும் உருவாகி உலக நியதி மாற்றமடையும் சந்தர்ப்பங்களும் உண்டு.

அன்று இலகுவில் பாதிப்புறுவோர் என்ற வகுப்பிற்குள் சிறியவர்கள், முதியவர்கள், அங்கவீனர்கள் போன்றோர்கள் இருந்தார்கள். ஆனால் இன்றைய காலம் அனைவருமே இலகுவில் பாதிப்புறும் நிலைக்குத் தள்ளப்பட்டு வருகின்றோம். இவைகள் எல்லாம் மனிதனை உடல் ரீதியாகவும் உள ரீதியாகவும் விரக்தி நிலைக்கு ஆளாக்குகின்றது.

முன்னைய காலங்களில் ஓரிடத்தில் நிகழும் இறப்பிலிருந்து மக்கள் மீள்வதற்கு மாதங்களோ, வருடங்களோ எடுக்கும். இறைவன் மீது கொண்ட பற்றுதல், கலாசாரம், பண்பாடு, ஒழுக்க விழுமியங்கள் போன்றவற்றிற்கு கட்டுப்பட்டுத் தம்மைத் தாமே நெறிப்படுத்தி ஒரு கட்டுக்கோப்புக்குள் வைத்திருந்ததனால் சிறப்பான ஒரு வாழ்வியலுக்குள் வாழ்ந்து வந்தார்கள். இந்நிலை தற்காலத்தில் மாற்றம் அடைந்து அனைவரும் அன்றாடம் இறப்புகளையும், இன்னல்களையும், இயற்கையின் கொடூரங்களையும் சந்தித்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களிடம் தர்மபயம், மரணபயம் இன்றிப் பண்பாடு, கலாசார விழுமியங்களை இனியும் கடைப்பிடிக்கத்தான் வேண்டுமா? அவ்வாறு கடைப்பிடித்தாலும் நீண்டகாலம் இவ்வுலகில் வாழத்தான் முடியுமா? என்ற சந்தேகங்கள் தோன்றியுள்ளது. அத்துடன் இன்று இருப்பவர்களை நாளை காணமுடியுமா? என்ற ஏக்கமும் இருக்கத்தான் செய்கிறது. வாழும் காலத்தில் ஏதோ வாழ்ந்துவிட்டுச் செல்வோம் என்ற எண்ணத்துடன் தமது வாழ்க்கையினை வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள்.

இந்த மனநிலை மாறுமா? மாறும் சூழ்நிலை உருவாகுமா? என்ற கேள்விக்கு ஒவ்வொரு சமூக, கலாசார, நாகரிக பற்றாளர்களும் தமது உருக்கமான, உன்னதமான கருத்துகளை முன்வைப்பதன் ஊடாக மக்களின் துயர்களுக்கு ஒளிகொடுத்து அவர்களின் மனதில் ஒரு நல்ல மாற்றத்தினைக் கொண்டுவர முயற்சிக்கவேண்டும்.

ஒவ்வொரு மனங்களிலும் எரிந்துகொண்டிருக்கின்ற தீ நாளடைவில் வெளிப்படத் தொடங்கும் சந்தர்ப்பத்தில் ஏற்படும் விளைவு மிகவும் விபரீதமாக அமைந்துவிடும். ஒவ்வொருவரும் தமது உள்ளங்களிலே இருக்கும் பாரங்களை இறைவன் திருவடிகளிலே சமர்ப்பித்து செய்வதறியாது வாழ்ந்து வருகின்றார்கள். அவர்களுடைய மன நிம்மதிக்கும், ஓய்வுக்கும் ஆறுதல் அளிக்கும் இடமாக ஆலயங்கள், தியான மண்டபங்கள், சொற்பொழிவுகள், அறிஞர்களின் அறிவுரைகள், ஆச்சிரமங்களின் அர்ப்புணிப்புச் செயல்கள் போன்றன அவர்களை மனிதராக வாழ வழிவகுத்துக்கொண்டிருக்கிறது. மக்கள் சேவைக்காகத் தம்மை அர்ப்பணிப்புச் செய்வதன்மூலம் அவை 'மக்கள் சேவை மகேசன் சேவை' என்பதனை நாமும் உணர்ந்து மற்றவர்களையும் உணரவைக்கமுடியும் என்பதற்கு எடுத்துக்காட்டாக பல உத்தம புருஷர்கள் தம்மை முழுமையாக ஆச்சிரம சேவைக்கு அர்ப்பணித்து வாழ்ந்து வருகின்றதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக ''முயற்சி செய்துபார் அது உனக்கு வெற்றியைத் தரும்'' என்ற கூற்றிற்கு அமைவாக நாம் எம்மிடையே இருக்கின்ற உடல், உள ரீதியான மாற்றத்தினை மாற்றிவிடவேண்டுமாயின் இறைவன்மீது நம்பிக்கை கொண்டு உயர் வான பாதையில் முன்னேறவேண்டும். அவ்வாறு நாம் செல்லும்போது பல தடைகள், தடங்கல்கள் தோன்ற நேரிடலாம். அவ்வாறான சந்தர்ப்பத்தில் எல்லாம் வல்ல இறைவன் மீது பாரத்தினைப் போட்டுமுழு முயற்சியோடு நாம் சாதகமான மாற்றத்தினை நோக்கி நகரவேண்டும். அவ்வாறு செல்லும்போதுதான நாம் இறைவனிடத்தில் பூரண சரணாகதி அடையமுடியும்.

இ.சாந்தகுமார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




2010 இல் புலமைப் பரிசில் எழுதவுள்ள

# தரம் 4 மாணவர்களுக்கான புலமைப் பரிசில் பரீட்சைக்கான முன்னோடிப் பரீட்சை

## பகுதி 11

நேரம் : 1 மணி 15 நிமிடங்கள்
100 புள்ளிகள்

100

**● எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**

(01) கீழ்வரும் பந்தியை நன்கு வாசித்து கீழே கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.

> நாம் எப்பொழுதும் சுத்தமாக இருப்பதோடு எமது வீட்டையும் சுற்றாடலையும் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். சுகமாக வாழ்வதற்குத் தூய காற்று, தூய நீர், தூய உணவு, தூய சூழல் என்பன அவசியமாகின்றன. சுத்தமாக இல்லாவிடில் சூழல் மாசடைந்து துர்நாற்றத்தை ஏற்படுத்தும். நுண்ணிய அங்கிகள் பல உருவாகி, பெருகித் தொற்றுநோய்களைப் பரப்பும். நாம் எமது உடலை நோய் வராமல் பாதுகாத்தல் வேண்டும். தினமும் குளித்தல், தோய்த்து உலர்ந்த ஆடைகளை அணிதல், கைகழுவிய பின்னர் சாப்பிடுதல், நகங்களைக் காலத்துக்குக் காலம் வெட்டுதல் போன்ற சிறந்த பழக்க வழக்கங்களை அனுசரித்தல் சாலச் சிறந்ததாகும்.
>
> (நன்றி: கல்வி வெளியீட்டுத் திணைக்களம்)

(1) மேலே உள்ள பந்தியில் எதைப்பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது?
.............................................................

(2) சுத்தமாக வாழ்வதற்குத் தேவையானவை எவை?
.............................................................

(3) தொற்றுநோய்களைப் பரப்புவன எவை?
.............................................................

(4) மேலுள்ள பந்திக்கு தலைப்பிடுக.
.............................................................

(5) ஒத்தசொல் தருக.
(1)காற்று.............................. (2) அணிதல் ..............................

(6) வினைச் சொற்கள் இரண்டினை எழுதுக.
(1).............................. (2) ..............................

(7) பெயரெச்சச் சொல் ஒன்று தருக.
.............................................................

(8) உரிச்சொல் ஒன்று தருக.
.............................................................

(9)பரப்பும் என்ற வினைச்சொல் எக்காலத்திற்குரியது?
.............................................................

(10) அஃறிணைப் பலவின்பால் சொல் ஒன்றினை எழுதுக.
.............................................................

(10 புள்ளிகள்)

(02) செவ்வகத்தினுள் உள்ள சொற்களை மாத்திரம் பயன்படுத்தி சரியான, பொருள்தரத்தக்க மூன்று வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியத்திற்கும் நான்கு சொற்களுக்குக் குறையாமல் இருக்க வேண்டும். ஒருசொல்லை ஒருமுறை மாத்திரம் பயன்படுத்துக.

| | | | |
|---|---|---|---|
| சேவகி | திறமையான | பாதுகாத்து | பரிசுப்பொருள் |
| ஆசிரியர் | பிள்ளையை | சிறுவர்களுக்கு | விறகு |
| கொடுத்தார் | அம்மா | உடைப்பதற்கு | வந்தாள் |
| போனார் | காட்டுக்கு | நாங்கள் | போனோம் |

(1) .............................................................
(2) .............................................................
(3) .............................................................

(6 புள்ளிகள்)

(03) கீழ்வரும் தமிழ்ச் சொற்களுக்குப் பொருத்தமான ஆங்கிலச் சொற்களை (ஆங்கில எழுத்துக்களில்) எழுதுக.

1. கிளி .............................. 2. நண்டு ..............................
3. பாண் .............................. 4. கதிரை ..............................

(6 புள்ளிகள்)

(04) கீழ்வரும் சிங்கள வாக்கியங்களின் பொருளை தமிழில் தருக.

1. ஒபகே கம கொஹேத? : .............................................................
2. மகே கம வத்தள. : .............................................................

(4 புள்ளிகள்)

**இலக்கம் 05 - 10 வரையான வினாக்களுக்குச் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

(05) குறித்ததொரு காலப் பிரிவில் மாத்திரம் பூக்கும் மரமொன்று,
1. தென்னை 2. வாழை 3. சீண்டுக்கொடி 4. வாகை

(06) மரத்தின் மேலே தனது வீட்டினை அமைக்காத உயிரினம் ஒன்று,
1. தச்சன் குருவி 2. கொக்கு 3. முயிறு 4. எலி

(07) பயிர்களுக்கு நாசம் விளைவிக்கும் உயிரினமொன்று,
1. வாலாட்டிக் குருவி 2. மண்புழு 3. வண்ணாத்தி 4. நத்தை

(08) உயிரினங்களினால் தாவரங்களுக்கு ஏற்படும் நன்மையல்லாதது,
1. பூக்களின் மகரந்தத்துக்கு போசாக்கினை ஏற்படுத்தல்.
2. விதைகளின் விருத்திக்கு உதவுதல்.
3. சிற்சில விலங்குகளின் மலசலம் பயிர்களுக்கு உரமாக மாறுதல்.
4. முயிறுகள் மரங்களில் கூடுகட்டுவதால் மரங்களின் விருத்தி குன்றுதல்.

(09) ஊதா நிறத்தினாலான பூவொன்று,
1. சூரியகாந்தி 2. நாகலோகப்தி 3. சுரைக்காய் 4. சிறகு அவரை

(10) கரப்பான் பூச்சியின் குருதியின் நிறம்
1. கறுப்பு 2. வெள்ளை 3. சிவப்பு. 4. பச்சை

(12 புள்ளிகள்)


**கீழ்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

(11) (அ) உயிரினங்களால் மனிதர்களுக்கு ஏற்படக்கூடிய நன்மைகள் மூன்றினை எழுதுக.
.............................................................
.............................................................
.............................................................

(ஆ) கடுஞ்சூடு, மழை ஆகியவற்றிலிருந்து தப்பிப்பதற்கு மரநிழலை நாடும் இரு விலங்குகளின் பெயர்களை எழுதுக.
1. .............................. 2. ..............................

(05 புள்ளிகள்)


(12) கீழ்வரும் உயிரினங்களின் படங்களை அடையாளம் காண்க. அந்தப் படங்களில் காணப்படுகின்ற ஒவ்வொரு உயிரினத்தினதும் பெயர்களை பெட்டிக்குள்ளிருந்து தெரிந்து படத்தின் மீது எழுதுக.



தீக்கோழி, கரப்பான்பூச்சி, மரங்கொத்தி, நத்தை, மழைக்குருவி

(05 புள்ளிகள்)

(13) சில பறவைகளின் சொண்டுகள் படங்களில் காட்டப்பட்டுள்ளன. அவை ஒவ்வொன்றும் எந்தெந்தப் பறவைகளுக்குரியது என கொடுக்கப்பட்டுள்ள பெயர்களிலிருந்து தெரிந்து, படத்தின் மீது எழுதுக.



வாத்து, கிளி, தேன்சிட்டு, கொக்கு, மைனா

(05 புள்ளிகள்)

பிரபல்ய சிங்கள வெளியீடுகளின் மொழிபெயர்ப்புடனும் மேலதிக சேர்க்கையுடனும் தயாரிக்கப்பட்ட ஒரு பிரமாண்டமான படைப்பு.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

(14) கீழ்வரும் படங்களில் காட்டப்பட்டுள்ள பூக்களை இனங்கண்டு, அவை ஒவ்வொன்றினதும் பெயரை தரப்பட்டுள்ள விடையிலிருந்து தெரிவுசெய்து படத்தின் மீது எழுதுக.



சூரியகாந்தி, நீலோற்பலம், கார்த்திகை, நாமலர், அந்தூரியம்

(05 புள்ளிகள்)

(15) நான்கு பாடசாலைகளில் இருக்கின்ற ஆண், பெண் பிள்ளைகளின் தகவல் கீழ் காட்டப்பட்டுள்ளது. அதனைப் பயன்படுத்தி, வினாக்களுக்கு விடை தருக.

| பாடசாலை / மாணவர்கள் | அஸ்ஸபா | அறபா | அந்நூர் | ஸாஹிரா |
|---|---|---|---|---|
| பெண்கள் | 220 | 500 | 375 | 450 |
| ஆண்கள் | 250 | 430 | 550 | 225 |

1. ஸாஹிரா வித்தியாலயத்தில் இருக்கின்ற ஆண், பெண் பிள்ளைகளின் கூட்டுத்தொகை யாது?

.............................................

2. அஸ்ஸபா வித்தியாலயத்திலுள்ள ஆண் பிள்ளைகளின் தொகையிலும் இருமடங்கு பெண்பிள்ளைகள் உள்ள பாடசாலை எது?

.............................................

3. அறபா வித்தியாலயத்திலுள்ள ஆண், பெண் மாணவர்களுக்கிடையிலான வித்தியாசம் யாது?

.............................................

4. நான்கு பாடசாலைகளிலுமுள்ள ஆண் மாணவர்களின் தொகைகளை ஏறுவரிசையில் எழுதுக.

.............................................

(08 புள்ளிகள்)

(16) கீழ்வரும் எண்களுக்குரிய உரோமன் இலக்கங்களை எழுதுக.
20, 25, 13,40

.............................................

(08 புள்ளிகள்)

(17) கீழ்வரும் எண்களை எழுத்தில் எழுதுக.
1. 3759 .............................................
2. 2977 .............................................

(02 புள்ளிகள்)

(18) அமைப்பினைப் பார்த்து அடுத்து வரவேண்டிய எண்ணை எழுதுக.
1. 33, 30, 27 ..............................
2. 65, 70, 75 ..............................
3. 48, 52, 56 ..............................

(06 புள்ளிகள்)

(19) விடை எழுதுக.

1. இரண்டு கூடைகளில் 375 ரம்புட்டான் பழங்கள் உள்ளன. ஒரு கூடையில் 270 ரம்புட்டான் பழங்கள் இருக்குமாயின், அடுத்த கூடையில் எத்தனை ரம்புட்டான் பழங்கள் இருந்திருக்கும்?

.............................................

2. ஒரு பையில் 365 மஞ்சாடிக் கொட்டைகள் உள்ளன. இன்னும் மஞ்சாடிக் கொட்டைகள் 435 அந்தப் பையினுள் இட்டால், பையில் உள்ள மொத்த மஞ்சாடிக் கொட்டைகள் எத்தனை?

.............................................

3. சிவப்பு, ரோசா நிறப் பூக்கள் ஒரு திக்கூடையில் இடப்பட்டுள்ளது. கூடையில் இடப்பட்டுள்ள ரோசா நிறப் பூக்களின் எண்ணிக்கை 220. சிவப்பு நிறப் பூக்களின் தொகை ரோசா நிறப்பூக்களின் எண்ணிக்கையிலும் இரு மடங்காகும். பூக்கூடையில் உள்ள பூக்களின் மொத்த எண்ணிக்கை யாது?

.............................................

(06 புள்ளிகள்)

(20) மரங்கள் எங்கள் நண்பர்கள் எனும் தலைப்பில் 6 வாக்கியங்களைக் கொண்ட கட்டுரையொன்று எழுதுக. ஒரு வாக்கியத்தில் குறைந்தது நான்கு சொற்களாவது இடம்பெற வேண்டும். அவற்றில் எழுவாய், பயனிலை சரியாக அமைய வேண்டும்.

.............................................
.............................................
.............................................
.............................................
.............................................
.............................................


(12 புள்ளிகள்)

சென்ற வாரத்தினதும் இதன் விடைக்குறிப்புக்களும் வினாத்தாள் 02 இன் பகுதி 11 உம் அடுத்தவாரம் வெளிவரும்......

தொகுப்பாசிரியரும் மொழிபெயர்ப்பாளரும்
**இஸ்மாயில் எம். பைரூஸ்**
(கொழும்பு)

**அன்பு மாணவர்களே!**

இப்பகுதியில் உள்ள வினாக்கள் தொடர்பாக ஏதாவது சந்தேகங்கள், தெளிவின்மைகள் இருப்பின் கீழ்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு தெரிவித்தால், உரிய ஆசிரியர் மூலம் தெளிவுபடுத்தப்படும். 021-2229933 / 071-6850005 / 071-4273035








வண்ணை நாவலர் மகா வித்தியாலய ஆங்கில தின நிகழ்வுகள் கடந்த திங்கட்கிழமை இடம் பெற்றபோது எடுக்கப் பட்ட படங்கள். கல்லூரி அதிபர் சு.சிவபாதசுந்தரம், யாழ்.வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் (ஆங்கிலம்) எஸ்.தியாகராஜா ஆகியோர் உரையாற்றுவதையும் கலைநிகழ்வின் ஒரு காட்சியை படங்களில் காணலாம்.





யாழ்.வலயத்தின் தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கு நல்லூர் சி.சி.த.க. பாடசாலையில் நடத்தப்பட்ட சுற்றாடல் செயற்பாட்டுப் பாடத்திற்கான மாணவர் பயிலமர்வின்போது எடுக்கப்பட்ட படங்கள். குடும்ப பாடசாலை ரீதியாக நடைபெற்ற இந்த நிகழ்வில் 100 மாணவர்கள் கலந்துகொண்டனர். (படங்கள்: லக்ஸ்மன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகதி முகாம்களிலுள்ள 3 அவுஸ்திரேலியர்கள் தொடர்ந்து தேடப்பட்டு வருகின்றனர்

கொழும்பு, ஜூன்19

இலங்கையில் மோதல் காரணமாக இடம் பெயர்ந்த 3 லட்சம் மக்கள் மத்தியில் உள்ள மூன்று அவுஸ்திரேலியர்கள் தொடர்ந்து தேடப்பட்டு வருகின்றனர் என அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் ஸ்டீபன் ஸ்மித் குறிப்பிட்டுள்ளார்.

26, 29 வயது யுவதிகள் இருவரும், 62 வயது நபர் ஒருவரையும் தாங்கள் தேடி வருகின்றனர் என அவுஸ்திரேலிய அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இடம்பெயர்ந்தவர்களுக்கான முகாம்களில் இருக்கலாம் எனக் கருதப்படும் இந்த அவுஸ்திரேலியர்களைத் தேடிக் கண்டுபிடிப்பதற்காகத் தாங்கள் அதிகாரிகளை அனுப்பியுள்ளனர் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். இந்த மூவரும் ஆபத்தான நிலையில் உள்ளனர், பாதுகாப்பற்ற சூழலில் உள்ளனர் என்பதற்கான தகவல் எதுவுமில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

''எங்களால் அவர்களைக் கண்டுபிடிக்க முடியவில்லை. முகாம்களில் பணிபுரியும் யு.என்.எச்.சி.ஆர். மூலமாகவும், இலங்கை அதிகாரிகள் மூலமாகவும் தேடியும் கண்டுபிடிக்கவில்லை'' என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இடம்பெயர்ந்த மக்கள் தங்க வைக்கப்பட்டுள்ள முகாம்களுக்குச் செல்வதற்கு யு.என்.எச்.சி.ஆர். மற்றும் செஞ்சிலுவைக் குழுவுக்கு முழுமையான அனுமதி வழங்கப்பட வேண்டுமெனவும் ஸ்டீபன் ஸ்மித் வேண்டுகோள் விடுத்துள்ளார். (சி)


## ஓராண்டு நினைவு



மண்ணில்: 23.02.1943

விண்ணில்: 19.06.2008

அமரர் மார்க்கு யாக்கோப்பு (யேக்கப்)
(இளைப்பாறிய இ.போ.ச.சாரதி)

பாரினிலே பார்க்கத் துடிக்கின்றோம் எங்கள் அப்பாவை
பாசத்திற்கு இலக்கணமான எங்கள் தந்தையை
பரிதவிக்கின்றோம் உங்கள் பிரிவைத் தாங்க இயலாமல்
பரமனை வேண்டுகின்றோம் உங்கள் நித்திய வாழ்விற்காக.

உம் நினைவினில் வாழும்:
மனைவி: திருமதி ஜே.சிசிலியா
அருட்சகோதரி- சிறியபுஸ்பம் (அ.கா)
அன்ரன் (ஜேர்மனி), மேரி கலிஸ்ரா, உதயதாசன்,
அருட்சகோதரி- டிலாந்தி (அ.கா), மரிஸ்ரெலா,
ஜோயல், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

நிரந்தர முகவரி:
கிளாலி, எழுதுமட்டுவாள்
தற்காலிக முகவரி:
கோயில் வீதி, யாழ்ப்பாணம்.


வடக்கு-கிழக்கை இணைத்தல், படை முகாம்களை அகற்றல்

# கூட்டமைப்பின் கோரிக்கைகளை இந்தியா நிராகரித்துவிட்டதாக அரசு பெருமிதம்

கொழும்பு, ஜூன் 19

வடக்கு - கிழக்கை இணைப்பதற்கும் அங்குள்ள இராணுவ முகாம்களை அகற்றுவதற்கும் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தியாவிடம் விடுத்த வேண்டுகோளை அந்நாடு முற்றாக நிராகரித்து விட்டது என்று இலங்கை அரசு தெரிவித்துள்ளது.

இலங்கையின் உள்விவகாரத்தில் தலையிடாமல் கூட்டமைப்பின் வேண்டுகோளை நிராகரித்தமைக்காக அந்நாட்டுக்கு நன்றிகளைத் தெரிவிப்பதாகவும் இலங்கை அரசு மேலும் தெரிவித்துள்ளது.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய ஊடகத்துறை அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபயவர்த்தன இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இந்தியாவுக்குச் சென்று வடக்கு - கிழக்கை மீண்டும் இணைப்பதற்கும் அங்குள்ள இராணுவ முகாம்களை அகற்றுவதற்கும் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்குமாறு இந்திய அரசைக் கேட்டுக் கொண்டனர்.

ஆனால், இந்தியா அந்த வேண்டுகோளை நிராகரித்து விட்டது. அகதிகளை மீளக்குடியமர்த்தும் விடயத்துக்கு நாம் இலங்கைக்கு உதவுவோம். ஆனால், அந்நாட்டின் உள்விவகாரத்தில் தலையிடமாட்டோம் என்று இந்தியா கூறிவிட்டது.

இதற்காக நாம் இந்தியாவுக்கு எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். இந்தியா எமக்குப் பலதரப்பட்ட உதவிகளைச் செய்து வருகின்றது. எமது நாட்டின் இறைமையை மதித்தமையையிட்டு நாம் பெருமைப்படுகின்றோம்.

அகதிகளை மீளக் குடியமர்த்தும் விடயத்தில் இந்தியா கரிசனை கொள்கிறது. அதற்கு உதவி வழங்க விரும்புகிறது. ஆனால் எமது நாட்டில் சிலர் அகதிகளை விற்றுப் பிழைப்பு நடத்த முற்படுகின்றனர்.

தம்மை அகதிமுகாம்களுக்குச் செல்ல அனுமதிக்குமாறு அவர்கள் கேட்கின்றனர். அவர்கள் அங்கு செல்வது அநாவசியமானது என்பதால் நாம் அனுமதி வழங்கவில்லை.

சர்வதேச பிரதிநிதிகளை நாம் முகாம்களுக்கு அழைத்துச் செல்வது அவர்களிடமிருந்து உதவியைப் பெறவேண்டும் என்பதால். அகதிகளை விற்றுப் பிழைப்பு நடத்த நாம் எவருக்கும் அனுமதி வழங்கமாட்டோம் - என்றார். (சி)

# தாய்லாந்து ஆதிவாசிகள் மூவர் கைது!

## புலிகளுடன் தொடர்புபட்டிருந்தனராம்

கொழும்பு, ஜூன் 19

விடுதலைப் புலிகளுடன் தொடர்பு வைத்திருந்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் தாய்லாந்து ஆதிவாசிகள் மூவர் அந்நாட்டுப் பொலிஸாரால் கைதுசெய்யப் பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட ஆதிவாசிகளிடம் போலிக் கடவுச் சீட்டுக்கள் தாய்லாந்துப் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

அத்துடன், அவர்களுக்கு ஆட்கடத்தல்கள் மற்றும் ஆயுதக்கடத்தல்கள் போன்ற குற்றச் செயல்களுடன் தொடர்பு இருக்கிறது என ஆரம்பக் கட்ட விசாரணைகளில் கண்டறியப்பட்டிருக்கிறது என்றும் தெரிவிக்கப் பட்டிருக்கிறது.

கைதுசெய்யப்பட்ட 3 ஆதிவாசிகளுக்கும் ஒசாமா பின்லேடனுக்கும் தொடர்பு இருக்கலாம் என தாய்வான் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.இந்த 3 ஆதிவாசிகளும் தொடர்ந்தும் விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருகின்றனர் என மேலும் அறியமுடிகின்றது.

(சி)


## விநியோகஸ்தர் தேவை

இலங்கையின் தலைசிறந்த நிறுவனங்களில் ஒன்றான
ஹேலீஸ் கொன்ஸ்யூமர் (Hayleys Consumer) நிறுவனத்தின்
பொருட்களைச் சந்தைப்படுத்த தகுதிவாய்ந்த

★ விநியோகஸ்தர் (Distributor)

★ மொத்தவிற்பனையாளர் (Whole sale dealer)

தேவை

விண்ணப்பிக்க விரும்புவோர் 21.06.2009 ஞாயிறு
காலை 10.00 மணிமுதல் 1.00 மணிவரை
புளூஹெவன் ஹோட்டல் (Blue Heaven Hotel)
இல.70,றக்காவீதி,யாழ்ப்பாணம்.
எனும் முகவரியில்
ஹேலீஸ் கொன்ஸ்யூமர்
விற்பனைப் பிரிவுத் தலைவரை
நேரில் சந்திக்கவும்
தொ.பே: 0777 328463

HAYLEYS Consumer
Hayleys Consumer Products Ltd
25, Foster Lane, Colombo 10.


# வவுனியா நலன்புரி முகாம்களுக்கு நோர்வே மனிதாபிமான உதவி

ஜெனீவா, ஜூன்19

வவுனியாவில் அமைந்துள்ள இடம்பெயர்ந்தோர் முகாம்களுக்குத் தமது நாடு உதவியளிக்குமாக இருந்தால் அது மனிதாபிமான அடிப்படையிலேயே அமையும் என நோர்வே தெரிவித்துள்ளது.

ஜெனீவாவில் 'இன்னர் சிட்டி பிரஸ்' செய்தியாளர்கள் கேட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்த போதே நோர்வேயின் வெளியுறவுத் துறை அமைச்சர் ஜொனாஸ் கார் ஸ்டோர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

''இடம்பெயர்ந்துள்ள 3லட்சம் மக்கள், மீள் குடியமர்த்தப்படுவது அவசியம். தமது நாட்டைப் பொறுத்தவரையில், முகாம்களை விஸ்தரிப்பதற்கு உதவியளிப்பதில்லை என்றே முடிவு எடுக்கப் பட்டிக்கின்றது.

இடம்பெயர்ந்துள்ள மக்கள், உடனடியாக மீள் குடியமர்த்தப்படாவிட்டால், தமது பழைய அனுபவங்களின் படி தற்காலிக முகாம்கள் நிரந்தர முகாம்களாக மாறும் நிலையே ஏற்படும். அதற்கு இலங்கையில் இடமளிக்கப்படக் கூடாது'' என்றார். (50)

# வடமராட்சி வலய பொருள்காட்சி

வடமராட்சி, ஜூன்19

வடமராட்சி வலயக் கல்வி அலுவலக, வலயமட்டப் பொருள் காட்சி நாளை சனிக்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 3 மணிவரை பருத்தித்துறை வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

வடமராட்சி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் சி.புஸ்பலிங்கம் தலைமையில் இடம்பெறும் இப்பொருள் காட்சிக்கு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

சமூகம், விஞ்ஞானம், சங்கீதம், தொழில்நுட்பப் பாடங்களை உள்ளடக்கியதாக இப்பொருள்காட்சி அமையும் என வடமராட்சி வலய கல்வி அபிவிருத்திப் பிரிவு தெரிவித்துள்ளது.

(203-36)


இழந்த சக்தியை மீண்டும் பெற்றிடப் பாவியுங்கள்
றோயல் குளுக்கோஸ்
100% சுத்தமானது
உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும்போது குளுக்கோஸ் என்று கேட்காமல்
றோயல் குளுக்கோஸ் தாருங்கள் என்று கேட்டு வாங்குங்கள்.
PACKED BY: ROYAL Industries Colombo 12 T.P. 0777277670
அனைத்துப் பார்மஸிகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்




ஏக விநியோகஸ்தர்கள்:
288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சென்.பற்றிக்ஸ் அணியுடனான ஆட்டத்தில் ஹாட்லிக் கல்லூரி 84 ஓட்டங்களால் வெற்றி

வலி.வடக்கு, ஜூன் 19

இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் யாழ்ப்பாண மாவட்டப் பாடசாலைகளின் 17 வயதுப் பிரிவினர்களுக்கு இடையே நடைபெறும் லீக் முறையிலான ஆட்டமொன்றில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி 84 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற ஆட்டத்தில் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரியும் ஹாட்லிக் கல்லூரியும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஹாட்லிக் கல்லூரி 49.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 185 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

பிரணவன் 30 ஓட்டங்களையும், தனஞ்செயன் 28 ஓட்டங்களையும், கபிலராஜ் 25 ஓட்டங்களையும், அஜந்தன் 18 ஓட்டங்களையும், கோகுலதர்சன் 13 ஓட்டங்களையும் பெற்றதுடன் உதிரிகளாக 45 ஓட்டங்களும் பெறப்பட்டன.

யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரியைச் சேர்ந்த டிலக்சன் 10 ஓவர்கள் பந்து வீசி 02 ஓட்டமற்ற ஓவர்களுடன் 23 ஓட்டங்களுக்கு 04 விக்கெட்டுக்களையும், சஞ்சீவராஜ் 7.4 ஓவர்கள் பந்து வீசி 26 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுக்களையும், கிளின்டன், கவாஸ்கர் முறையே 18, 33 ஓட்டங்களைக் கொடுத்து தலா 01 விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

186 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சென்.பற்றிக்ஸ் கல்லூரி 23 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 101 ஓட்டங்களை மட்டும் பெற்றுக் கொண்டது.

ஜெபர்சன் 33 ஓட்டங்களையும் நோபேட் 10 ஓட்டங்களையும் பெற்றதுடன் உதிரிகளாக 22 ஓட்டங்களும் பெறப்பட்டன.

ஹாட்லிக் கல்லூரி சார்பில் பந்து வீசிய விஷ்ணுகாந் 08 ஓவர்கள் பந்து வீசி, 31 ஓட்டங்களுக்கு 04 விக்கெட்டுக்களையும், துசாந் 06 ஓவர்கள் பந்து வீசி, 23 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுக்களையும் நிஷாந்தன் 04 ஓவர்கள் பந்து வீசி, ஒரு ஓட்டமற்ற ஓவருடன் 06 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும், நிவேதன் 14 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள். (50-86)

# மூன்று ஆட்டங்களில் யாழ்.பல்கலை அணி வெற்றி

யாழ்ப்பாணம், ஜூன் 19

யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு அவையும் பல்கலைக்கழக கிரிக்கெட் அணியும் இணைந்து நடத்தும் அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையிலான 30 பந்து பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் போட்டியின் 5 ஆட்டங்களில் யாழ்.பல்கலைக்கழக அணி வெற்றியீட்டியுள்ளது.

யாழ்.பல்கலைக்கழகத்துக்கும் சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகத்துக்கும் இடையே நடைபெற்ற ஆட்டத்தில் பல்கலைக்கழக அணி 4 விக்கெட்டுக்களால் வெற்றியீட்டியது. இதில் பல்கலைக்கழக அணி 6 விக்கெட்டுக்களை இழந்து 151 ஓட்டங்களைப் பெற்றது. சென்றலைட்ஸ் அணி 9 விக்கெட்டுக்களை இழந்து 150 ஓட்டங்களைப் பெற்றது.

பற்றீசியன் அணிக்கும் யாழ்.பல்கலைக்கழக அணிக்கும் இடையே நடைபெற்ற ஆட்டத்தில் பற்றீசியன் அணி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 58 ஓட்டங்களைப் பெற்றது. பல்கலைக்கழக அணி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 69 ஓட்டங்களைப் பெற்று 11 ஓட்டங்களால் வெற்றியீட்டியது.

மற்றொரு ஆட்டத்தில் யாழ்.பல்கலைக்கழக அணியை எதிர்த்து மானிப்பாய் பரிஷ் அணி மோதியது. இதில் மானிப்பாய் பரிஷ் அணி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 87 ஓட்டங்களைப் பெற்றது. யாழ்.பல்கலைக்கழக அணி ஒரு விக்கெட்டை இழந்து 88 ஓட்டங்களைப் பெற்று 9 விக்கெட்டுக்களால் வெற்றியீட்டியது. (50)

# யாழ்.மாவட்டத்தின் இவ்வாண்டுக்கான சிறந்த தடகள வீரனாக சோபன் தெரிவு

வலி.வடக்கு, ஜூன் 19



யாழ்.மாவட்ட செயலக விளையாட்டுப் பிரிவின் வட மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் அனுசரணையுடன் பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு இடையே நடைபெற்ற தடகள விளையாட்டுப் போட்டி முடிவுகளின் அடிப்படையில் 2009ஆம் ஆண்டுக்கான யாழ்.மாவட்ட சிறந்த தடகள வீரனாக தெல்லிப்பழை பிரதேச செயலகத்தைச் சேர்ந்த சந்திரசேகரம் சோபன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

சிறந்த தட வீரனாக தெல்லிப்பழைப் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த எஸ்.சோபனும், சிறந்த தட வீராங்கனையாக நல்லூர் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த எம்.சோமசாந்தியும் சிறந்த கள வீரனாக தெல்லிப்பழைப் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த எம்.கோகுலதாசும் சிறந்த கள வீராங்கனையாக தெல்லிப்பழைப் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த எஸ்.கீர்த்திகாவும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். (50-86)

# 6 ஓட்டங்களால் மட்டக்களப்பை வெற்றி கொண்டது யாழ்.அணி

வலி.வடக்கு, ஜூன் 19

இலங்கை கிரிக்கெட் சபையினால் வடக்கு - கிழக்கு மாகாணங்களின் மாவட்ட தெரிவு அணிகளுக்கு இடையே நடைபெற்ற 50 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய கிரிக்கெட் போட்டி ஆட்டமொன்றில் யாழ்.மாவட்ட அணி 06 ஓட்டங்களினால் வெற்றி பெற்றுள்ளது.

திருகோணமலை இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற போட்டி ஒன்றில் யாழ்.மாவட்ட அணியும் மட்டக்களப்பு மாவட்ட அணியும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்.மாவட்ட அணி 42.5 ஓவர்களால் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 207 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

நிகேதன் 73 ஓட்டங்களையும் ஹரிபிரவின் 46 ஓட்டங்களையும் கோபிதன், தஜீபன் ஆகியோரும் தலா 16 ஓட்டங்களை யும் பிரணவன் 11 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர். உதிரிகளாக 35 ஓட்டங் களும் பெறப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்ட அணியைச் சேர்ந்த தவகீசன் 10 ஓவர்கள் பந்து வீசி 49 ஓட்டங்களுக்கு 06 விக்கெட்டுக்களையும், சஞ்சீவ் 06 ஓவர்கள் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற ஓவருடன் 23 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும் பஸ்ரின், சிகான் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

208 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாட களமிறங்கிய மட்டக்களப்பு அணியினர் 41:2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 201 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. பசில் 77 ஓட்டங்க ளையும் பிரசாந்த் 34 ஓட்டங்களையும் தங்கீசன் 26 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டதுடன் உதிரிகளாக 33 ஓட்டங்களும் பெறப்பட்டன.

யாழ்.மாவட்ட அணியைச் சேர்ந்த சஜீந்திரன் 10 ஓவர்கள் பந்து வீசி ஒரு ஓட் டமற்ற ஓவருடன் 26 ஓட்டங்களுக்கு 05 விக்கெட்டுக்களையும், ஹரிவதனன் 10 ஓவர்கள் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற ஓவர்களுடன் 38 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும் மிலரண்டோஜெனிபர் 4.2 ஓவர்கள் பந்து வீசி 21 ஓட்டங்களளுக்கு 02 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார் கள். (04-86)

# மாவட்ட மட்டத் தடகளப் போட்டிகளில் ஆண்கள் பிரிவில் வெற்றியீட்டியோர் விவரம்

வலி.வடக்கு, ஜூன் 19

யாழ்.மாவட்ட செயலக விளையாட்டுப் பிரிவு வட மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் அனுசரணையுடன் பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு இடையே நடத்திய ஆண்களுக்கான தடகள விளையாட்டுப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்றோர் விவரம் வருமாறு:

**100 மீற்றர் ஓட்டம்**

எஸ்.சிவசொரூபன் (கோப்பாய்), கே.காந்தராஜன் (யாழ்ப்பாணம்), ஆர்.ரவிக்குமார் (பருத்தித்துறை).

**200 மீற்றர் ஓட்டம்**

கே.காந்தராஜன் (யாழ்ப்பாணம்), ஏ.ஈ. அமல்ராஜ் (கரவெட்டி), ஆர்.ரவிக்குமார் (பருத்தித்துறை).

**400 மீற்றர் ஓட்டம்**

எஸ்.அனுசன் (தெல்லிப்பழை), பி.நேசரூபன் (கோப்பாய்), ஏ.ஈ.அமல்ராஜ் (கரவெட்டி)

**800 மீற்றர் ஓட்டம்**

பி.நேசரூபன் (கோப்பாய்), எஸ்.சிவசுகிர்தன் (கரவெட்டி), ஆர்.சேந்தன் (நல்லூர்).

**1500 மீற்றர் ஓட்டம்**

பி.நேசரூபன் (கோப்பாய்), எம்.தினேஷ் (ஊர்காவற்றுறை), பி.பிரதீபன் (தெல்லிப்பழை)

**5000 மீற்றர் ஓட்டம்**

ம.பிரதீபன் (தெல்லிப்பழை), எஸ். ஞானேஸ்வரன் (நெடுந்தீவு), எம்.தினேஷ் (ஊர்காவற்றுறை).

**10 000 மீற்றர் ஓட்டம்**

ஆர்.ஸ்ரான்லின் (சண்டிலிப்பாய்), எஸ். ஞானேஸ்வரன் (நெடுந்தீவு), அ.ஜெகதீஸ்வரன் (தெல்லிப்பழை).

**நீளம் பாய்தல்**

எம்.கோகுலதாஸ் (தெல்லிப்பழை), ஏ.ஈ.அமல்ராஜ் (கரவெட்டி), ரி.தினேஷ் (நல்லூர்).

**உயரம் பாய்தல்**

எம்.கோகுலதாஸ் (தெல்லிப்பழை), ஆர்.ஜெயரூபன் (நல்லூர்), எஸ்.சத்தியமூர்த்தி (சங்கானை).

**முப்பாய்ச்சல்**

எம்.கோகுலதாஸ் (தெல்லிப்பழை), என்.நிஷாந்தன் (தெல்லிப்பழை), என். கஜேந்திரன் (கரவெட்டி).

**குண்டு போடுதல்**

எம்.பிரதீப்குமார் (சாவகச்சேரி), எஸ். வாகீசன் (நல்லூர்), வி.ஹரிகரன் (பருத்தித்துறை).

**தட்டு எறிதல்**

வி.ஹரிகரன் (பருத்தித்துறை), எம்.பார்த்தீபன் (தெல்லிப்பழை), ஆர்.ரவிக்குமார் (பருத்தித்துறை).

**ஈட்டி எறிதல்**

ஆர்.இராஜமனோகரன் (கரவெட்டி), எஸ்.வாகீசன் (நல்லூர்), எம்.பார்த்தீபன் (தெல்லிப்பழை).

**கோலூன்றிப் பாய்தல்**

கே.கணாதீபன் (தெல்லிப்பழை), இரண்டாம் இடம் மூவர்: எஸ்.நவதீபன் (தெல்லிப்பழை), ரி.பிரான்சிஸ்டிறேக் (யாழ்ப்பாணம்), கே.நிரோஜன் (யாழ்ப்பாணம்).

**110 மீற்றர் தடைதாண்டல்**

எம்.பிரதீபன் (தெல்லிப்பழை), எஸ். சோபன் (தெல்லிப்பழை), ஆர்.ஜெனின் (யாழ்ப்பாணம்).

**400 மீற்றர் தடை தாண்டல்**

எஸ்.சோபன் (தெல்லிப்பழை), எஸ். கோபிநாத் (கோப்பாய்), எம்.சி.அபிசேகன் (யாழ்ப்பாணம்).

**4 X 100 மீற்றர் அஞ்சலோட்டம்**

கோப்பாய்ப் பிரதேச செயலகம், கரவெட்டிப் பிரதேச செயலகம், தெல்லிப்பழைப் பிரதேச செயலகம்.

**4 X 400 மீற்றர் அஞ்சலோட்டம்**

கோப்பாய் பிரதேச செயலகம், யாழ்ப்பாணப் பிரதேச செயலகம், சங்கானைப் பிரதேச செயலகம். (50-86)

## குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்



யாழ்.மாவட்டப் பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு இடையே நடைபெற்ற தடகளப் போட்டிகளில் 'கிளிக்' செய்யப்பட்ட காட்சிகள் இவை.

(படங்கள்: நேசன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் விடிவுக்காக பொது வேலைத்திட்டம் ஒன்றின் கீழ் தமிழ் அரசியல் கட்சிகள் ஒன்றுபடுவது எப்போது?

புலிப் பயங்கரவாதிகள் அழிக்கப்பட்டு விட்டனர். இலங்கையில் ஆயுதப் போராட்டம் தோற்றுப்போய் விட்டது. இனி இந்த நாட்டில் சிறுபான்மை, பெரும்பான்மை என்ற பேதம் இருக்க முடியாது என அதி உத்தம ஜனாதிபதி தமிழில் உரையாற்றுகிறார்.

இனி இந்த நாட்டில் தேசப்பற்றுள்ளவர்கள், தேசப்பற்று இல்லாதவர்கள் என்ற இரண்டு பிரிவுகள்தான் இருக்கமுடியும் எனவும் ஜனாதிபதி அறிவித்திருக்கிறார்.

அப்படியானால் தேசப்பற்றுள்ளவர்கள் யார், தேசப்பற்று இல்லாதவர்கள் யார் என்ற கேள்வி எழுகிறது. தமிழர்களிடம் இருந்த தேசப்பற்று மொழிப் பற்றாக மாறுவதற்குக் காரணம் என்ன என்பது சிங்களத் தலைமைகளால் ஆராயப்பட வேண்டிய விடயம்.

எஸ்.டபிள்யூ.ஆர்.டீ.பண்டார நாயக்கா பிரித்தானியரின் ஆட்சிக் காலத்தில் சமஷ்டி முறையிலான அரசியல் தீர்வே இலங்கைக்குப் பொருத்தமானது என்று கூறினார். அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து முழு இலங்கைக்கும் சுதந்திரம் வேண்டுமென வாதாடியவர்கள் யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ்காரர்களே. ஆங்கில மோகத்தில் மூழ்கிக் கிடந்த சிங்கள உயர்மட்டத்தினருக்கு மொழிப்பற்றையும் தேசப்பற்றையும் ஊட்டியவர் சேர்.பொன். இராமநாதனே என்றால் அது மிகையல்ல.

தமிழர்களின் தேசப்பற்றை வெறும் மொழிப்பற்றாக குறுகிய வட்டத்திற்குள் சிந்திக்கத் தூண்டியது சிங்கள அரசியல் தலைமைகளின் இன ஒடுக்குமுறை நடவடிக்கைகளே.

இதற்கு உதாரணமாக ஒரு சம்பவத்தைக் கூறலாம். அண்மையில் காலமான யாழ்.பல்கலைக்கழக ஆங்கில விரிவுரையாளரும் பத்திரிகையாளரும் விமர்சகருமான ஒ.ஜே.கனகரத்தினா ஒரு சந்தர்ப்பத்தில் ''1958ஆம் ஆண்டு இனக் கலவரத்தின் போது, எனது முதுகில் அடிவிழுந்த பின்னர் தான் நான் ஒரு தமிழன் என்பதை உணர்ந்து கொண்டேன். அது வரையும் நான் ஒரு இலங்கையன் என்று எண்ணியிருந்தேன் '' எனக் கூறியிருந்ததை இங்கே குறிப்பிடலாம்.

இப்பொழுது தேசபற்றுள்ளவர்கள் யார், தேசப்பற்று இல்லாதவர்களாக விளங்கியவர்கள் யார் என்ற கேள்விக்கு எவராவது பதிலளிக்க இயலுமா?

இலங்கை அரசியலில் பதவியில் உள்ளவர்கள் கூறுவதை கண்ணை மூடிக் கொண்டு ஏற்றுக்கொள்பவர்கள் மட்டும் தான் தேசப்பற்றாளர்கள். பதவியிலிருப்பவர்கள் அல்லது அதிகாரத்திலிருப்பவர்கள் கூறுவதை ஏற்றுக் கொள்ளாதவர்கள் அல்லது விமர்சிப்பவர்கள் தேசத்துரோகிகள் என்ற நிலைப்பாட்டையே அக்கருத்து வெளிப்பாடு அடையாளப் படுத்துகிறது.

இது சிங்கள அரசியல் தலைமைகளுக்கு மட்டுமல்லாது தமிழ் அரசியல் தலைமைகளுக்கும் பொருந்தும்.

பயங்கரவாதிகளின் பிடியில் சிக்கியிருந்த அப்பாவித் தமிழ் மக்கள் வீரமிக்க படையினரால் மீட்டெடுக்கப்பட்டு விட்டனர். தாம் விரும்பியவாறு விரும்பிய இடத்தில் புதுமாத்தளன் கடற்கரையில் இயற்கைக் கடனைக் கழித்த மக்கள், இயற்கைக் கடன் கழிப்பதற் காக மணித்தியாலக் கணக்கில் வரிசையில் நிற்கிறார்கள். (இதை நான் சொல்லவில்லை. இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் முன்னாள் நீதியரசரும் தற்போதைய அரசியல் வாதிகள் சிலரும் கூறியுள்ளனர்).

யாழ்.மாநகர சபைக்கும், வவுனியா நகர சபைக்கும் தேர்தல் நடைபெறவுள்ளது. இந்தத் தேர்தலில் அரசாங்கத்துடன் இணைந்தா, தனியாகவா போட்டியிடுவது என முன்னாள் போரளிகளான தமிழ்க் கட்சிகள் யோசித்துக் கொண்டிருப்பதாகத் தகவல்கள் வேட்பாளர் நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்ட பின்னர் எல்லாம் தெரியவந்துவிடும்.

விடுதலைப் புலிகள் அரசாங்கத்தினால் தோற்கடிக்கப்பட்டு விட்டனர். தற்போது மேய்ப்பன் இல்லாத மந்தைகளின் நிலையிலுள்ள ஈழத் தமிழர்களை வழி நடத்த வேண்டிய, வழி காட்ட வேண்டிய பாரிய பொறுப்பு தமிழ் அரசியல் வாதிகள், புத்தி ஜீவிகள், ஊடகவியலாளர்கள் அனைவரையும் சார்ந்துள்ளது.

ஈழம் என்ற பெயருடன் கட்சிகள் இயங்க அனுமதிக்கக் கூடாது என சிங்கள அரசியல் வாதிகள் சிலர் கூறியுள்ளனர். ஈழம் என்பது இலங்கையை (இலங்கை முழுவதையும்) குறிக் கிறது என்பதை இந்தச் சிங்கள அரசியல் வாதி களுக்குப் புரிய வைக்க வேண்டும்.

தமிழ் அரசியல்வாதிகள் தமது கோபதாபங்கள், விருப்பு வெறுப்புகள் எல்லாவற்றையும் ஒரு புறத்தில் தூக்கி வைத்து விட்டு இனத்தின் பெயரால் ஒன்றுபட வேண்டிய தருணம் வந்து விட்டது என்று கருதலாம்.

தமிழ் அரசியல்வாதிகள் ஒவ்வொருவருக்கும், ஒவ்வொரு கட்சிக்கும் பல்வேறு விதமான சிந்தனைகள், கொள்கைகள் இருக்கலாம். ஆனால் இவையெல்லாவற்றையும் சிறிது காலத்திற்கு ஓரங்கட்டி வைத்து விட்டு மக்களின் பெயரால் ஒன்றுபட வேண்டிய தருணம்.

இது இலங்கைத் தமிழ் அரசியல் வரலாற்றில் தமிழ் அரசியல் வாதிகள் மூன்று சந்தர்ப்பங்களில் ஒன்றுபட்டுள்ளனர். முதலாவது இலங்கை அரசாங்கம் தனிச்சிங்கள்ச் சட்டத்தை நாடாளுமன்றத்தில் கொண்டு வந்தபோது தமிழ் அரசியல் வாதிகள் அனைவரும் ஒன்று சேர்ந்து தனிச்சிங்களச் சட்டத்தை எதிர்த்தனர். அடுத்தது தமிழர் விடுதலைக் கூட்டணி உருவாக்கப்பட்ட போது செல்வா, ஜி.ஜி, சுந்தரலிங்கம் ஆகியோருடன் தொண்டமானும் இணைந்து கொண்டார்.

மீண்டும் திம்பு பேச்சு வார்த்தையின் போதும் ஈழதேசிய விடுதலை முன்னணி விடுதலைப் புலிகள், ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ், ஈரோஸ், புளொட், தமிழர் விடுதலைக்கூட்டணி என்பன ஒரே மேடையில் அமர்ந்து இலங்கை அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தின. அண்மைக்காலங்களில் இலங்கைக்கு விஜயம் செய்த வெளிநாட்டு இராஜதந்திரிகள் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு, அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா, ஆனந்த சங்கரி மற்றும் சிவநேசதுரை சந்திர காந்தன் போன்ற பலருடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டதாக ஊடகங்களில் தகவல் வெளியாகி இருந்தன.தமிழ் அரசியல் வாதிகள் தம்மிடையே கருத்து முரண்பட்டு நிற்கும் இந்த நிலைமை இனியும் தொடருவதற்கு இடமளிக்கக் கூடாது.ஒரு பொது வேலைத்திட்டத்தின் கீழ் ஒன்று படுவது பற்றி தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீ காந்தா அண்மையில் ஆனந்தசங்கரி, சித்தார்த்தன், சிறீதரன் ஆகியோருடன் பேச்சுவார்த்தை நடத்தியிருப்பதாக பி.பி.சி தமிழோசைக்குப் பேட்டியளித்துள்ளார். ஸ்ரீகாந்தாவின் இந்த முயற்சி வரவேற்கப்பட வேண்டிய ஒன்று என்ற கருத்து பலரிடம் நிலவுகிறது.

காலத்தின் தேவை கருதி பொது வேலைத்திட்டமொன்றின் கீழ் தமிழ் அரசியல் வாதிகள் ஒன்றுபட வேண்டியதன் அவசியத்தை புத்திஜீவிகளும், மதப்பெரியார்களும் வலியுறுத்த வேண்டும். ஒற்றுமை என்றால் என்ன என்று தெரியாவிட்டால், ஒற்றுமை என்றால் என்ன என்பதனை சிங்களக் கட்சிகளிடமிருந்தாவது கற்றுக் கொள்வது நல்லது. ஆளும் கட்சியென்றாலென்ன,(யார் பதவியிலிருந்தாலும்) எதிர்க்கட்சி என்றால் என்ன, இடதுசாரிகள் என தம்மைக் கூறிக்கொள்பவர்களாக இருந்தால் என்ன ஒரே ஒரு விடயத்தில் மட்டும் ஒற்றுமையாகச் செயல்படுகின்றனர். தமிழர் மீதான ஒடுக்கு முறை என்ற விடயத்தில் மட்டும் சிங்களக் கட்சிகள் அனைத்தும் ஒற்றுமையாகச் செயல்படுகின்றன.

இலங்கை சுதந்திரமடைந்த நாள் முதல் இலங்கையில் நடைபெற்று வருவது இது தான்.

## காலத்தின் தேவை அறிந்து செயற்படாவிடில் அது தரும் விளைவுகளை அனுமதிக்க நேரிடும்

பிரபாகரன் கொல்லப்பட்ட செய்தி வெளியானவுடன் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதிக்கு தொலைபேசி மூலம் வாழ்த்துத் தெரிவித்துள்ளார். இலங்கையில் இடம் பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பாக ஐ.நா.சபையில் விவாதம் இடம்பெற்றால் ஐக்கிய தேசியக் கட்சி அரசுக்கு ஆதரவளிக்கும் என தெரிவித்துள்ளது. கிருஷாந்தி கொலை செய்யப்பட்டபோது வீதியில் இறங்கிப் போராட்டம் நடத்திய பழம்பெரும் இடதுசாரித் தலைவர் வாசுதேவ நாணயக்கார ஜனாதிபதியின் ஆலோசகராக செயல்பட்டு வருகிறார்.

தமிழ் அரசியல் கட்சிகளை ஒன்றுபடுத்த எடுத்த சில முயற்சிகள் வெற்றியளிக்கவில்லையென அறிந்து கொள்ளக்கூடியதாக உள்ளது. ஒட்டு மொத்த தமிழினத்தின் நன்மை கருதியாவது கடந்த கால அனுபவங்களை மனதில் கொண்டு தமிழ் அரசியல்வாதிகள் ஒன்றுபட முன்வருவார்களா?

இலங்கை சுதந்திரமடைந்த காலந்தொட்டு இலங்கை அரசியலில் இரு விதமான நிலைப்பாடுகள் காணப்பட்டன. ஒன்று தமிழ்த் தேசியம். மற்றையது சிங்கள அரசுகளுடன் இணைந்து தான் தமிழர்கள் தமது உரிமைகளைப் பெற்றுக் கொள்ளலாம் என்ற நிலைப்பாடு.

**ந.பரமேஸ்வரன்**

---

## மரண அறிவித்தல்



### மீனாட்சி அம்மா அருணாசலம்

வேலணையைப் பிறப்பிடமாகவும், கருவில், பண்டாரவளை, கொக்குவில், கொழும்பில் வசித்தவருமான மீனாட்சி அம்மா அருணாசலம் 16.06.2009 அன்று சிவபதம் பெற்றார். அன்னார் காலம்சென்ற பண்டாரவளை டிக்கறாவத்தோட்ட முன்னாள் உரிமையாளர் சுப்பையா அருணாசலத்தின் அன்பு மனைவியும், காலம்சென்ற முருகேசு-செல்லாச்சி தம்பதிகளின் மகளும், காலம் சென்ற சுப்பையா, பொன்னம்மாவின் மருமகளும், காலம் சென்றவர்களான தம்பிப்பிள்ளை, சின்னையா, நாகராஜா, தில்லையம்மா, நாகபூரணி, குமாரசாமி, மாணிக்கவாசகர் ஆகியோரது சகோதரியும் காலம் சென்ற சாரதா மற்றும் ஆனந்தராஜா, மகேந்திரராஜா, சரோஜாதேவியின் அன்புத் தாயும் காலம் சென்ற நாகையா மற்றும் பவானி, பரந்தா, நச்சினார்க்கினியன் ஆகியோரது மாமியும், சங்கர், சுகந்தி, சாந்தினி சிவநாதன், குமரன், மிதுரா, மீனோரா, லாவண்யா, நாரணி சர்வேந்திரன், பூரணி அபராஜிதா, சுபாஷினி ஆகியோரின் அன்புப் பேத்தியும், சரண்யா, சொரூபன், ரஷிகா, மயூரன், வாஹினி, நிவேதா, கார்த்திக், நர்மதா ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் 20.06.2009 சனிக்கிழமை அன்று 9.00 மணிமுதல் 5.00 மணி வரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 21.06.2009 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் இறுதிக் கிரியை நடைபெற்று பின்னர் 11.00 மணிக்கு கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்: குடும்பத்தினர்

---

## கிராம அபிவிருத்திச் சங்க பொன்விழா நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூன் 19

நீர்வேலி ஸ்ரீ முருகன் மாதர் சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கமும், நீர்வேலி தெற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கமும் இணைந்து நடத்தும் பொன்விழா நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை காலை 8.30 மணிக்கு நீர்வேலி கந்தசுவாமி கோயில் வடக்கு வீதியில் நடைபெறவுள்ளது.

திருமதி ருக்மணி ஆனந்தவேல் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் பிரதம விருந்தினராகவும், வலி.கிழக்கு பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்ராஸ், யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.சிவலிங்கம், மக்கள் வங்கி வடவலய உதவிப் பொதுமுகாமையாளர் ரி.கே.ஆனந்தராஜா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர்.

(204)

---

## திருத்தி வாசிக்கவும்

### திருமதி பூநலியாளா இம்மனுவேல் (யோகம்மா)

18.06.2009ஆம் திகதியன்று வெளியான உதயன் பத்திரிகையில் 6ஆம் பக்கத்தில் பிரசுரமாகியுள்ள மேற்படி விளம்பரத்தில் தகவல் தந்தவரின் பெயர் மோிசேஸ் (திருச்செல்வம்) என்றிருப்பது தவறாகும். அதனை மோசேஸ் (திருச்செல்வம்) என்று திருத்தி வாசிக்கவும்.

---

## மரண அறிவித்தல்

### தம்பிப்பிள்ளை செல்வராஜா



உடுவிலைப் பிறப்பிடமாகவும் சண்டிலிப்பாயை வசிப்பிடமாகவும் தற்போது பட்டினசபை வீதி, மானிப்பாயில் வசித்து வந்தவருமான தம்பிப்பிள்ளை செல்வராஜா 16.06.2009 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும் தவசி - காலஞ்சென்ற காமாட்சி தம்பதியரின் அன்பு மருமகனும் இரத்தினேஸ்வரியின் அன்புக் கணவரும் நீலாஜினி (லண்டன்), ஜெகநீதன் (உத்வி விரிவுரையாளர், வவுனியா வளாகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்), தர்ஷினி (கனடா), கஜநீதன் (2007 கணிதப்பிரிவு மாணவன், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பிரதாபன் (லண்டன்), விஜயசங்கர் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும் தேவராஜன், இராஜரட்ணம், தங்கராஜா, அருந்தவமலர், வசந்தராஜா ஆகியோரின் அன்புச் சகோதரனும் இன்பஜோதி, அம்பிகாதேவி, ஞானரஞ்சினி, தனபாலசிங்கம், காலஞ்சென்ற உஷாராணி மற்றும் புவனேஸ்வரி, பரமேஸ்வரி, இராஜேஸ்வரி, கோபாலசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் சுந்தரமூர்த்தி, காலஞ்சென்ற குமாரசாமி மற்றும் கந்தசாமி, தங்கமலர் ஆகியோரின் அன்புச் சகலனும் அபிருஜன், இலக்கியா ஆகியோ[illegible] பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (19.06.2009) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பட்டினசபை வீதி, மானிப்பாயிலுள்ள அவருடைய இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பட்டினசபை வீதி,
மானிப்பாய். (86300)

தகவல்:
செ.ஜெகநீதன் (மகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக் கடற்படையால் இராமேஸ்வரம் மீனவர் தாக்கப்படுவதை நினைத்தால் இரத்தம் கொதிக்கிறது

## கனிமொழி எம்.பி. ஆவேசம்

சென்னை, ஜூன் 19

இராமேஸ்வரம் மீனவர்கள் இலங்கைப் படையினரால் தாக்கப்படுகின்றமையை நினைக்கும்போது இரத்தம் கொதிக்கிறது. மீனவ மக்கள் இன்று ஏராளமான சிக்கல்களைச் சந்தித்து வருகின்றனர்.

இவ்வாறு கவிஞர் கனிமொழி எம்.பி. ஆவேசத்துடன் தெரிவித்தார்.

தமிழக மீனவர்களுக்கு மீன்பிடிக்கும் யுக்திகளை பயிற்றுவிக்க வெளிநாட்டு மீன்பிடி வல்லுநர்களைக் கொண்ட பயிற்சி மையத்தை சென்னையில் நேற்றுமுன்தினம் திறந்துவைத்துப் பேசிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

விழாவில் மேலும் அவர் பேசியவை வருமாறு -

கனவு மெய்ப்பட வேண்டும் என்று கூறிய பாரதியின் வரிகள் இன்று எனக்கு நினைவுக்கு வருகிறது. இந்த மீன்வள தொழில்நுட்பம் மற்றும் பயிற்சி நிலையத்தைத் திறக்கவேண்டும் என்ற கனவு முதல்வர் கருணாநிதி, அமைச்சர்கள் மற்றும் எனக்கும் இருந்தது. அந்தக் கனவு இன்று நிறைவேறி விட்டது.

மீனவ மக்கள் இன்று ஏராளமான சிக்கல்களை சந்தித்து வருகின்றனர். இயற்கை சீற்றத்தால் மீனவர்களின் வாழ்க்கையில் ஏற்பட்ட துன்பங்களை நினைக்கும்போது மனம் வேதனைப்படுகிறது. இராமேஸ்வரத்தில் மீனவர்களுக்கு இலங்கைப் படையினரால் ஏற்பட்டுள்ள துன்பத்தை பற்றி நினைக்கும்போது இரத்தம் கொதிக்கிறது.

இராமேஸ்வரம் மீனவர்களின் நிலை குறித்து நேற்று முதல்வர் கருணாநிதி, பிரதமருக்குக் கடிதம் எழுதியுள்ளார். உலகின் மற்ற நாடுகளில் மீன்பிடி தொழிலில் நல்ல வருமானம் கிடைத்து வருகிறது. நமது நாட்டில் போதிய தொழில்நுட்பம் இல்லாததால் மீனவர்களால் சாதிக்க முடியவில்லை. போதிய பயிற்சி இருந்தால் மீன்பிடித் தொழிலில் நமது மீனவர்களாலும் சாதிக்க முடியும். அதற்காக டாடா நிறுவனம் அரசுடன் சேர்ந்து செயற்பட உள்ளது.

இதன் மூலம் வெளிநாட்டு மீன்பிடி வல்லுநர்களை கொண்டு நமது மீனவர்களுக்குச் சிறப்பாக பயிற்சி அளிக்கப்படும். மீனவர்களுக்கு நவீன மீன்பிடிக் கருவிகளை உபயோகிக்கும் முறை, ஆள்கடல் மீன்பிடிக்கும் முறை, நவீன வலைகள் மூலம் பயிற்சி போன்றவை அளிக்கப்படும். இதன் மூலம் ஏராளமான மீனவர்கள் பலனடைவார்கள்.

அதே போல மீன்பிடி இறங்கு தளம் பல இடங்களில் மோசமாக உள்ளது. வெளிநாடுகளில் உள்ளது போல நமது மீன்பிடி இறங்கு தளங்களும் சிறப்பாகச் சீர்படுத்த அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

முதல்வர் கருணாநிதி இந்தப் பயிற்சி மையம் குறித்து தினமும் அதிகாரிகளிடம் விசாரித்து ஆக்கமும், ஊக்கமும் அளித்தார்.

மீனவர்கள் இந்தப் பயிற்சி நிலையத்தை எந்த அளவிற்குப் பயன்படுத்த முடியுமோ அந்த அளவிற்கு பயன்படுத்தி வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ள வேண்டும் - என்றார்.



தமிழக மீனவர்களுக்கு மீன்பிடிக்கும் யுக்திகளை பயிற்றுவிக்க வெளிநாட்டு மீன்பிடி வல்லுநர்களைக் கொண்ட பயிற்சி மையத்தை சென்னையில் நேற்றுமுன்தினம் கனிமொழி எம்.பி. திறந்துவைத்தார். அதன்போது மீனவர் ஒருவர் மீனொன்றைத் தூக்கிக் காட்டுவதை கனிமொழி பார்வையிடுகின்றபோது........

# போர் ஓய்ந்தாலும் தமிழ் இளைஞர், யுவதிகளை கடத்திச் சித்திரவதை செய்வது தொடர்கின்றது!

## தமிழகம் சென்ற அகதிகள் தெரிவிப்பு

இராமேஸ்வரம், ஜூன் 19

இலங்கையில் தற்போது போர் ஓய்ந்து விட்டாலும் இலங்கை இராணுவத்தினர் வெள்ளை நிற வான்களில் வந்து இளம்பெண்களை கடத்திச் சென்று பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்துவதும், இளைஞர்களை கடத்திச் சென்று சித்திரவதைப் படுத்துவதும் தொடர்ந்து நடந்து வருகின்றன. இதனால் உயிருக்கு பயந்து நாம் இங்கு தப்பி வந்துவிட்டோம்.

- இவ்வாறு தமிழகம் சென்ற ஈழத் தமிழ் அகதிகள் தெரிவித்துள்ளனர்.

இராமநாதபுரம் மாவட்டம் தனுஷ்கோடி அருகே நடுக்கடலில் 3ஆவது மணல் திட்டில் இறக்கிவிடப்பட்டு உணவு தண்ணீரின்றித் தவித்த 5 ஈழ அகதிகளை இந்தியக் கடற்படையினர் நேற்றுமுன்தினம் மீட்டனர்.

பசி, பட்டினியுடன் இருந்த அவர்களுக்கு கடற்படையினர் முதலில் உணவும், தண்ணீரும் கொடுத்தனர்.

பின்பு நடத்திய விசாரணையில், அவர்கள் மட்டக்களப்பை சேர்ந்த மோகனசுந்தரம் (வயது - 33), அவருடைய மனைவி துஷ்யந்தி (வயது - 31), வவுனியா தருணைக்குளத்தைச் சேர்ந்த பேரின்பம் (வயது - 31), அவருடைய மனைவி திரேசாள் ரோஸ் (வயது - 25), இராமநாதபுரம் மாவட்டத்திலிருந்து பேசாலை சென்ற கமலதாசன் என்று தெரியவந்தது.

இவர்களில் மோகனசுந்தரம் என்பவர் கூறியவை வருமாறு -

கடந்த 15ஆம் திகதி தலா 25 ஆயிரம் ரூபா வீதம் கொடுத்து மன்னாரிலிருந்து புறப்பட்டு வந்தோம். 16ஆம் திகதி அதிகாலை 3 மணியளவில் கடல் பகுதியில் உள்ள மணல் திட்டில் இறக்கிவிட்டுச் சென்று விட்டனர். காலையில் விடிந்த பின்னர்தான் எங்களை இறக்கி விட்ட இடம் நடுக்கடல் என்பது தெரியவந்தது.

நேற்று முன்தினம் (16ஆம் திகதி) முழுவதும் தவித்தோம். வழக்கத்தை விட கடல் பகுதியில் கொந்தளிப்பு அதிகமாக இருந்ததுடன் காற்றும் அதிகம் வீசியது. நாங்கள் முழங்கால் அளவு தண்ணீரில் நின்றபடி தத்தளித்தோம்.

தொடர்ந்து தண்ணீர் பெருகியதால் நாங்கள் கடலில் மூழ்கி இறந்து விடுவோம் என்று கருதினோம். நேற்றுக்காலை (18ஆம் திகதி) மணல் திட்டில் தேங்கிய தண்ணீர் வடிந்தது. அப்போது தான் இந்தியக் கடற்படையினர் வந்து எங்களை மீட்டனர் - என்று தெரிவித்தார்.

மேலும் அவர் கூறுகையில் -

நான் கடந்த 96ஆம் ஆண்டு முதல் 2004ஆம் ஆண்டு வரை விடுதலைப் புலிகளின் கருணா படைப் பிரிவில் முக்கிய பொறுப்பில் இருந்தேன். 2004ஆம் ஆண்டு எனக்கு திருமணமான நிலையில் கருணா படையிலிருந்து விலகி மனைவியுடன் மட்டக்களப்புப் பகுதியில் வசித்து வந்தேன்.

தற்போது அங்கு போர் ஓய்ந்து விட்டாலும் இலங்கை இராணுவத்தினர் வெள்ளை நிற வான்களில் வந்து இளம்பெண்களை கடத்திச் சென்று பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்துவதும், இளைஞர்களை கடத்திச் சென்று துன்புறுத்துவதும் தொடர்ந்து நடந்து வருகின்றன. இதனால் உயிருக்கு பயந்து நானும் எனது மனைவியும் இங்கு தப்பி வந்துவிட்டோம் - என்று தெரிவித்தார்.

பின்னர் அவர்கள் 5 பேரும் தனுஷ்கோடி பொலிஸில் ஒப்படைக்கப்பட்டனர்.

# இந்தியாவில் பன்றிக்காய்ச்சல் 35 பேருக்கு தொற்றியது

புதுடில்லி, ஜூன் 19

டில்லியில் மேலும் 4 பேருக்கு பன்றிக்காய்ச்சல் தொற்றியிருக்கின்றமை பரிசோதனை முடிவுகளில் தெரியவந்துள்ளது. இதையடுத்து, நாடு முழுவதும் இந்நோய் தாக்கத்துக்குள்ளானோரின் எண்ணிக்கை 35 ஆக உயர்ந்துள்ளது.

டில்லியில் மட்டும் இந்நோய் தொற்றுள்ளோரின் எண்ணிக்கை 10 ஆக உயர்ந்துள்ளது. இவர்களில் 5 பேர் ஏற்கனவே வீடு திரும்பி விட்டனர், மற்றவர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மேலும் 8 பேருக்கு ரத்தப் பரிசோதனை செய்யப்பட்டுள்ளது. இன்னும் முடிவு வெளியாகவில்லை. கடந்த செவ்வாய் வரை, 315 பேரிடம் ரத்த மாதிரி எடுக்கப்பட்டுள்ளது என சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

# மகாத்மா காந்தியை இழிவுபடுத்திப் பேசுவதா? மாயாவதியை மன்னிப்பு கேட்கக் கோருகிறது காங்.

புதுடில்லி, ஜூன் 19



மகாத்மா காந்தியை இழிவுபடுத்தி பேசியதற்காக உத்தரப் பிரதேச முதல்வர் மாயாவதி மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று காங்கிரஸ் கோரிக்கை விடுத்துள்ளது.

தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றம் குறித்து மகாத்மா காந்தி பாசாங்கு செய்தார் என மாயாவதி சமீபத்தில் கருத்துத் தெரிவித்திருந்தார். இதற்கு காங்கிரஸ் கண்டனம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அக்கட்சியின் செய்தித்தொடர்பாளர் மனிஷ் திவாரி கூறியவை வருமாறு -

மகாத்மா காந்தி பாசாங்கு செய்பவர் என்று மாயாவதி கூறியமை துரதிருஷ்டவசமானது. இது என்ன அரசியல் பாரம்பரியம்? ஐ.நா. சபை கூட, மகாத்மா காந்தி பிறந்தநாளை சர்வதேச அகிம்சை தினமாகக் கொண்டாடுகிறது.

அத்தகைய மகாத்மா காந்தி பற்றி மாயாவதி பேசியிருப்பது, காந்தியை உதாரண புருஷராகக் கருதும் லட்சக்கணக்கானோரின் உணர்வுகளை புண்படுத்துவதாக உள்ளது. அவர் தனது பொறுப்பற்ற கருத்தை திரும்பப் பெறவேண்டும். நாட்டு மக்களிடம் உடனடியாக மன்னிப்புக் கேட்க வேண்டும்.

மகாத்மா காந்தியின் போதனைகள் இந்தியாவில் மட்டுமின்றி, உலகம் முழுவதிலும் கோடிக் கணக்கானோரை ஈர்த்துள்ளது. அப்படிப்பட்ட தலைவர்களைப் பற்றிப் பேசும்போது, மாயாவதி தனது பேச்சிலும், வார்த்தைகளிலும் கட்டுப்பாட்டைக் கடைப்பிடிக்க வேண்டும் - என்றார்.

# தமிழருக்கு மறுவாழ்வளிக்க இந்தியா இலங்கையை நிர்ப்பந்திக்க வேண்டும்

## ராம்சேனா வலியுறுத்து

சென்னை, ஜூன் 19

இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு இலங்கை அரசு போதிய நிவாரணம் வழங்கவில்லை. அவர்களுக்கு மறுவாழ்வும் அளிக்கவில்லை. இதை இந்திய அரசு கவனத்தில் எடுத்து இலங்கை அரசை நிர்ப்பந்திக்க வேண்டும்.

- இவ்வாறு கர்நாடக மாநிலத்தை தலைமையாகக் கொண்டு செயற்படும் ராம்சேனா அமைப்பின் தலைவர் பிரமோத் முத்தாலிக் வலியுறுத்தியுள்ளார்.

கோவையில் நேற்று செய்தியாளர்களிடம் பேட்டியளித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார். மேலும் அவர் கூறியவை வருமாறு -

இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு இலங்கை அரசு போதிய நிவாரணம் வழங்கவில்லை. அவர்களுக்கு மறுவாழ்வும் அளிக்கவில்லை. இதை இந்திய அரசு கவனத்தில் எடுத்து இலங்கை அரசை நிர்ப்பந்திக்க வேண்டும்.

இலங்கை இராணுவத்தால் இடிக்கப்பட்ட 469 கோயில்களை மீண்டும் கட்டிக்கொடுக்க வேண்டும். இல்லையேல் இந்து மக்கள் கட்சியுடன் சேர்ந்து போராட்டம் நடத்துவோம்.

அமெரிக்க அரசு மத சுதந்திர விசாரணை குழு ஒன்றை ஏற்படுத்தியுள்ளது. இந்தக் குழு உலகம் முழுவதும் பல நாடுகளுக்கு சென்று கிறிஸ்தவர் மற்றும் சிறுபான்மையினர் மீதான தாக்குதல் குறித்து விசாரித்து, அமெரிக்க அரசுக்கு அறிக்கை வழங்கி வருகிறது.

இக்குழுவுக்கு சீன அரசு தடை விதித்துள்ளது. இந்திய அரசும் தடை விதிக்கவேண்டும். இந்தியாவுக்குள் நடக்கும் எல்லாச் சம்பவங்கள் குறித்தும் விசாரணை நடத்தி தேவையான நடவடிக்கை எடுக்க இந்திய அரசுக்கு வலிமையுள்ளது. எனவே, இன்னொரு நாடு இதில் தலையிட அவசியம் இல்லை. இதை மீறி இந்திய அரசு அக்குழுவை நம் நாட்டுக்குள் அனுமதித்தால் அதை எதிர்த்து போராட்டம் நடத்துவோம் - என்றார்.

# இந்தியாவின் கடனை அடைக்க பிரதமருக்கு 5 ஆயிரம் ரூபா அனுப்பிய கூலித் தொழிலாளி

திருச்சி, ஜூன் 19



இந்தியாவின் கடனை அடைப்பதற்கு என்று குறிப்பிட்டு 5 ஆயிரம் ரூபாவை பிரதமர் மன்மோகன் சிங்குக்கு திருச்சியைச் சேர்ந்த கூலித் தொழிலாளி ஒருவர் அனுப்பியுள்ளார்.

இராமநாதபுரம் மாவட்டம் பொந்தம்புளி கிராமத்தைச் சேர்ந்தவர் முத்துராமலிங்கம் (வயது - 31). இவரது மனைவி மாலதி. 2 மகன் மற்றும் ஒரு மாதப் பெண் குழந்தை உள்ளது. தற்போது திருச்சியில் குடும்பத்துடன் வசிக்கும் முத்துராமலிங்கம், சந்தையில் சுமை தூக்கும் தொழிலாளியாக உள்ளார்.

இவர், கடந்த மே 8ஆம் திகதி இந்தியாவின் கடனை அடைப்பதற்கு என்று குறிப்பிட்டு 5 ஆயிரம் ரூபாவை பிரதமர் மன்மோகன் சிங்குக்கு அனுப்பினார். அதைப் பிரதமர் நிவாரண நிதியில் சேர்த்துக் கொண்டார்.

அவருக்கு நன்றி தெரிவித்து பிரதமர் அலுவலகத்திலிருந்து கடிதம் அனுப்பியுள்ளனர். ஒரு நாளைக்கு 100 முதல் 150 ரூபா வரை சம்பளம் பெறும் இவர், நாட்டின் கடனை அடைக்க பணம் அனுப்பியுள்ளார்.

இதுபற்றி முத்துராமலிங்கம் கூறுகையில் -

நம் நாடு வெளிநாடுகளில் வாங்கியிருக்கும் கடனால், ஒவ்வொரு இந்தியனுக்கும் ரூபா 30 ஆயிரம் ரூபா கடன் உள்ளது என்று பத்திரிகையில் படித்தேன். எனவே, [illegible] கடனை அடைக்க என்று எழுதி [illegible] அனுப்பினேன் - என்றார்.




# இந்திய கடற்பகுதியில் மீன் பிடித்த இலங்கை மீனவர்கள் 5 பேர் கைது!

இராயபுரம், ஜூன் 19

இந்தியக் கடற்பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த இலங்கை மீனவர்கள் 5 பேர் இந்தியக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு சென்னை கொண்டு வரப்பட்டனர். அங்கு அவர்களிடம் விசாரணை நடக்கிறது.

இந்தியக் கடலோரக் காவல் படையினர், தங்கள் கப்பலில், ஆந்திர மாநிலம் இராமையா பட்டினம் கடற்பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை ரோந்து சென்றனர். அப்போது, இலங்கையைச் சேர்ந்த படகொன்றில் 5 மீனவர்கள் இந்திய எல்லைக்குள் மீன் பிடித்துக் கொண்டிருந்தனர்.

அந்தப் படகை கடலோரக் காவல் படையினர் [illegible] அவர்களையும் படகையும் சென்னை காசிமேடு மீன்பிடித் துறைமுகத்துக்குக் கொண்டுவந்தனர்.

இலங்கை மீனவர்கள் 5 பேரும், இராயபுரம் உதவிப் பொலிஸ் கமிஷனர் மாடசாமி, இன்ஸ்பெக்டர் ஜெய்சிங் ஆகியோரிடம் ஒப்படைக்கப்பட்டனர். காசிமேடு பொலிஸார் இதுபற்றி வழக்குப் பதிவு செய்து, விசாரணை மேற்கொண்டனர்.

இந்தியக் கடல் பகுதிக்குள் அனுமதியின்றி மீன் பிடித்தனர் என்ற குற்றச்சாட்டில் 5 பேரும் கைது செய்யப்பட்டனர். பொலிஸ் விசாரணையில், அவர்கள் அனைவரும் இலங்கையில் உள்ள திரிகோணமலையைச் சேர்ந்தவர்கள் என்பது தெரியவந்தது. அவர்களது பெயர்கள், கபிலானந்தா (வயது - 35), லலிதா குமரா (வயது - 32), தேன் தீரன் (வயது - 37), விமல் சந்த் (வயது - 28), கலூம் சேக் (வயது - 30), என்பதும் தெரியவந்தது. அவர்களிடம் பொலிஸார் மேலும் விசாரணை நடத்தி வருகிறார்கள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வட அயர்லாந்து இனவெறித் தாக்குதலுக்கு பிரிட்டிஷ் பிரதமர் பிறவுண் கடும் கண்டனம்

## நூற்றுக்கணக்கான ருமேனியர்கள் இடம்பெயர்வு

பெல்பாஸ்ட், ஜூன் 19

பிரிட்டனின் கட்டுப்பாட்டிலுள்ள வட அயர்லாந்து மாநிலத்திலுள்ள பெல்பாஸ்ட் நகரில், ருமேனியர்கள் மீது மேற்கொள்ளப்பட்டுள்ள இனவெறித் தாக்குதல்களுக்கு, பிரிட்டிஷ் பிரதமர் கோர்டன் பிறவுண் உட்பட அநேக அரசியல் தலைவர்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

கடந்த இரு வாரங்களாக நீடித்துவரும் இனவெறித் தாக்குதல்களால் நூற்றுக்கு மேற்பட்ட ருமேனியர்கள் தம் வீடுகளை விட்டு வெளியேறியுள்ளார்கள். குண்டர்கள் வீடுகளுக்குள் புகுந்து, வெளியேறிவிடுமாறு ருமேனியர்களை துப்பாக்கிமுனையில் மிரட்டி வருகிறார்கள்.

ருமேனியர்கள் வசிக்கும் பெருந்தொகையான வீடுகளின் கதவுகளும், ஜன்னல்களும் குண்டர்களால் உடைத்தெறியப்பட்டுள்ளன. தாக்குதல்களில் காயமடைந்த பலர் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். வீடுகளை விட்டு வெளியேறியோருக்கு தற்காலிக தங்குமிடவசதிகள் அளிக்கப்பட்டுள்ளன. அதேவேளை, அப்பகுதிகளில் பலத்த பொலிஸ பாதுகாப்பும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

பெல்பாஸ்ட் நகரப் பிராந்தியத்திலிருந்து செவ்வாய்க்கிழமை, இருபது குடும்பங்கள் வெளியேறின. இக்குடும்பங்கள் அன்றிரவு கிறிஸ்தவ தேவாலய மண்டபத்தில் தங்கவைக்கப்பட்டனர். மறுதினமான புதன்கிழமை, இக்குடும்பங்களுக்குத் தற்காலிக தங்குட வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டன.


அயர்லாந்து இனவெறிக் குண்டர்களோடு, துணைப்படையினரும் இணைந்து செயற்படுகின்றனர் என்ற குற்றச்சாட்டும் எழுந்துள்ளது. எனினும், இக்குற்றச்சாட்டு பொலிஸ் வட்டாரத்தால் நிராகரிக்கப்பட்டுள்ளது. அயர்லாந்தில் பிரிட்டனுக்கு ஆதரவான புரட்டஸ்தாந்துகளுக்கும், ஐரீஷ் ஆதரவு கத்தோலிக்கர்களுக்குமிடையே எவ்வப்போது கோஷ்டி மோதல் ஏற்படுவதுண்டு. இன்று இந்நிலையில்லை.

எனினும், சமீபகாலமாக, ருமேனியா போன்ற கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்து வந்து, அயர்லாந்தில் குடியேறியுள்ள மக்களுக்கு எதிராக இனவெறித் தாக்குதல்கள் கட்டவிழ்க்கப்பட்டு வருகின்றன. இத்தாக்குதல்களுக்கு ருமேனிய மக்களே பெரிதும் இலக்காகி வருகிறார்கள். இதனால் பெருந்தொகையானோர் தம் தாய்நாட்டிற்கே திரும்பிவிடத் தயாராகி விட்டனர்.

அநேக ருமேனிய குடும்பங்கள், தென் பெல்பாஸ்ட்டிலுள்ள ஒஸோனி லெஸர் மத்திய நிலையத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளன. அநேக குடும்பங்கள் ரோமா இனத்தைச் சேர்ந்தவை. மற்றைய குடும்பங்கள் ருமேனியாவைச் சேர்ந்த இதர இனங்களைச் சேர்ந்தவை. இக்குடும்பங்கள் பீதியும் அதிர்ச்சியும் அடைந்துள்ளன.

பெல்பாஸ்ட்டிலிருந்து வெளியேறியுள்ள இக்குடும்பங்கள், தம் வீடுகளுக்கு திரும்ப விரும்பவில்லை. மரியா என்னும் பெண்ணொருவர் குறிப்பிடுகையில், "கடந்த ஒரு வாரகாலமாக நான் நித்திரை கொள்ளவில்லை. எச்சமயத்திலும் குண்டர்கள் வந்து எம்மைத் தாக்கக்கூடும் என்ற அச்சத்தில் கலக்கமடைந்திருந்தேன்" என்றார்.

மற்றுமொரு ருமேனியப் பெண் குறிப்பிடுகையில், "இனவெறியர்கள் எச்சமயத்திலும் வந்து என்னையும் எனது குடும்பத்தையும் கொலை செய்யலாம். நான் குடும்பத்தோடு, ருமேனியாவுக்குத் திரும்பிவிடவே முடிவு செய்துள்ளேன்" என்றார்.



சோமாலியாவில் ஷெல் வீச்சில் காயமடைந்த ஒருவர் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்படுகின்றபோது.....

# சோமாலியாவில் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்; பாதுகாப்பு அமைச்சர் உட்பட 20 பேர் மரணம்!

மொகடிஷ்ஷு, ஜூன் 19

மேற்கு சோமாலியாவில் உள்ள ஹோட்டல் ஒன்றுக்கு வெளியே நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் தேசியப் பாதுகாப்பு அமைச்சர் ஓமர் ஹாசி ஏடன் உட்பட 20 பேர் கொல்லப்பட்டனர். சோமாலியாவின் தலைநகரான மொகடிஷ்ஷுவிலுள்ள மசூதி ஒன்றின்மீது மேற்கொள்ளப்பட்ட மோட்டார் தாக்குதலில், 10 பேர் கொல்லப்பட்டனர். 18 பேர் காயமடைந்துள்ளனர். மசூதியின் ஒரு பகுதி தகர்ந்துவிட்டது என அதிகாரிகள் தெரிவித்தனர்.

"மோட்டார் தாக்குதலுக்கு இதுவரை எந்த ஒரு தீவிரவாத அமைப்பும் உரிமை கோரவில்லை. எனினும், இஸ்லாமிய கடும் போக்காளர்களான தீவிரவாதிகளுக்கும், அரசு சார்பு படைகளுக்கிடையே தலைநகரில் கடும் சண்டை நடைபெற்று வருகிறது" என்றும் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

"இருசாராருக்குமிடையிலான சண்டை கடந்த மாதம் ஆரம்பமாகியது. தொடர்ந்து இடம்பெற்றுவரும் இச்சண்டையில் இதுவரை, 250 இற்கு மேற்பட்டோர் பலியாகியுள்ளனர். இவர்களில் சிவிலியன்கள், தீவிரவாதிகள், படைச்சிப்பாய்கள் ஆகிய முத்தரப்பினரும் அடங்குவர். அநேகர் காயமடைந்துள்ளனர்" என்றும் அவ்வதிகாரிகள் விவரித்தார்கள்.

தலைநகரிலுள்ள தீவிரவாதிகளின் இலக்குகள் மீது செவ்வாய்க்கிழமை தாக்குதல்கள் நடத்தப்பட்டன. தீவிரவாதிகள் எதிர்த் தாக்குதல்களை மேற்கொண்டார்கள். இம்மோதலில் மொகடிஷ்ஷு பிரதம பொலிஸ் அதிகாரி கேர்னல் அலி சயித் கொல்லப்பட்டார் என பொலிஸ் வட்டாரம் தெரிவித்தது.

சோமாலியாவில் சமீபகாலமாக இடம்பெற்று வரும் சண்டையால், இதுவரை 1 இலட்சத்து 20 ஆயிரத்துக்குமேற்பட்ட மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். இவர்கள் பாடசாலைக் கட்டடங்களிலும், தற்காலிகக் கூடாரங்களிலும் தங்க வைக்கப்பட்டுள்ளார்கள் என ஐ.நா. தெரிவித்தது.

அதேவேளை, தென்சோமாலிய நகரான சொவ்ஹாரில், யுனிசெவ்வின் பண்டசாலைக்குள் இஸ்லாமிய தீவிரவாதிகள் புகுந்து, அத்தியாவசியப் பண்டங்களை கொள்ளையிட்டுள்ளனர் என அதன் அதிகாரியொருவர் குறிப்பிட்டார்.




# பாகிஸ்தானில் வான் தாக்குதல்; ஒன்பது தீவிரவாதிகள் உயிரிழப்பு!

இஸ்லாமாபாத், ஜூன் 19

பாகிஸ்தானின் பழங்குடி மக்கள் வாழும் தென்வசீரிஸ்தான் பிராந்தியத்திலுள்ள தீவிரவாதிகளின் இலக்குகள் மீது மேற்கொள்ளப்பட்ட வான் தாக்குதலில் ஒன்பது பேர் கொல்லப்பட்டனர் என உள்ளூர் அதிகாரிகள் தெரிவித்தார்கள்.

தென்வசீரிஸ்தான் பிராந்தியத்தில் நேற்று வியாழக்கிழமை காலை ஆளில்லா விமானம் மேற்கொண்ட தாக்குதலில், ஐந்து தீவிரவாதிகள் கொல்லப்பட்டார்கள் என உள்ளூர் நிர்வாக அதிகாரிகள் பி.பி.ஸிக்குத் தெரிவித்தார்கள்.

பலியானோரில் உள்ளூர் தலிபான் தீவிரவாதப் போராளிகளும் அடங்குவர்.

இப்பிராந்தியம் அல்-குவைதாவினதும், தலிபானினதும் பலம்பெரும் கோட்டையாக இருந்து வருகிறது என்றும் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

கொல்லப்பட்ட தீவிரவாதிகள் அனைவரும் உள்ளூர் கொமாண்டர் மௌலவி நஸீருக்கு விசுவாசமானவர்கள். ஷா அலாம் கிராமத்திலுள்ள வீடொன்றின்மீது இரு ஏவுகணைகள் ஏவப்பட்டன.

வசீரிஸ்தானில் அதியுயர்ந்த மலைப் பிராந்தியத்தில் இக்கிராமம் அமைந்துள்ளது என்றும் அவர்கள் விவரித்தார்கள்.

இத்தாக்குதல் நடத்தப்படுவதற்கு முன்னர் ஆளில்லா அமெரிக்க விமானமொன்று அப்பிராந்தியத்தில் பறந்ததை தாங்கள் கண்டனர் என உள்ளூர்வாசிகள் குறிப்பிட்டார்கள்.

# கிரிக்கெட் வீரர்கள் மீதான தாக்குதல்; பாகிஸ்தான் லாகூரில் ஒருவர் கைது

லாகூர், ஜூன் 19

"பாகிஸ்தான் லாகூர் நகரில் கடந்த மார்ச் மாதம் இலங்கைக் கிரிக்கெட் வீரர்கள் பயணித்த பஸ்மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் தொடர்பாக, ஏழு சந்தேக நபர்களில் ஒருவர் கைது செய்யப்பட்டார்" என லாகூர் பிரதம பொலிஸ் அதிகாரி பேர்விஸ் ரதார் தெரிவித்தார்.

"இரகசிய தகவலொன்றை அடுத்து, பஞ்சாப் தலிபான்களின் வலையமைப்புப் பணியகமொன்றில் திடீர் சோதனையிடப்பட்டது. அப்போது சந்தேக நபர்களில் ஒருவர் சிக்கினார்" என்றும் அவர் குறிப்பிட்டார்.

"மடக்கிப் பிடிக்கப்பட்ட இச்சந்தேக நபர் சுபைர் அல்லது நெக் மொஹம்மது என அழைக்கப்படுபவர் என அடையாளங் காணப்பட்டுள்ளார். இவர் தடைவிதிக்கப்பட்ட தெக்ரீக்-இ-தலிபான் பஞ்சாப் என்னும் தீவிரவாத அமைப்பைச் சேர்ந்தவர்" என்றும் பிரதம பொலிஸ் அதிகாரி விளக்கினார்.

"மடக்கிப் பிடிக்கப்பட்டு, கைது செய்யப்பட்ட சந்தேக நபர் சுபைர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார். இதில் பல தகவல்கள் வெளியாகின. இத்தாக்குதலுக்கு மூளைசாலியாக பாரூக் என்பவரே இருந்துள்ளார். இவர்கள் இலங்கைக் கிரிக்கெட் குழுவினரைக் கடத்திச் செல்லவே திட்டமிட்டிருந்துள்ளனர்" என்றும் அவர் விவரித்தார்.

கைது செய்யப்பட்ட சுபைர், பின்னர் லாகூரிலுள்ள பாகிஸ்தான் கலாசார மண்டபத்தில் இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாடொன்றில் ஆஜர்படுத்தப்பட்டார். அவரது முகம் கறுப்பு முகமூடியால் மறைக்கப்பட்டிருந்தது. இம்மாநாடு, தொலைக்காட்சியில் காட்டப்பட்டது.

கேள்விகளுக்கு அவர் முகமூடிக்கூடாக பதிலளிக்கையில், ஒரு கட்டத்தில், "இத்தாக்குதலை மேற்கொள்வதற்காக, இரு தினங்களுக்கு முன்னரே நாங்கள் லாகூருக்கு வந்துவிட்டோம். லாகூரின் புறநகர்ப் பகுதியிலுள்ள சிறிய வீடொன்றில் தங்கியிருந்தோம்" எனக் கூறினார்.

இத்தாக்குதலுக்கு பின்னர் சுபைரும் ஏனையோரும், ஆப்கான் எல்லையையொட்டிய பழங்குடியின மக்களின் பிராந்தியமான வசீரிஸ்தானுக்கு ஓடி தலைமறைவாகியுள்ளனர் என்ற தகவலும் வெளியானது.

கடந்த மார்ச் மாதம் இலங்கைக் கிரிக்கெட் வீரர்களை ஏற்றிக்கொண்டு, விளையாட்டரங்கை நோக்கிச் சென்ற பஸ், இத் துப்பாக்கிதாரிகளின் தாக்குதலுக்கு இலக்கானது. இதில் ஆறு பொலிஸாரும், பஸ் சாரதி ஒருவரும் கொல்லப்பட்டுள்ளனர்.

# ஆஸ்திரிய ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட ஆர்னோல்ட் விருப்பம்

லண்டன், ஜூன் 18

அமெரிக்க கலிபோர்னிய மாநில ஆளுநராகவிருக்கும் ஆர்னோல்ட் ஸ்வார்ஸ்நேகர் தமது பதவிக்காலம் முடிவடைந்த பின்னர், ஆஸ்திரிய ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ளார்.

"நான் அமெரிக்காவில் பிறக்கவில்லை. இதனால், அங்கு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட அனுமதி மறுக்கப்படலாம். அவ்வாறு மறுக்கப்பட்டால், சொந்த நாடான ஆஸ்திரியாவில், ஜனாதிபதித் தேர்தலில் நான் போட்டியிடுவேன்" என அவர் ஆஸ்திரியாவில் நிகழ்ந்த விழாவொன்றில் குறிப்பிட்டார்.

கலிபோர்னிய மாநில ஆளுநராகவிருக்கும் இவரது பதவிக்காலம் அடுத்த ஆண்டு முடிவடைகிறது. இவர் இப்பதவிக்கு வருவதற்கு முன்னர் ஹொலிவுட் படங்களில் கதாநாயகனாக நடித்துக்கொண்டிருந்தார். ஆஸ்திரியாவைச் சேர்ந்த இவர், சினிமாவில் நடிப்பதற்காகவே அமெரிக்காவில் குடியேறலானார்.

சமீபத்தில் இவர் தம் தாய்நாடான ஆஸ்திரியாவிற்கு வருகை புரிந்தார். இங்கு விழாவொன்றில் உரையாற்றினார். அப்போது நிருபர்கள், "ஆஸ்திரிய ஜனாதிபதி ஹெயின்ஸ் பிஷரின் பதவிக்காலம் 2010 ஆம் ஆண்டு முடிவடைகிறது. அப்போது நீங்கள் ஆஸ்திரிய ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவீர்களா?" எனக் கேட்டனர்.

இதற்கு இவர், "அமெரிக்காவில் போட்டியிட மறுக்கப்பட்டால், நிச்சயம் நான் ஆஸ்திரேலிய ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவேன். பிரச்சார இயக்கத்தின் போது, நிருபர்களாகிய தங்களின் சேவையை நான் எதிர்பார்ப்பேன்" என பதிலளித்தார்.

# தீவிரவாதி மசூத் கைதானாரா? பாகிஸ்தானில் பெரும் பரபரப்பு!

லாகூர், ஜூன் 19

பாகிஸ்தான் தீவிரவாதத் தலைவரான மசூத் அசார் கைதானார் எனப் பரவிய செய்தியால் பாகிஸ்தானில் பரபரப்பு ஏற்பட்டது. பாகிஸ்தானில் செயற்பட்டுவந்த தீவிரவாத அமைப்பு ஜெய்ஷ்-இ-முகமது. இது தடைசெய்யப்பட்ட அமைப்பாகும். இதன் தலைவர் மௌலானா மசூத் அசார். இவர் இந்தியாவில் நடந்த பல்வேறு தாக்குதல் சம்பவங்களில் ஈடுபட்டு இருந்தவர்.

கடந்த 1999 ஆம் ஆண்டு இந்தியச் சிறையில் இவர் இருந்தபோது, இவரை விடுவிப்பதற்காக இந்திய விமானம் கடத்தப்பட்டது. நேபாளத் தலைநகரான காத்மண்டு நகரிலிருந்து அந்த விமானம் ஆப்கானிஸ்தானுக்குக் கடத்தப்பட்டது.

அசாரையும் இன்னும் 2 தீவிரவாதிகளையும் விடுதலை செய்தால் மட்டுமே விமானத்தையும், விமானப் பயணிகளையும் விடுவிப்போம் என்று தீவிரவாதிகள் மிரட்டினார்கள். இதனால் இவரையும் மற்ற 2 பேரையும் இந்திய அரசு விடுதலை செய்தது.

மும்பைத் தாக்குதல் நடந்ததும், அவரை தங்களிடம் ஒப்படைக்கும்படி இந்தியா, பாகிஸ்தானை கேட்டுக்கொண்டது. ஆனால், அவர் எங்கே இருக்கிறார் என்பது தெரியவில்லை என்று அந்நாட்டு அரசு தெரிவித்தது.

இந்நிலையில், சியால்கோட் என்ற இடத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை அசாரின் அமைப்பைச் சேர்ந்த 5 தீவிரவாதிகள் கைது செய்யப்பட்டார்கள் என அந்நகர பொலிஸார் தெரிவித்தனர்.

5 பேர் கைதான தகவல் வெளியானதும் அந்த அமைப்பின் தலைவர் மசூத் அசாரை உளவுத்துறை அதிகாரிகள் கைது செய்துவிட்டனர் என உறுதி செய்யப்படாத தகவல்கள் பரவின. ஆனால், சியால்கோட் பொலிஸ் தலைவர் வாக்கர சோகன் இதை மறுத்தார்.

சந்தேகப்படும் [illegible] ஜெய்ஷ்-இ-முகமது [illegible] கைது செய்திருக்கிறோம். அவர்களில் மசூத் அசார் இல்லை என அவர் தெரிவித்தார்.

# அணுத்திட்டம் தொடர்பாக பேசவருமாறு வடகொரியாவுக்கு ரஷ்யா, சீனா அழைப்பு

மாஸ்கோ, ஜூன் 19

வடகொரியா தனது எதிர்கால அணுத்திட்டங்கள் தொடர்பாக பேச்சுகள் நடத்த முன்வர வேண்டுமென சீனாவும், ரஷ்யாவும் கூட்டறிக்கையொன்றின் வாயிலாக வலியுறுத்தியுள்ளன.

ரஷ்யாவில் தொடர்ச்சியாக இடம்பெற்று வந்த பரஸ்பர கலந்துரையாடலுக்குப் பின்னர் சீனாவும், ரஷ்யாவும் இந்தக் கூட்டறிக்கையை விடுத்துள்ளன. 14 பக்கங்களைக் கொண்ட இந்த அறிக்கையில், 9 பக்கங்கள் பொருளாதார விவகாரங்கள் சம்பந்தப்பட்டவையாகும்.

[illegible]டலில் எட்டப்பட்ட முடி[illegible] சீனாவுக்கு 20 வருட காலம் ரஷ்யா எண்ணெய் விநியோகம் செய்யும். அதேவேளை, நிலக்கரி, இயற்கை வாயு உற்பத்தி ஆகியவற்றில் இருதரப்பு ஒத்துழைப்பு நிலவும்.

சீனா ஜனாதிபதி ஹு ஜிண்டாவோவும், ரஷ்ய ஜனாதிபதி திமித்ரி மெத்வேடேவும் இக்கூட்டறிக்கையில் கைச்சாத்திட்டுள்ளார்கள். தற்போது தடைப்பட்டுள்ள வடகொரிய அணுத்திட்டம் தொடர்பான ஆறு நாடுகள் சம்பந்தப்பட்ட பேச்சுகள் மீள ஆரம்பிக்கப்படவேண்டுமென்றும் இதில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அமெரிக்கா, ரஷ்யா, சீனா, தென்கொரியா, ஜப்பான், வடகொரியா ஆகிய நாடுகளின் இப்பேச்சுகள் மூலமாக பிராந்திய பதற்றத்தையும், அச்சத்தையும் நீக்கி விடலாம். வடகொரிய அணு விவகாரத்துக்குச் சமாதான அணுகுமுறை, கலந்துரையாடல், கலந்தாலோசனை ஆகியவற்றின் வாயிலாகவே பரிகாரம் கண்டுவிடலாம் என்றும் அதில் நம்பிக்கை தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்தை செல்வாவும் பிரபாகரனும் 'தோற்றுப்போன தலைவர்கள்'!

## இப்படி வர்ணிக்கிறார் கிஷோர் எம்.பி.



கொழும்பு, ஜூன் 19

தந்தை செல்வாவும், விடுதலைப் புலி களின் தலைவர் பிரபாகரனும் 'தோற்றுப் போன தலைவர்கள்' என வர்ணித் திருக்கின்றார் தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் வவுனியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர்.

'ஏசியன் ரிபியூன்' இணையத்தளத் திற்கு இதனைக் குறிப்பிட்டுள்ள அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

பிரபாகரன் ஒரு தோற்றுப் போன தலை வர். அவர் சயனையிட்டினால் மரணிப்ப தற்குப் பதிலாக இராணுவத்தின் துப்பாக் கிச் சூட்டிலேயே மரணித்துள்ளார்.

அவரை உயிருடன் வைத்திருப்பதற்காக 20 ஆயிரம் தமிழ் இளைஞர்கள் இறந்தனர்.

பிரபாகரன் 25 ஆயிரம் அப்பாவித் தமி ழர்களைக் கொலை செய்தவர். அவர் வட பகுதியிலிருந்து ஒரு லட்சம் தமிழ் பேசும் மக்களைத் துரத்தினார். அவர்கள் கடந்த 18 வருடங்களாக புத்தளத்தில் தற்காலிக குடிசைகளில் வாழ்கின்றனர்.

வன்னியிலிருந்து 10 ஆயிரம் இந்திய வம்சாவளித் தமிழர்களை அவர் துரத்தி னார். அவர்கள் இன்னமும் வவுனியா முகா மில் உள்ளனர்.

செல்வநாயகம் 30 வருடங்களாக ஜன நாயக நடைமுறையூடாக தமிழ் மக்களின் அபிலாஷைகளுக்காக போராடியிருக் கலாம். எனினும், அவரும் ஒரு தோற்றுப் போனவரே.

செல்வநாயகம் தமிழ் மக்களை அர சியல் ரீதியாக ஐக்கியப்படுத்தினார். எனி னும், தமிழ் மக்களுக்கு உரிமைகளைப் பெற்றுத் தரும் வாக்குறுதியை அவரால் நிறைவேற்ற முடியவில்லை.

பிரபாகரன் தமிழ் மக்களை அச்சுறுத் தல், மிரட்டல் மற்றும் தமிழீழ மந்திரம் மூலம் ஒன்றாக்கினார். அவரது ஆயுதப் போராட் டம் காரணமாக 3 லட்சம் தமிழ் மக்கள் கூரைகளற்ற வீதிகளுக்குத் தள்ளப்பட் டனர். தமிழர் தாயகம் இறுதியில் கன வாகிப் போனது.

எனக்கு வாக்களித்த வன்னி மக்கள் முகாம்களில் உள்ளனர். அவர்களை மீளக் குடியமர்த்துவதே மிக முக்கிய விடயமா கும். இதன் காரணமாகவே அவர்களை மீளக் குடியமர்த்தும் அரசின் முயற்சிக்கு நான் ஆதரவளிக்கின்றேன்.

கடந்த நாடாளுமன்றக் கூட்டத் தொட ரில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 14 உறுப்பினர்கள் கலந்துகொள்ளவில்லை. அவர்கள் அனைவரும் தற்போது நாட்டில் இல்லை.

அவசரகாலச் சட்டத்தின் மீதான வாக் கெடுப்பின்போது, தமிழ்த் தேசியக் கூட் டமைப்பின் ஏழு உறுப்பினர்கள் அதற்கு எதிராக வாக்களித்தனர். எனினும், நான் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை.

தற்போது முகாமில் உள்ள மக்களை மீளக் குடியமர்த்த வேண்டும். இதற்காக அரசுக்கு ஆதரவளிக்க வேண்டியது அவ சியம். இதனாலேயே நான் வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை. (சி)

## அறநெறிப்பாடசாலை ஆசிரியர் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூன் 19

யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய், உடுவில், சங்கானை, சண்டிலிப்பாய், தெல்லிப்பழை ஆகிய பிரதேசங்களில் இயங்கும் இந்து அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு வேம் படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் நடைபெறவுள்ளது. (06)

## மாணவர் பாசறை

யாழ்ப்பாணம், ஜூன் 19

தீவக வலயக் கல்வி அலுவலகத்தின் வழிகாட்டலில் நயினாதீவு பாடசாலைக ளின் மாணவர்களுக்கான பல்லினக் கலா சாரப் பாசறை நாளை மறுதினம் ஞாயிற் றுக்கிழமை காலை 9 மணிக்கு நயினாதீவு மகாவித்தியாலத்தில் தீவக வலயக் கல் விப் பணிப்பாளர் வி.இராதகிருஷ்ணன் தலைமையில் நடைபெறவுள்ளது. (6)

## முள்ளியில் கோஷ்டி மோதல் ஏழுபேர் ஆஸ்பத்திரியில் அனுமதி

யாழ்ப்பாணம், ஜூன் 19

அரியாலை, முள்ளி வீதிப் பகுதியில் இடம்பெற்ற கோஷ்டி மோதல் சம்பவம் ஒன்றில் ஏழுபேர் படுகாயங்கள் மற்றும் காயங்களுக்கு உள்ளாகினர்.

நேற்றுமுன்தினம் புதன்கிழமை இரவு 8.30 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அதேஇடத்தைச் சேர்ந்த அ.ஒலிஸ்ரன் (வயது24), யோ.அன்ரன் அமலநேசன்( வயது20), கே.துரைராசா (வயது 51), எஸ்.யசிந்தன் (வயது 23), வ.சோதிநாதன் (வயது 60), எஸ்.ராஜ சேகரன் (வயது 21), எஸ்.ஜோர்ச் (வயது 46) ஆகியோரே படுகாயங்கள் மற்றும் காயங்களுக்கு உள்ளானவர்கள் ஆவர்.

இவர்கள் சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளனர். (1-78)

# வவுனியா நெளுக்குளம் பகுதியில் பொலிஸார் சூட்டதில் மூவர் பலி!

கொழும்பு, ஜூன் 19

வவுனியா, நெளுக்குளம் பிரதேசத்தில் பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிர யோகத்தில் மூவர் உயிரிழந்துள்ளனர் எனக் கூறப்படுகிறது.

இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் நேற்று அதி காலை இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத் தியட்சர் ரஞ்சித் குணசேகர தெரிவித்தார்.

வவுனியா, நெளுக்குளம்-தலைநகர் பாடசாலைக்கு அருகில் கடமையில் ஈடு பட்டிருந்த வவுனியா பொலிஸாரின் குற் றத் தடுப்பு பிரிவினர், வீதியால் சென்ற சிலரை சோதனைக்கு உட்படுத்தி யுள்ளனர். குறித்த நபர்களை சோதனைக்கு உட்படுத்தும் போது, அவர்கள் பொலி ஸார் மீது தாக்குதல் மேற்கொண்டுவிட்டுத் தப்பிச் செல்ல முற்பட்டுள்ளனர். அப் போதே, பொலிஸார் துப்பாக்கிப் பிரயோ கம் மேற்கொண்டுள்ளனர் - என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

சம்பவத்தில் உயிரிழந்தவர்களிடமிருந்து ஆயுதங்கள் சிலவற்றையும் பொலிஸார் மீட்டுள்ளனர் என அவர் கூறினார். (சி)

## பாலர் விளையாட்டு விழா

அரசடி ஞானக் குழந்தை இல்லப் பாலர் பாடசாலையின் 15ஆவது வருடாந்த விளையாட்டு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். இந்து ஆரம்ப பாடசாலை மைதானத் தில் திருமதி கேதாரபூரணி ஞானகாந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யூனியன் அஸ்யூரன்ஸின் முகாமையாளர் சி.என். மதிவதனனும் சிறப்பு விருந்தினராக பாலர் கல்விக்கழகத் தலைவர் எஸ்.பி. காசிநாதனும் கௌரவவிருந்தினராக கொக்குவில் இந்துக்கல்லூரி ஆசிரியர் பொ.ஆதீசனும் கலந்துகொள்ளவுள்ளனர்.

## கைதடி நவீல்ட் பாடசாலையில் புதிய வளைவு திறப்பு

கைதடி நவீல்ட் செவிப்புலனிழந்தோர் பாடசாலையின் பழைய மாணவர் சங்கத் தின் 42 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் வருடாந்தப் பொதுக் கூட்டமும் நாளை சனிக்கிழமை நவீல்ட் பாடசாலை மண்ட பத்தில் காலை 8.30 மணியளவில் இடம் பெறவிருக்கின்றன.

இத் தினத்தில் பாடசாலை வாயிலில் பழைய மாணவர் சங்கத்தினால் புதிதாக அமைக்கப்பெற்ற பெயர் பொறிக்கப்பட்ட வளைவு வைபவரீதியாக திறந்து வைக் கப்படவுள்ளது. (1)

### ஏனைய மாவட்டங்களைப் போன்று

# குடாநாட்டு ஊடகவியலாளர்களை சுதந்திரமாக செய்தி சேகரிக்க அனுமதிக்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 19

ஏனைய மாவட்டங்களைப் போன்று குடாநாட்டு ஊடகவியலாளர்களையும் சுதந்திரமாகச் செய்தி சேகரிக்க அனும திக்க வேண்டும் என்று வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கம் சம்பந்தப்பட்ட வர்களை நேற்று விடுத்த செய்திக் குறிப் பின் மூலம் கேட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட் டிருப்பதாவது:-

அரச உயர்மட்டக் குழுவின் யாழ். விஜ யம் தொடர்பான செய்திகளைச் சேகரிக்க உள்ளூர் ஊடகவியலாளருக்கு தடை விதிக்கப்பட்டது.

யாழ்.குடாநாட்டிற்கான விஜயத்தினை மேற்கொண்டிருக்கும் அரச உயர் மட் டக்குழுவினால் நடத்தப்படும் கூட்டங்கள் தொடர்பிலான செய்திகளைச் சேகரிக்க உள் ளூர் ஊடகவியலாளர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பினில் யாழ்.அரச அதிபருடன் எமது ஊடக அமைப்பும், ஊடக நிறுவனங்களும், ஊடகவியலாளர் களும் பலதடைவைகள் நேரடியாகவும், தொலைபேசி மூலமாகவும் தொடர்புகளைக் கொண்ட போதும், ஆக்க பூர்வமான பதில் ஏதும் வழங்கப்படவில்லை.

கடந்த காலங்களில் இவ்வாறான விஜ யங்கள் மற்றும் கூட்டங்கள் தொடர்பி லான செய்தி சேகரிப்பதற்காக ஊடகவிய லாளர்கள் அழைக்கப்பட்டே வந்திருந்த னர். எனினும் தற்போது அவ்வாறான அனு மதி வழங்கப்படாமை குடாநாட்டின் ஊடக சுதந்திரம் தொடர்பாக எழுப்பப்படும் குற்றச் சாட்டுகளை உண்மையானதாக் குகின்றது.

ஏனைய மாவட்டங்களில் சுதந்திரமாக செய்தி சேகரிக்க அனுமதிக்கப்படுவது போன்று குடாநாட்டு ஊடகவியலாளர்க ளையும் பணியாற்ற உரிய தரப்புக்கள் அனுமதிக்க வேண்டுமென கேட்டுக் கொள்கின்றோம்.

மேலும் இவ்விடயம் தொடர்பினில் குடா நாட்டிலுள்ள இராணுவ உயர்மட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்ட போது இவ்விஜயங்கள் தொடர்பாக செய்தி சேகரிக்க ஊடகவியலாளர்களுக்கு தடையேதும் இல்லையெனவும், யாழ். அரச அதிபரே இவ்விடயங்களை கையாள அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் தெரி வித்தனர் -என்று உள்ளது. (அ)

# நலன்புரி முகாம்களுக்கு எம்.பிக்கள் செல்வதற்கான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பரிசீலனைக்கு எடுத்து, விசாரணைக்கு ஏற்றுக்கொண்ட பின்னரே பிரதம நீதி யரசர் இந்த உத்தரவை வழங்கினார்.

ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்தஜய லத் ஜயவர்த்தனா, லக்ஷ்மன் செனிவிரட்ன, ஜனநாயக மக்கள் முன்னணியைச் சேர்ந்த மனோகணேசன், ஸ்ரீ.ல.சு.க. (மக்கள் அணி பிரிவைச்) சேர்ந்த மங்கள சமரவீர, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸைச் சேர்ந்த ஹசன் அலி ஆகியோர் இந்த மனுவைத் தாக்கல் செய் திருந்தனர்.

நேற்றுக்காலை பிரதம நீதியரசர் அசோக என்.டி சில்வா, நீதியரசர்கள் ஜகத் பாலபட்ட பெந்தி, சந்திரா ஏக்கநாயக்கா ஆகியோர் முன்னி லையில் மனு எடுத்துக் கொள்ளப்பட்டது.

மனுவில் சட்டமா அதிபர் மற்றும் பாது காப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ உட்படப் பல பாதுகாப்பு உயரதி காரி களின் பெயர்கள் எதிர்மனுதாரர் களாகக் குறிப்பிடப்பட்டிருந்தன.



நலன்புரி நிலையங்களுக்குச் செல்வதற்கான அனுமதியைக் கோரும் மனுவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்த பின்னர் அஷாத் சாலி, மங்கள சமரவீர, மனோ கணேசன், ஜயலத் ஜயவர்த்தனா, லக்ஷ்மன் செனிவிரட்ன.

வடக்கு முகாம்களில் தடுத்து வைக்கப் பட்டிருக்கும் அக திகளை நாடாளு மன்ற உறுப்பினர் கள் கூட சென்றுசந் திக்கத் தடை விதிப் பது சட்டவிரோத மானது என மனுதா ரர்கள் தரப்பில் ஆஜ ரான சட்டத் தரணி ஏ.ஸி. வெலியமுன வாதாடினார்.

அதனை ஏற்றுக் கொண்ட பிரதம நீதியரசர், மேற்படி எம்.பிக்கள் அந்த முகாம்களுக்குச் சென்று நிலைமை களை நேரில் கண் டறிவதற்கு உள்ள உரிமை மறுக்கப்படக் கூடியதல்ல என வலியுறுத்தினார்.

எனவே, அந்த முகாம்களுக்கு மேற்படி எம்.பிக்கள் செல்வதற்கான இசைவை அரச அதிகாரத் தரப்பிடம் பெறுவதற்கான ஏற்பாடுகள், வாய்ப்புகள் குறித்து அர சுடன் கலந்துரையாடி முடிவை எதிர்வரும் ஜூலை 27 ஆம் திகதிக்கு முன் நீதி மன்றுக்குத் தெரியப்படுத்துமாறு சட்டமா அதிபருக்கும்-

அத்தகைய [illegible] பேரில் முகாம்களுக்குச் செல்லும் மேற்படி எம்.பிக்கள் அங்கு அநாவசியக் குழப்பங்களை ஏற்படுத்தாமல் இருப்பதை உறுதிப் படுத்த வேண்டும் என மனுதாரர் தரப்புக்கும்-

பிரதம நீதியரசர் பணிப்புரை விடுத்தார்.

### மனோ எம்.பி. கருத்து

இந்த நீதிமன்ற விசாரணைகளின் பின் னர் நீதிமன்றுக்கு வெளியே வைத்து மனோ கணேசன் எம்.பி. தெரிவித்த கருத் துகள் வருமாறு:-

புத்த பகவானதும், கதிர்காமக்கந்தன தும் பெயர் சொல்லிக்கொண்டிருக்கும் இந்நாட்டின் இன்னொரு பகுதியில் அமைதி யாக மனிதப் பேரவலமும், இன அழிப்பும் அரங்கேறிக்கொண்டிருக்கின்றன. இதுபற் றிய உண்மை நிலையை வெளிக்கொணர வேண்டிய கடப்பாடும், உரிமையும் மக்க ளால் தெரிவுசெய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்ற முறையில் எங்க ளுக்கு இருக்கின்றன. இதன் மூலம் இந் நாட்டு மக்களது மனச்சாட்சியைத் தட்டி யெழுப்பவேண்டிய பொறுப்பும் இந்நாட் டின் பிரஜைகள் என்ற முறையில் நம் ஒவ் வொருவருக்கும் இருக்கின்றது.

வடக்கிற்குச் செல்வதற்கு முனைந்த போது எமது பயணம் பாதுகாப்புக் கார ணங்களைக் காட்டி இடைநிறுத்தப்பட் டது. இந்நிலையில் நாம் உயர்நீதிமன்றத் தின் தலையீட்டைக் கோரியுள்ளோம். இதன் மூலமாக இந்த எரியும் பிரச்சினை மீண் டும் மீண்டும் தேசத்தினதும், உலகத்தின தும் அவதானத்திற்கு கொண்டுவரப்ப டுகின்றது. தடுப்பு முகாம்களிலே அனைத் [illegible] நடைபெறுகின்றன என்றும், [illegible] வலம் நிலவவில்லை என்றும் காட்டப்படும் தோற்றத்தை ஏற்றுக்கொள் வதற்கு நாங்கள் தயாராக இல்லை. இயற் கையாக எம்மைத் தாக்கியழித்த சுனாமிப் பேரலைகள் போல் நூறு மடங்கு பெரிய பேரவலம் வடபுல முகாம்களில் நிலவுவ தாக நாங்கள் அறிகின்றோம். எனவே, பல் வேறு கட்சிகளைச் சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களாகிய நாம் இந்நடவடிக் கையை எடுக்கின்றோம். - என்றார்.

### மங்கள எம்.பி. கருத்து

இந்த விடயத்தை ஒட்டி மங்கள சமர வீர எம்.பி. தெரிவித்தவை வருமாறு:-

வடக்கு முகாம்களில் பல்வேறு சீர் கேடுகள், குளறுபடிகள், மனிதப் பேர வலங்கள் இடம்பெறுகின்றன என்று குற் றச்சாட்டுகள் எழுந்துள்ளன. முறைப்பாடு கள் தொடர்ந்தவண்ணம் உள்ளன. இவை குறித்து நேரில் கண்டறிந்து, உண்மையை வெளிப்படுத்த வேண்டிய கடப்பாடும், பொறுப்பும் எமக்கு உண்டு. நாடாளுமன் றில் உண்மையைப் பிரதிபலிக்க வேண் டிய கடமை எங்களுடையது.

ஆனால், அந்த முகாம்களுக்குச் செல்ல விடாது எம்மைத் தடுக்கின்றார்கள். நாட்டின் எந்த மூலையில் உள்ள சிறைக்கும் சென்று சிறைக் கைதிகளைப் பார்வையிடுவதற்குக் கூட எம்.பிக்கள் என்ற முறையில் எமக்கு அதி காரம் உண்டு. அதை யாரும் தடுக்க முடியாது. அப்படிச் சட்டம் தெளிவாகக் குறிப்பிடு கின்றது.

அப்படி இருக்கையில் அகதிகள் தங்க வைக்கப்பட்டுள்ள முகாம்களுக்கு நாம் செல்ல முடியாது என்று தடுப்பது சட்ட மீறலும் உரிமை மீறலுமாகும். அதனால் தான் நாம் நீதிமன்றிடம் நியாயம் கோரி யுள் ளோம். - என்றார் அவர். (அ-சி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அத்தியாவசியப் பொருள்களுடன் புறப்பட்ட லொறிகள் நேற்று இரவே யாழ்.நகரத்தை வந்தடைந்தன



யாழ்ப்பாணம், ஜூன் 19

கொழும்பில் இருந்து எடுத்து வரப்பட்ட பொருள்களுடன் அனுராதபுரத்தில் 8 நாள்கள் தங்கி நின்று பொருள்களை ஏற்றிவந்த தனியாருக்கு சொந்தமான 33 லொறிகளும் தமது வர்த்தக நிறுவனங்களுக்கு நேரடியாகச் சென்று பொருள்கள் இறக்குவதற்கு நேற்று மாலை அனுமதி வழங்கப்பட்டது.

தனியார் வர்த்தகர்களின் 33 லொறிகள் நாவற்குழி களஞ்சியத்தை வியாழக்கிழமை வந்து சேர்ந்திருந்த போதிலும் அவற்றில் இருந்து பொருள்களை இறக்குவதில் ஏற்பட்ட தீர்க்கமற்ற நிலை காரணமாக அவை நாவற்குழிக் களஞ்சியத்திலேயே தரித்துநின்றன.

பொருள்களை எடுத்துவந்த லொறிகளின் உரிமையாளர்கள் யாழ்.படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் எம்.சமரசிங்க, யாழ்.அதிபர் கே.கணேஷ் ஆகியோருடன் பேச்சுக்கள் ந..த்தினர்.

இதனை அடுத்து அந்த லொறிகள் தமது வர்த்தக நிலையங்களில் வைத்து பொருள்களை இறக்க அனுமதி வழங்கப்பட்டது. அதனை அடுத்து நேற்று மாலை 6 மணியிலிருந்து இரவு 9 மணி வரை நகரை வந்தடைந்தன.

அந்த லொறிகள் இன்று காலை பொருள்களை இறக்கிவிட்டு காலை 9 மணிக்கு நாவற்குழி களஞ்சியத்துக்குச் சென்று சோதனையின் பின் உள்ளூர் உற்பத்திப் பொருள்களை ஏற்றிக் கொண்டு கொழும்பு புறப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (அ-1)

# தனியார் லொறிகளில் உள்ளூர் உற்பத்திகளை ஏ-9 ஊடாக ஏற்றிச் செல்வதற்கான வழிமுறைகள்

## யாழ்.அரச அதிபர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 19

கொழும்பில் இருந்து வரும் தனியார் வர்த்தகர்களின் லொறிகளில் உள்ளூர் உற்பத்திப் பொருள்களை எடுத்துச் செல்ல வேண்டுமாயின் பயணத்தை மேற்கொள்வதற்கு 48 மணி நேரத்துக்கு முன்பாக செயலகத்தில் பதிவுகளை மேற்கொள்ள வேண்டும்.

யாழ். அரச அதிபர் கே.கணேஷ் மேற்கண்ட அறிவுறுத்தலை விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணத்துக்கு பொருள்களை ஏற்றிவரும் தனியார் மற்றும் இராணுவ லொறிகளின் போக்குவரத்து ஏற்பாடுகள் தொடர்பாக உடனடியாக நடைமுறைக்கு வரும் தீர்மானங்கள் குறித்து அரச அதிபர் தெரிவித்த விவரங்கள் வருமாறு:-

* கொழும்பில் இருந்து பொருள்களை ஏற்றிவரும் தனியார் லொறிகள் நாவற்குழி உணவுக் களஞ்சியத்தில் பதிவுகளைச் செய்யவேண்டும். அதன் பின்னர் நேரடியாக தமது வர்த்தகநிறுவனங்களுக்குச் சென்று பொருள்களை இறக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

* அரசு சார்பாக இராணுவத்தினரால் எடுத்துவரப்படும் லொறிகள், தற்போதுள்ள நடைமுறைப்படி நாவற்குழி உணவுக் களஞ்சியத்திலேயே பொருள்களை இறக்க வேண்டும்.

* யாழ். உற்பத்திப் பொருள்களை லொறிகளில் எடுத்து செல்லும் தனியார் எடுத்துச் செல்லவிருக்கும் பொருள், அளவு, கொழும்பில் பொறுப்பேற்பவர் பெயர் ஆகிய விவரங்களுடன் ஆங்கிலமொழியில் எழுதப்பட்ட கடிதத்தை நான்கு பிரதிகளுடன் யாழ்.செயலக கணக்காளரிடம் ஒப்படைக்க வேண்டும். பயணத்தை மேற்கொள்வதற்கு ஆகக்குறைந்தது 48 மணி நேரத்துக்கு முன் இந்தப்பதிவை மேற்கொள்ளவேண்டும்.

* நாவற்குழி களஞ்சியத்தில் வைத்து இராணுவத்தினரின் மேற்பார்வையில் உள்ளூர் பொருள்களை ஏற்றிக்கொண்டு வாகனங்கள் இராணுவ தொடரணியில் செல்ல வேண்டும். வழமையான ஏற்றியிறக்கும் செலவுக்குரிய பணத்தை நாவற்குழியிலேயே செலுத்த வேண்டும். (அ-1)

# இறுதிப்போட்டியில் பாகிஸ்தான்

நேட்டிங்ஹாம், ஜூன் 19

ஐ.சி.சி. இரண்டாவது ருவன்ரி -20 உலகக் கிண்ணப் போட்டிகளில் நேற்று நடந்த ஆட்டத்தில் தென்னாபிரிக்காவை வீழ்த்தி இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது பாகிஸ்தான்.

முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 20 ஓவர்களில் 4விக்கெட்டுக்களை இழந்து 149 ஓட்டங்களைப் பெற்றது. இதில் அதிரடி வீரர் அப்ரிடி 51 ஓட்டங்களையும் மலிக் 34 ஓட்டங்களையும் பெற்றனர்.

தென்னாபிரிக்கா சார்பில் பந்து வீசிய ஸ்ரேய்ன், பர்னல், வான்டேர்மேர்வ், டுமினி ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கட்டை வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 20 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 142 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 7 ஓட்டங்களால் தோல் வியைத் தழுவியது. இதில் கலிஸ்64 ஓட்டங்களையும், டுமினி ஆட்டமிழக்காது44 ஓட்டங்களையும் பெற்றனர்.

பாகிஸ்தன் சார்பில் பந்து வீசிய அப்ரிடி 4 ஓவர்கள் பந்து வீசி 16 ஓட்டங்களை மாத்திம் கொடுத்து 2விக்கெட்டுகளைச் சாய்த்தார். (06)

## இடம்பெயர்ந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று நடைபெற்ற செயலணியின் விசேட கூட்டத்தில் தலைமையுரை ஆற்றுகையில் அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

வன்னியில் இருந்து வந்த மக்கள் வவுனியா நலன்புரி நிலையத்தில் தங்கவைக்கப்பட்டு பராமரிக்கப்படுகின்றனர். உலகத்திலேயே அகதிகளைப் பராமரிக்கும் பணியில் முன்மாதிரியான வசதிகளை நாம் செய்து கொடுத்துள் ளோம்.

கிழக்கில் இடம்பெயர்ந்த மக்கள் மீளவும் குடியமர்த்தப்பட்டது போன்று வன்னியில் இருந்து இடம்பெயர்ந்த மக்களும் விரைவில் மீள்குடியமர்த் தப்படுவர்.

வடக்கில் மக்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண நடமாடும் சேவைகள் நடத்தப்படும். இதில் சகல திணைக்களங்களும் பங்கு பற்றும் -என்றார். (அ-1)

## வவுனியாவுக்குச் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று பாதுகாப்பு அமைச்சினால் உத்தி யோகபூர்வமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது எனத் தெரிவிக்கப்பட்டது.

சமீப காலமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் வவுனியாவுக்குச் செல்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, யாழ். மாநகரசபைத் தேர்தலில் போட்டியிடுவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்காக கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் இன்று யாழ்ப்பாணத்துக்குச் செல்கின்றனர். (சி)

## குடாநாட்டின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயலணியின் விசேட கூட்டம் நேற்றுக் காலை 10.30 முதல் பிற்பகல் 3 மணிவரை யாழ். நூலக கேட்போர் மண்டபத்தில் இடம்பெற்றது.

பஸில் ராஜபக்ஷ தலைமையில் நடை பெற்ற இந்த விசேட கூட்டத்தில் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ். அரச அதிபர் கே.கணேஸ் செயலணியின் செயலாளரும் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர், நாயகமுமாகிய எஸ்.பி. திவாரத்ன, வடக்கு மாகாண ஆளுநர் டிக்சன் சரத் சந்திர எவல, யாழ். படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் எம். சமரசிங்க மற்றும் மத்திய அமைச்சுக்களின் செயலாளர்கள், மாகாண அமைச்சுக்களின் செயலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

யாழ். மாவட்டத்தில் இயங்கும் சகல திணைக் களங்களின் தலைவர்களும் பிரதேச செயலர்களும் இக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

நீதித்துறை சார்பில் கலந்து கொண்ட யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி இ.த.விக்னராஜா கருத்துத் தெரிவிக்கை யில் -

தற்சமயம் யாழ்.சிங்கள மகா வித்தியாலயத்தில் இருந்து பயணிகள் இராணுவ வழித்துணையுடன் பலாலிக்கு அழைத்துச் செல்லும் நடைமுறை அமுலில் உள்ளது.

அதேபோன்று - தற்காலிக ஏற்பாடாக, யாழ்ப்பாணத்தில் இருந்து பொதுமக்கள் பஸ்களில் ஏற்றப்பட்டு இராணுவ வழித்துணையுடன் அந்த வாகனங்கள் ஏ-9 பாதையூடாக அழைத்துச் செல்லப்பட்டு, வவுனியாவில் சேர்க்கப்பட வேண்டும் என யோசனை தெரிவித்தார்.

அதற்குப் பதிலளித்த ஜனாதிபதி செயலணியின் தலைவர், தற்காலிக ஏற்பாடாக இந்த நடைமுறையை கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படும் என்று பதில் அளித்தார்.

### ரயில் சேவை புனரமைப்பு

வடக்குக்கான ரயில் சேவையை நடத்துவது தொடர்பாக தெரிவித்த பஸில் ராஜபக்ஷ, -

வவுனியாவில் இருந்து ரயில் பாதைகள், ரயில் நிலையங்களை புனரமைக்கும் அதே நேரம், காங்கேசன்துறையில் இருந்து பளை வரையான ரயில் பாதைகள், ரயில் நிலையங்கள் புனரமைக்கப்படவிருக்கின்றன. முதல் கட்டமாக நாவற்குழி பாலப்புனரமைப்பு வேலைகள் உடன் ஆரம்பிக்கப்படும் - என்று கூறினார்.

பருத்தித்துறை, ஊர்காவற்றுறை, சாவகச்சேரி, மல்லாகம் ஆகிய நீதிமன்றங்களுக்கான புதிய கட்டடங்கள் அமைக்கும் திட்டங்களும் விரைந்து பூர்த்தி செய்யப்படும் என்று கூறினார்.

### கடற்றொழில் கட்டுப்பாடுகள்

கடல் வலயச் சட்டத்தால் கடற்றொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் சுதந்திரமாக தொழில் செய்ய வசதியாக கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட வேண்டும் என்ற கோரிக்கை கடற்றொழில் திணைகளத்தால் முன்வைக்கப்பட்டது.

கடற்படை, பாதுகாப்புத்தரப்பு ஆகியோருடன் நாளை (இன்று) கலந்துரையாடல் ஒன்றை இது தொடர்பாக நடத்தவிருக்கின்றேன். அந்தக் கலந்துரையாடலின் பின்னர் கடற்றொழில் கட்டுப்பாடுகளை தளர்த்த நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்தார் பஸில்.

### பொலிஸ் நிலையங்களில்....

யாழ்.பொலிஸ் தலைமைக் காரியாலயக் கட்டடம், சிறைச்சாலை கட்டடம் ஆகியவற்றை அமைக்கும் திட்டங்களும்- 180 நாள் திட்டங்களில் உள்வாங்கப்பட்டு நிதி உதவி வழங்க அனுமதி வழங்கப்பட்டது.

யாழ்.மாவட்ட பொலிஸ் நிலையங்க ளில் தமிழில் முறைப்பாடு செய்ய உதவியாக சிங்கள மொழியில் தேர்ச்சி பெற்ற இளைப்பாறிய தமிழ் பேசும் அரச ஊழியர்களை பணிக்கு சேர்த்துக் கொள் வதென முடிவு செய்யப்பட்டது.

### வலி-வடக்கு விவகாரம்

வலி- வடக்கு மக்களை மீள்குடிய மர்த்துவது தொடர்பாக விசேட கலந்துரையாடல் ஒன்றை தனியாக நடத்தப் போவதாக பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

குடாநாட்டில் மின்விநியோகத்தை 24 மணி நேரமும் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 180 நாள் வேலைத் திட்டம் முடிவடையும் போது முழுமையாக 24 மணி நேர மின் விநியோகம் வழங்கப்படும் என்று மின்சார சபையின் அதிகாரிகள் மாநாட்டில் தெரிவித்தனர்.

### கல்வித்துறைப் பணிகள்

யாழ்.மாவட்டத்தில் பாடசாலைகளில் ஆரம்பிக்கப்பட்ட பல கட்டட வேலைகள் அரைகுறையில் உள்ளன. அவற்றைப் பூர்த்திசெய்ய 200 மில்லியன் ரூபா தேவை என்று வடக்கு மாகாண கல்வியமைச்சின் செயலாளர் எஸ்.இளங்கோ பிரஸ்தாபித்தார்.

இந்தப் பணியைப் பூர்த்தி செய்ய 100 மில்லியன் ரூபாவை வழங்க அனுமதி வழங்கப்பட்டது.

யாழ்.பல்கலைக்கழக அபிவிருத்திப் பணிகளுக்கும் நிதிஉதவி தேவை என பேராசிரியர் என். சண்முகலிங்கன் கூறினார்.

அந்தப் பணிக்கு தேவையான நிதியை வழங்கவும் அனுமதி வழங்கப்பட்டது.

மொத்தத்தில் கல்வி, உயர்கல்வி, சுகாதாரம், தொழில்நுட்பக் கல்லூரி, வீதிப்புனரமைப்பு, குடிதண்ணீர் விநியோகம், கைத்தொழில், வீடமைப்பு உட்பட பல்வேறு துறைகளின் தேவைகளை திணைக்களத் தலைவர்கள் தெரிவித்தனர்.

அத்திட்டங்களை 180 நாள்களுக்குள் நடைமுறைப்படுத்தத் தேவையான நிதி ஒதுக்கீடுகளை செயலணி மேற் கொள்ளும் என்று அதன் தலைவர் பஸில் ராஜபக்ஷ உறுதி அளித்தார்.

பிற்பகல் 3.30 மணியளவில் கூட்டம் முடிவடைந்த பின்னர் துரையப்பா விளையாட்டு அரங்கில் வைத்து, ஐந்து புதிய பஸ்களை போக்குவரத்துச் சபையினரிடம் ஜனாதிபதியின் செயலணியின் தலைவர் பஸில் ராஜபக்ஷ கையளித்தார்.

பலாலி சென்ற அவர் நேற்று மாலையே கொழும்பு திரும்பினார். (அ-1)

## புலிகளின் தலைவர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கதிர்காமத்தம்பி அறிவழகன் குறிப்பிட்டிருக்கின்றார்.

தலைவர் பிரபாகரன் நலமாக இருக்கின்றார் என்ற ஒரு செய்தியை மே 22 ஆம் திகதி தாங்கள் வெளியிட வேண்டி நேர்ந்தமையை அவர் இந்த அறிக்கையில் விவரித்துள்ளார்.

### முரண்பட்ட பல தகவல்கள் வெளிவந்துகொண்டிருந்தன

''கடந்த மே மாதத்தின் நடுப் பகுதியில் - 15 (வெள்ளிக்கிழமை) முதல் 19 ஆம் திகதி (செவ்வாய்க்கிழமை) வரையான காலப் பகுதியில் வன்னி - முள்ளிவாய்க்கால் களப் பிரதேசத்திலிருந்து முரண்பட்ட பல தகவல்கள் வெளிவந்தபடி இருந்தன.

''சீரான தகவல் பரிமாற்ற வசதிகள் இருக்காமையாலும், அங்கிருந்து வெளியேறிய எமது புலனாய்வுப் பேராளிகள் பாதுகாப்பான இடங்களுக்குச் சென்று சேர முடியாமல் இருந்தமையாலும், அவர்களால் அனுப்பப்பட்ட பல தகவல்கள் சிதைவடைந்த நிலையிலேயே வெளியில் கிடைத்திருந்தன.

அதனால் தலைவர் நலமாக இருக்கிறார் எனக் கருதி அவ்வாறான ஒரு செய்தியை வெளியிட மே மாதம் 22 ஆம் திகதி தீர்மானித்தோம்'' - என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை - தலைவரது பாதுகாப்பான இருப்பு மற்றும் நகர்வுகள் தொடர்பாக - இறுதி வரை அவருடன் கூட இருந்த தளபதிகளால் பல தகவல்கள் வழங்கப்பட்டு வந்தன. இவற்றின் அடிப்படையிலேயே - இயக்கத்தின் அனைத்துலக உறவுத்துறையின் இயக்குநர் செல்வராஜா பத்மநாதன் கே.பியும் - ஆரம்பத்தில் - இருவேறு முரண்பட்ட செய்திகளைத் தரும் சூழ்நிலைக்குள் தள்ளப்பட்டிருந்தார் என்பதையும் எம்மால் உணர முடிகின்றது - என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

### மே 22 ஆம் திகதி செய்தியால் ஏற்பட்ட குழப்பத்துக்கு மன்னிப்புக் கோரல்

தலைவர் நலமாக இருக்கின்றார் என்ற செய்தியை மே 22ஆம் திகதி வெளியிட்டுக் குழப்பத்தை ஏற்படுத்தியமைக்காகத் தமது புலனாய்வுத்துறை வருத்தத்தைத் தெரிவிப்பதோடு தமிழ் மக்களிடம் மன்னிப்பையும் கோருகின்றது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தலைவர் பிரபாகரன் கைது செய்யப்பட்டார் எனவும், சரணடைந்தார் எனவும், விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் கொல்லப்பட்டார் எனவும், அவர் தற்கொலை செய்து கொண்டார் எனவும் செய்திகள் வெளியாகிய வண்ணம் உள்ளன என்று குறிப்பிட்டுள்ள அவர், பிரபாகரன் சரணடையவோ அல்லது கைது செய்யப்படவோ இல்லை என்பதையும் அவர் படையினருடன் போரிட்டே வீரகாவியம் ஆனார் என்பதையும் திடமாக உறுதிப்படுத்துகிறோம் என்றும் அந்த அறிக்கையில் கூறியுள்ளார்.

எமது மக்களின் அரசியல் அபிலாசைகளை வென்றெடுக்கும் எமது இறுதி இலட்சியத்தை நோக்கிய எமது போராட்டத்தின் அடுத்த படிநிலையாக - தற்போது உருவாக்கப்படவுள்ள 'நாடு கடந்த தமிழீழ அரசு' அமைவதற்கு நாம் எல்லோரும் சேர்ந்து பணியாற்றுவதே எம் முன்னால் உள்ள கடமையாகும் - என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

## நாடு கடந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடு கடந்த தமிழீழ அரசு என்ற பெயரில் வெளியிடப்பட்டிருக்கும் அறிவிப்பு ஆச்சரியம் அளிக்கின்றது.

இந்த நடவடிக்கையுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எந்தவொரு விதத்திலும் தொடர்புபட மாட்டாது.

எவரும் எந்தவொரு நிகழ்ச்சி நிரலையும் எம்மீது திணிக்க முடியாது.

எமது இனத்தின் மிக நெருக்கடியான கால கட்டத்தில் பொறுப்புணர்வோடு செயற்படும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எமது மக்களுக்கான அரசியல் தீர்வு ஒன்றை வென்றெடுக்கும் ஒரே குறிக்கோளையே கொண்டிருக்கின்றது.

இலங்கைத் தீவு ஒரே நாடு என்ற அரசியல் வரையறைக்குள் தமிழினத்தின் அரசியல் அபிலாஷைகளை அங்கீகரிக்கும் அரசியல்தீர்வு ஒன்றை எட்டும் வரை எமது அரசியல் போராட்டம் தொடரும்.

இந்த அரசியல் போராட்டத்தில் பொது வழிமுறைகளையும் அணுகுமுறைகளையும் நாமே தீர்மானிப்போம் - என்று கூறப்பட்டுள்ளது. (அ)

PERSONAL CLASS
364 Stanly Rd. Jaffna
(Near DMI)
எழுத, பேச, வாசிக்க சிங்களம்
By. K.கார்த்திக்கேயன் (பயிற்றப்பட்ட ஆசிரியர்)
ஆரம்பம் - 20.06.2009 (நாளை)
Sat, sun 9-10/10-11 a.m.
G.A.Q / B.A- part-I Revision and Paper ENGLISH

தேவை
வலுவிழந்தோருக்கான மூன்று சக்கர மோட்டார் சைக்கிள் உடன் தேவை.
தொடர்பு: 060 221 2688அல்லது 021 226 3352

தேசிய சேமிப்பு வங்கி முகாமைத்துவ பயிலுநர் தேர்வுப் போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்
சனி, ஞாயிறு 3.00 - 5.00 நடைபெறுகின்றன.
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
யாழ். போதனா வைத்தியசாலைக்கு முன்பாக

மானிப்பாயில்..........
100% Practical Education!!
பல புதிய விடயங்களுடன்
21/06/2009 அன்று 3.30 PM புதிய பிரிவு ஆரம்பம் !!
Diploma in Mobile Phone Repairing
(சகல வகையான கைத்தொலை பேசிகளையும் மிகக் குறுகிய காலத்தில் நீங்களே திருத்துவதற்கான தொழில்சார் கற்கை நெறி)
மேலதிக விபரங்களுக்கு :-
UNI
ICT Education Trainers
Manipay T.P:- 060 - 221 - 6433
(மானிப்பாய் பிரதேச சபைக்கு நேர் எதிரே)

A/L - 2011
தமிழ்
A.K.[illegible] B.A. (Hons)
* தென்னிந்திய தமிழ் இலக்கிய வரலாறு.
* திருக்குறள் (அங்கவியல்)
* இலக்கணம்.
* செய்யுட்கோவை
ஆரம்பம் - 2009.06.20 (8மணிக்கு)
[illegible]
பிரிவுகளுக்கு அனுமதிகள் மட்டுப்படுத்தப் பட்டுள்ளது.
N.E.C

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19.06.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org